'வெழி'மணியம்

Follow Us

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 64 பிலவ வருடம், ஆவணி மாதம் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (12.09.2021) ஹிஜ்ரி - 1443, ஸபர் பிறை - 4 0115886187 பக்கங்கள் 12 + 8

'தமிழன்' மின்னிதழ் பதிப்பு e-Paper




இந்த வரியம் தை மாசம் ஒண்டா ஒரு பட்டியில நிண்ட மாடுகள்,

எந்தக்காரணமும் இல்லாமல் தனித்தனியா எப்பிடி குறுக்கால இடறுப்பட்டு போனது எண்டு ஆருக்கும் தெரியாது!

தை மாசம் நடந்த ஐ.நா. மனித உரிமை கூட்டத்தொடருக்கு தமிழ்த் தேசியக்கட்சிகள் எல்லாரும் சேர்ந்து ஒற்றுமையா கடிதம் அனுப்பினவை. அதிலையும் ரண்டு மூண்டுபேர் பிச்சுக்கொண்டு குறுக்கால ஓடப்பாத்தவை. இருந்தாலும் எல்லா மாடுகளும் வடக்க போக , தாங்கள் தெற்கால எதிர்வழமா ஓடினால் சனம் பிடிச்சு பனையில கட்டிவைச்சுப்போடும் எண்ட பயத்தில ஒண்டா நிண்டவை.

8 மாதத்துக்குள்ள நாட்டில நிகழ்ந்த எந்த அரசியல் மாற்றம் அல்லது எந்த பூகோள அரசியல் மாற்றம் இந்த உடைவை தமிழ்த்தேசிய கட்சிகளிடையே ஏற்படுத்தியது என்பது தெரியவில்லை.

தமிழர்களின் நீதிக்கான போராட்டத்தில் இறுதியாக எஞ்சியிருக்கும் இந்த ஐ.நா. மனித உரிமை கூட்டத்தில் கூட;

இந்த கட்சிகளால் ஒன்றாக நிற்கமுடியவில்லை எண்டால்;

உண்ணாண தெரியாமல்தான் கேக்குறம்.

என்ன மண்ணாங்கட்டிக்கு அரசியல் செய்யுறியள்?

எதுக்கு உங்களுக்கு வெள்ளை வேட்டியும் வெள்ளைச்சேட்டும்?

கொஞ்ச நாளுக்கு முதல்தான் பத்துக்கட்சிகள் சேர்ந்து ஒரு கூட்டம் போட்டவை. அதில என்னத்தை கதைச்சனியள்?

இல்லை தெரியாமல்தான் கேக்குறம். இந்த ஐ.நா. மனித உரிமை கூட்டத்தொடரில் ஒண்டா நிக்கவேணும் எண்ட விடயத்தை பேசினியளா? இல்லையா?

பேசவில்லை எண்டால் என்னத்துக்கு கூட்டம் போட்டனியள்?
ஆரைப்பேக்காட்டுறியள்?
எத்தினை நாளைக்கு எங்களை ஏமாத்தப்போறியள்?

சுமந்திரனைக் கேட்டால் சம்மந்தர் சொல்லித்தான் ஐ.நா.வுக்கு கடுதாசி எழுதின்னான். அது மற்ற எல்லாருக்கும் தெரியும் எண்டுறார்.

கூட்டமைப்பின்ர மற்ற ஆக்களைக்கேட்டால் அவைக்கு அதில உடன்பாடு இல்லை எண்டுகினம்.

கூட்டமைப்பு எண்டால் என்ன?

தமிழரசுக்கட்சி மட்டுமா இல்லை ரெலோவும், புளொட்டும் அதில இருக்கினமோ?

போனகிழமை ஆளுக்கொண்டு கதைக்கினம்.

சிறிதரன் ஒரு கதை!
சிவஞானத்தார் அதுக்கொரு கதை!
சுமந்திரன் இன்னொரு கதை!
மாவை வேற கதை!
செல்வம் பிறிம்பா ஒரு கதை!
சித்தார்த்தன் கதையே இல்லை!சம்பந்தர் சத்தமே இல்லை!

கேட்டால் "கூட்டமைப்பு" எண்டுறாங்கள்!

ஊரில இருந்து வாற "பேப்பர்களும்" தங்களுக்கு ஏற்ற மாதிரி செய்திகள் போடுகினம்.

ஐ.நா. வுக்கு அறிக்கை அனுப்பின்னாங்கள் எண்டுறாங்கள். அனுப்பயில்லை எண்டுறாங்கள்.

அனுப்பவேண்டிய காலம் முடிஞ்சுது எண்டுறாங்கள். இந்தமுறை அனுப்பினாலும் அதை கருத்தில எடுக்காங்கள். ஏற்கனவே ஐ.நா. ஆணையாளரின் வாய்மொழிமூல அறிக்கை தயாரிச்சாச்சு எண்டுறாங்கள்.

இதில எது உண்மை? எது பொய்?

எல்லா கட்சியையும் சேர்ந்த வெள்ளைவேட்டிக்காறரை காதில பிடிச்சு இழுத்து வந்து

02

## நக்கல் நமசிவாயம்



ஊரடங்கு சட்டம் எண்டா என்னெண்டு விளங்கப் படுத்தி தனியா ஒரு வர்த்தமானி அடிக்கோணும் பாருங்கோ...





உள்ளே... சிறப்பு இணைப்பிதழ்






உள்ளே... பக்கம் 05






உள்ளே... பக்கம் 06







உள்ளே... பக்கம் 07


# தடுப்புக்காவலிலுள்ளோர் விரைவில் விடுதலை!

## பயங்கரவாத தடைச்சட்ட மீளாய்வு குழு விசேட ஆலோசனை



•நா. தினுஷா

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு பல வருடகாலம் தடுத்துவைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்கள் குறித்து ஆராய்ந்து அவர்களுக்கு தீர்வொன்றை வழங்குவது குறித்து ஆராயப்பட்டு வருகிறது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் சில சரத்துக்களை சீரமைப்பதற்காக தேசிய பாதுகாப்பு சபையினால் நியமிக்கப்பட்ட குழுவே இதனை ஆராய்ந்து வருகிறது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு வழக்கு தொடரப்படாமல் பல வருட காலங்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்கள் தொடர்பில் ஆராய்ந்து உரிய சிபாரிசுகளை செய்ய எதிர்பார்ப்பதாக அந்தக் குழுவின் தலைவர், முன்னாள் பிரதம நீதியரசர் அசோக்க டி சில்வா தெரிவித்தார்.

02

# தபாலகங்கள் ஏழு நாட்களுக்கு திறப்பு

SRI LANKA POST

இலங்கையிலுள்ள அனைத்து தபால் நிலையங்கள் மற்றும் உப தபால் நிலையங்களும் திறக்கப்பட்டுள்ளதாக தபால் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்தார்.

ஓய்வூதியம் உள்ளிட்ட கொடுப்பனவுகளை வழங்குவதற்காகவே தபால் நிலையங்கள் திறக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

அதன்படி, கடந்த வெள்ளிக்கிழமை முதல் ஏழு நாட்களுக்கு தபால் நிலையங்கள் திறந்திருக்கும்.

அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்களின் செப்டெம்பர் மாத ஓய்வூதியங்கள் முதலில் செலுத்தப்படும்.

அத்துடன் முதியோர் உதவித்தொகை, விவசாயிகளின் ஓய்வூதியம் மற்றும் மீனவர் ஓய்வூதியத்தை செலுத்துவதற்காகவும், தபால் மற்றும் உப தபால் நிலையங்கள் திறந்திருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# எம்.பி. பதவியை நாளை துறக்கும் நிவாட் கப்ரால்

## கெட்டகொட மீண்டும் நாடாளுமன்றம் செல்வார்



இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக பதவியேற்கும் வகையில் நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் நாளை தமது பதவியை இராஜினாமா செய்யவுள்ளார்.

அதற்கான இராஜினாமா கடிதத்தை நாடாளுமன்ற செயலாளர் நாயகத்திடம் கப்ரால் கையளிக்கவுள்ளார்.

அஜித் நிவாட் கப்ராலின் இராஜினாமாவால் வெற்றிடமாகும் இடத்திற்கு, பெசிலுக்காக பதவி துறந்த...

02

# நவம்பருக்கு முன் பாடசாலைகள் திறப்பு; ஏற்பாடுகளை செய்ய ஜனாதிபதி பணிப்பு

•நா. தினுஷா

நாடு பூராகவுமுள்ள சகல பாடசாலைகளையும் திறப்பதற்கான வழிகாட்டல் அறிக்கையைத் தயாரித்து, நாளைய தினம் (13) கையளிக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சுகாதார அமைச்சுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

விசேட வைத்திய நிபுணர்கள், தொழில்நுட்ப மதிப்பீட்டு நடவடிக்கைகளுடன் தொடர்புடைய பிரதிநிதிகள் மற்றும் கல்வியமைச்சை சேர்ந்தவர்களின் ஒத்துழைப்புடன் பாடசாலைகளை மீளத் திறப்பதற்கான ஆலோசனை அறிக்கை தயாரிக்கப்பட்டு, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தனவால் ஜனாதிபதியிடம்...

02





தொடர்ச்சியான ஊரடங்கினால் புறக்கோட்டையில் அன்றாட வியாபாரிகளின் வர்த்தக நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளன.
(படப்பிடிப்பு : சமன் அபேசிறிவர்தன)

# பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு 2.5 பில்லியன் டொலர் கடன்

## அமெரிக்காவிடமிருந்து பெறத் தீர்மானம்

அமெரிக்காவிடமிருந்து 2.5 பில்லியன் டொலர் கடனை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்காக பெற்றுக்கொள்ள வலுசக்தி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கான யோசனை மற்றும் விருப்புத் தெரிவித்த 23 நிறுவனங்களில் எம்.எஸ்.கோன்செப்ட் க்ளோபல் என்ற நிறுவனம் கடன் பெற்றுக்கொள்ளும் செயற்பாடுகள் தொடர்பில் இலங்கைக்கான ஆலோசகராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தை தெரிவுசெய்யும்போது கடன்தொகை, நிவாரண காலம், மீள் செலுத்தும் காலம், வட்டி வீதம் ஆகிய விடயங்கள் தொடர்பில் பரிசீலனை செய்ததாக வலுசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, இந்தக் கடன்தொகைக்கான வருடாந்த வட்டியானது, நூற்றுக்கு மூன்று வீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நிவாரண காலம் இரண்டு வருடமென்பதுடன், மொத்த கடன்தொகையை 12 வருடங்களில் மீள் செலுத்த வேண்டும்.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைக்கமைய, இந்தக் கடன் தொகையை பெற்றுக்கொள்வதற்காக எதிர்காலத்தில் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடவும்...

02

# பாகிஸ்தானிலிருந்து இலங்கைக்கு 155 கிலோ ஹெரோயின் கடத்தல்

## கிழக்கு பிராந்திய ஈரான் இலங்கை கடற்பகுதியில் 7 பேர் கைது

•கனகராசா சரவணன்

பாகிஸ்தானிலிருந்து இலங்கைக்கு படகில் 155 கிலோகிராம் ஹரோயின் போதைப்பொருளைக் கடத்தி வந்த பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த 7 பேரை மட்டக்களப்பு கிழக்கு பிராந்திய ஈரான் இலங்கை கடற்பகுதியில் வைத்து நேற்று சனிக்கிழமை அதிகாலை (11) மட்டக்களப்பு மாவட்ட புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஏ.ரி.ஏ.ரி.தாரக சுபேத கடற்படையுடன் இணைந்து கைதுசெய்துள்ளதாகவும், இவர்களுடன் 4

02

# இலங்கையின் பொருளாதார சரிவு இந்தியாவை பாதிக்கும் - சிதம்பரம்



இலங்கை போன்ற நாடுகளில் பொருளாதாரம் சரிந்தால், இந்தியாவிலும் பாதிப்பு ஏற்படும், என, இந்திய முன்னாள் மத்திய அமைச்சர் சிதம்பரம் தெரிவித்தார். காரைக்குடியில் நேற்று அவர் தெரிவித்ததாவது,

சிவகங்கைக்கு வேளாண் மற்றும் சட்டக் கல்லூரி அறிவித்ததை வரவேற்கிறேன். கண்டனூரில் கதர் கிராம தொழில் மையத்தை சீரமைத்துத் தருவதால் வேலைவாய்ப்பு கிடைக்கும். அழகப்பா பல்கலைக்கு துணைவேந்தர் நியமிக்க வேண்டும்.

02

# தடுப்பூசி இட்டால் உயிரிழப்பு வாய்ப்பு 11 மடங்கு குறைவு

## அமெரிக்க ஆய்வில் தகவல்

கொவிட் தடுப்பூசியை முழுமையாக செலுத்திக் கொண்டவர்கள் கோவிட் தொற்றால் உயிரிழக்க 11 மடங்கு வாய்ப்பு குறைவு என, அமெரிக்க மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

கொவிட் டெல்ட்டா வைரஸால் பல நாடுகளில் கொவிட் தொற்று அதிகரித்து வருகிறது. அமெரிக்கா, பிரிட்டன், ஜேர்மனி, சுவீடன், பிரான்ஸ், தென் கொரியா ஆகிய நாடுகளிலும் அதுவே எதிரொலிக்கிறது என மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். கொவிட் பரவலைக் கட்டுப்படுத்த தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகிறது.

02

# நுகர்வோருக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் செயற்பட வேண்டாம்

## வர்த்தகர்களுக்கு ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவிப்பு

நுகர்வோருக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் செயற்படும் வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமென்று ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் கிங்ஸ்லி ரத்நாயக்க தெரிவித்தார்.

அரிசி ஆலை உரிமையாளர்கள், அரிசி வர்த்தகர்கள் மற்றும் அரிசி தட்டுப்பாடு தொடர்பில் நிலவும் வதந்திகள் தொடர்பில் தெளிவுபடுத்தும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அரிசி, மா, சீனி உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்கள் தொடர்பில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பொதுப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் அவசரகால விதிமுறைகளுக்குட்பட்ட வர்த்தமானி அறிவித்தலொன்றை கடந்த ஓகஸ்ட் 30ஆம் திகதி வெளியிட்டிருந்தார்.

மக்களைப் பாதுகாக்கும் பொருட்டே, ஜனாதிபதியினால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. அன்றாட வாழ்க்கை முறையை வழமைக்குக் கொண்டுவரத் தேவையான அத்தியாவசிய பொருட்களை விநியோகித்தல், அது தொடர்பான ஒருங்கிணைப்புகளை மேற்கொள்வதோடு, அவற்றை விரிவான கண்காணிப்புக்குட்படுத்தும் நோக்கிலேயே, அத்தியாவசியச் சேவைகள் ஆணையாளர் நாயகம் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவசரகால விதிமுறைகள் தொடர்பான சட்டமூலம் நடாடாளுமன்றத்தில் 81 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளர். கொவிட் - 19 நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவருவதில், அரசாங்கம் பாரிய சவாலை எதிர்நோக்கி வருகின்றது. அதற்காக, 500 பில்லியன் ரூபாவுக்கும் அதிக செலவை சந்தித்து வருகிறோம்.

அதற்குத் தேவையான தீர்மானங்களை எடுக்கும்போது, எந்தத் தரப்பினருக்கும் பக்கச்சார்பாக நடந்துகொள்ள, ஜனாதிபதி தயாராக இல்லை.

விவசாயிகள், வர்த்தகரைப் போன்றே,




நுகர்வோரையும் பாதுகாக்கும் நியாயமான முறைமையொன்றையே அரசாங்கம் எதிர்பார்த்திருந்தது. இது தொடர்பில், அரிசி ஆலை உரிமையாளர்களுடனும், ஜனாதிபதி விரிவாகக் கலந்துரையாடியிருந்தார். இதன்போது, இணக்கப்பாடுகளும் எட்டப்பட்டன. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும், விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர்களும் கூட, வர்த்தகர்களுடன் இது தொடர்பில் கலந்துரையாடியிருந்தனர்.

பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அதிகபட்ச நியாயத்தைப் பெற்றுக்கொடுப்பதற்காகவே அத்தியாவசியச் சேவைகள் ஆணையாளர் நாயகம் நியமிக்கப்பட்டார். இதன்படி, சம்பா அரிசி ஒரு கிலோ கிராம் 103 ரூபா, நாட்டரிசி ஒரு கிலோ கிராம் 98 ரூபா, கீரி சம்பா ஒரு கிலோ கிராம் 125 ரூபா, பச்சரிசி ஒரு கிலோ கிராம் 95 ரூபா என்ற அடிப்படையில் கட்டுப்பாட்டு விலைகள் நியமிக்கப்பட்டு, அவை வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டன.

நாடு எதிர்நோக்கியிருந்த சிக்கலை ஏற்றுக்கொண்ட வர்த்தகர்கள் அதன் பின்னர், அரசாங்கத்தை சிரமத்துக்குள்ளாக்கப் போவதில்லை என்றும் இணைந்து பணியாற்றுவதாகவும், வெளிப்படையாக அறிவித்திருந்தார். இருப்பினும், அரசாங்கத்துடன் அவர்கள் ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாட்டை, துரதிர்ஷ்டவசமாக மீறியுள்ளனர்.

அதேவேளை, பாரியளவில் அரிசி ஆலைகளை நடத்திவரும் அரிசி ஆலை உரிமையாளர்களின் நாளாந்த உற்பத்திகள் மற்றும் விநியோகங்களும், 50 சதவீதத்துக்கும் குறைந்தளவில் வீழ்ச்சி ஏற்படுத்தப்பட்டன. கொரோனா தொற்றுப் பரவலுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கும் நுகர்வோருக்கு இந்த நிலைமையையும் தாங்கிக்கொள்ள முடியாதுள்ளமையையும் அவர்களுக்கு அநியாயம் இழைக்கப்பட்டுள்ளமையையும், அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

அத்தியாவசியச் சேவைகள் ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளின் போது, கடந்த 8ஆம் திகதி மாத்திரம், பாரியளவில் நடத்தப்படும் அரிசி ஆலைக் களஞ்சியசாலைகளிலிருந்து அரசாங்கத்தின் கட்டுப்பாட்டு விலையின் கீழ் 807,375 கிலோ கிராம் அரிசி கைப்பற்றப்பட்டு, சதொச கூட்டுறவு விற்பனை நிலையத்திடம் ஒப்படைக்கப்பட்டது. பாரியளவில் நெல் களஞ்சியசாலைகளை நடத்தும் உரிமையாளர்கள் ஒன்றிணைந்து, அரசி மாஃபியாவில் ஈடுபடுகின்றனர் என்று குற்றஞ்சாட்டிய நபர்கள், தற்போது அவர்களைப் பாதுகாப்பதற்காக முன்வந்திருக்கிறார்கள்.

இந்த அனைத்துச் செயற்பாடுகளின் பின்னால் காணப்படும் அரசியலை, உங்களால் இலகுவில் புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கும். எவ்வாறெனினும், பாதுகாப்பான நாட்டை உருவாக்குவதற்காக மக்கள் வழங்கிய ஆணை மற்றும் நம்பிக்கை போன்றவற்றைப் பாதுகாத்து, மக்களின் நலனுக்காக, ஜனாதிபதிக்கு இருக்கும் அதிகாரங்களின் பிரகாரம் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. மக்கள் மயப்பட்ட பொருளாதாரம், சுபிட்சமான நாட்டைக் கட்டியெழுப்புவதே, ஜனாதிபதியின் நிலைப்பாடாகும் என்றார்.

# அமரர் ரட்ணசாமியின் இறுதிக்கிரியைகள் நோர்வூட்டில் இடம்பெற்றது



தொழிலாளர் தேசிய சங்கத்தின் சிரேஷ்ட உப தலைவர் அமரர் பி.கே.ரட்ணசாமியின் பூதவுடல் நேற்று நோர்வூட் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் இடம்பெற்ற அன்னாரின் பிரேத பரிசோதனைக்குப் பின்னர் பூதவுடல் சுகாதார முறைப்படி நோர்வூட் மயானத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு தகனம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதி தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் உதயகுமார் உள்ளிட்ட பலர் கிளங்கன் வைத்தியசாலைக்கு வருகை தந்திருந்தனர்.

மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரான சோ.ஸ்ரீதரன், தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதி பொதுச்செயலாளர் கல்யாணகுமார் உட்பட சங்கத்தின் முக்கியஸ்தர்கள் அமரர் பி.கே.ரட்ணசாமியின் உறவினர்களிடம் தமது அனுதாபத்தை இதன்போது தெரிவித்தனர்.

## தடுப்பூசி...

இந்நிலையில், அமெரிக்க நோய்த் தடுப்பு நிலைய இயக்குநர் ரொச்சல்லா வெலன்க்சி தெரிவித்துள்ளதாவது:

தொடர்ச்சியாக ஆய்வு மேற்கொண்டதில், கொவிட் தடுப்பூசிகள் சிறப்பாக வேலைசெய்வது தெரியவந்துள்ளது. கொவிட் தடுப்பூசியை முழுமையாக செலுத்திக் கொண்டவர்கள் தொற்றால் இறப்பதற்கு 11 மடங்கு வாய்ப்பு குறைவு. அதேபோல் தடுப்பூசி செலுத்திக் கொள்ளாதவர்களுடன் ஒப்பிடுகையில் செலுத்திக் கொண்டவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதற்கு 10 மடங்கு வாய்ப்பு குறைவு என்று அவர் தெரிவித்தார்.

## இலங்கையின்...

கொரோனா காலத்தில், ஒட்சிசன் பற்றாக்குறையால் இறப்பு இல்லை என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் சில நாட்கள் மட்டுமே பற்றாக்குறை தெரிந்தது. வடமாநிலங்களில் அதிகளவில் பற்றாக்குறை இருந்தது. இலங்கை உள்ளிட்ட நாடுகளில் பொருளாதாரம் சரிந்தால், இந்திய பொருளாதாரமும் பாதிக்கும்.

உள்ளாட்சித் தேர்தலில் தி.மு.க., - காங்., கூட்டணிக்கு வெற்றி வாய்ப்புள்ளது. மத்தியில் ஆட்சி மாறினால்தான் பெற்றோல், டீசல் விலை குறையும். இந்தியாவின் தேசிய பாதுகாப்பிற்கு இலங்கையால் அச்சுறுத்தல் இல்லை என்று அவர் தெரிவித்தார்.

## தடுப்புக்காவலிலுள்ளோர்...

நாட்டிலுள்ள சிறைச்சாலைகளில் இவ்வாறான சுமார் 400 பேர் வரை தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளோருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் குறித்தான ஆவணங்களை நாளை திங்கட்கிழமை சமர்ப்பிக்குமாறு சட்டமா அதிபர் திணைக்களத்திடம் கோரியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். புலிகள் இயக்கத்தின் காலத்தில் நடந்த தாக்குதல்கள், உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்கள் தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேகநபர்களே இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அல்லது இவர்களின் உறவினர்களை நேரடியாக அழைத்து விபரங்களை கேட்கவும் மேற்படி குழு ஆராய்ந்து வருகிறது.இதன்படி நிபந்தனைகளின் அடிப்படையில் இவர்களை விடுதலைசெய்ய ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் அறியமுடிகின்றது.

தற்போது வெளிவிவகார அமைச்சின் அறையொன்றில் இயங்கிவரும் இக்குழுவில் முன்னாள் சொலிசிட்டர் ஜெனரல் ஜனாதிபதி சட்டத்தரணி சுஹத கம்லத், மேல்நீதிமன்ற முன்னாள் நீதிபதி ஏ.ஆர்.ஹெய்யந்துடுவ ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

## பெற்றோலிய...

தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் அமைச்சுக்கு கிடைத்த யோசனை தொடர்பில் அமைச்சரவைக்கு அறிவித்துள்ளதாக வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

## எம்.பி.பதவியை...

ஜயந்த கெட்டகொட நியமிக்கப்படவுள்ளார்.

யோஷித ராஜபக்ஷ இதனை ஏற்பதாக இருந்தது. ஆனால், எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் அவர் வடமேல் மாகாண முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடவுள்ளதால் இதனை ஏற்கவில்லை என அறியமுடிந்தது.

## பாகிஸ்தானில்...

தினங்களில் கரையை வந்தடைவார்கள் எனவும் பொலிஸ் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மாவட்ட புலனாய்வுப்பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஏ.ரி.ஏ.ரி தாரக சுபேதவுக்கு கிடைத்த தகவல் ஒன்றிற்கமைய, பொலிஸ் மா அதிபரின் ஆலோசனையில் கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் கமல் சில்வாவின் வழிகாட்டலில், மட்டக்களப்பு மாவட்ட உதவி பொலிஸ் மா அதிபர் ஜ.என்.கருணாரட்ன மற்றும் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத் மாசிங்க ஆகியோரின் மேற்பார்வையில் இந்த விசேட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மட்டு. மாவட்ட புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஏ.ரி.ஏ.ரி.தாரக சுபேத தலைமையிலான புலனாய்வுப் பிரிவினரான ஜெயசேன, சப் இன்பெஸ்டர் சுகத் பண்டார, சப் இன்ஸ்பெக்டர் ஆலோக பண்டார , எச்.பி.ஏ.எஸ். உதயகுமார ஆர்.புருசோத்தமன், ரொபேட் ரூபன், ஆகியோர் கடற்படையுடன், இணைந்து இலங்கை ஈரான் கடற்பரப்பில் இரவு -பகலாக ஹெரோயின் போதைப்பொருள் கடத்தல்காரர்களை கண்காணித்து வந்தனர்.

இந்நிலையில் குறித்த படகு மட்டக்களப்பு கிழக்கு பிராந்திய இலங்கை ஈரான் கடலில் வைத்து மடக்கிபிடித்தபோது படகிலிருந்து 155 கிலோகிராம் ஹெரோயின் போதைப்பொருளை மீட்டதுடன், பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த 7 பேரை கைதுசெய்தனர். இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களை கடலிலிருந்து கொழும்பு கடற்படை முகாமிற்கு அழைத்துவர நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும், 4 தினங்களில் கரையை வந்தடைவார்கள் என எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த 3 ஆம் திகதி பாகிஸ்தானில் இருந்து இலங்கைக்கு படகு ஒன்றில் 301 கிலோ கிராம் போதைப்பொருளுடன் இலங்கை இந்திய கடற்பரப்பில் வைத்து 4 பாகிஸ்தானியர்கள் உட்பட 7 பேரை இதே மட்டு. மாவட்ட புலனாய்வு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஏ.ரி.ஏ.ரி. தாரக சுபேத கடற்படையுடன் இணைந்து கைதுசெய்து கொழும்பு கடற்படைமுகாமிற்கு கொண்டுவந்தமை குறிப்பிடத்தக்கது.

## நவம்பருக்கு...

கையளிக்கப்படவுள்ளது.

இந்த திட்டத்துக்கமைய, நவம்பர் மாதத்துக்கு முன்னர் பாடசாலைகளை மீளத் திறப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை (10) இடம்பெற்ற கொரோனா கட்டுப்பாட்டு ஜனாதிபதி செயலணி கூட்டத்தில் பாடசாலைகளை திறப்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்கள் கல்வி கற்கும் கிராமப் பாடசாலைகள், முதல்நிலை பாடசாலைகளை திறப்பதற்கான வாய்ப்புள்ளதாக அமைச்சர்களான பந்துல குணவர்தன மற்றும் டலஸ் அழகப்பெரும ஆகியோர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளனர். இதற்கு மாகாணங்களுக்கான ஆளுநர்களும் விருப்பம் தெரிவித்துள்ளதாக கொரோனா கட்டுப்பட்டு ஜனாதிபதி செயலணி கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதல்நிலை பாடசாலை மாணவர்களுக்கு சூம் தொழில்நுட்பத்தினூடாக கல்வி கற்பிப்பதால் பல்வேறு பிரச்சினைகள் உருவாகியுள்ளதாக வைத்தியர்கள் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை, 12 தொடக்கம் 18 வயதுக்கிடைப்பட்ட சிறுவர்களுக்கான தடுப்பூசிகளை பெற்றுக்கொடுப்பதை விரைவுபடுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி இதன்போது ஆலோசனை வழங்கியுள்ளார். இந்த வயது எல்லைக்குட்பட்ட 2 மில்லியன் சிறார்கள் இருப்பதாக இந்த கலந்துரையாடலின்போது அறிவிக்கப்பட்டுள்ளது. கல்வி பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை முடிவுகளை வெளியிடுவது தொடர்பிலும் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது. நடைமுறை பரிசோதனைகள் எதுவும் இதுவரையில் முன்னெடுக்கப்படாமையினால் பரீட்சை முடிவுகளை வெளியிடுவதில் காலதாமதம் ஏற்படுமென பரீட்சைகள் திணைக்களம் தனது நிலைப்பாட்டை வெளியிட்டுள்ளது. நடைமுறை பரிசோதனைகள் இல்லாமல் பரீட்சை முடிவுகளை விரைவாக வெளியிடுவது தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. எது எவ்வாறாயினும் நாடுபூராகவுமுள்ள சகல முன் பள்ளிகளையும் விரைவாக ஆரம்பிக்க வேண்டுமென அமைச்சர் டலஸ் அழகப்பெரும இதன்போது சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வெடிமணியம் தொடர்ச்சி...

*ஒரு மேடையில் ஒண்டா இருத்திப்போட்டு நாக்கை புடுங்குறமாதிரி கேள்வி கேட்கவேணும்.*

*"எந்தக்கொம்பனாலும் தமிழரசுக்கட்சியை அழிக்கேலாது" எண்டுறார் சி.வி.கே. சிவஞானத்தார்.*

*தமிழரசுக்கட்சி "சேடம்" இழுத்துக்கொண்டிருப்பது அவருக்கு தெரியுமா? தெரியாதா?*

*இல்லை சனத்தை பேக்காட்டுகிறாரா?*

*சுமந்திரன் தன்ரபாட்டுக்கு "தான்தோன்றித்தனமாக" செயற்படுகிறார் எண்டு புறுபுறுக்கும் மாவையும், சிறிதரனும் தமிழரசுக்கட்சிக் கூட்டங்களில் அதுபற்றி வாயே திறப்பதில்லை. கேட்டால் கட்சிக்குள்ள ஆயிரம் இருக்கும். ஆனால், கட்சியை உடைக்கேலாது எண்டுகினம்.*

*இஞ்சால செல்வத்தார் இடைக்கிடை முனகுவார்.அவ்வளவுதான்.*

*சித்தார்த்தன் அதுகூட இல்லை.*

*பேரளவில்தான் கூட்டமைப்பில் புளொட் இருக்கிறது.வாயையும் மூடி கையையும் கட்டிக்கொண்டு எது நடந்தாலும் அதுக்கு தலையாட்டிவிட்டு சித்தார்த்தன் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பளத்தையும், வசதிகளையும் அனுபவிச்சுக்கொண்டு இருக்கிறார். அவ்வளவுதான் அவற்றை வேலை!*

*"சம்பந்தன் முதுமை காரணமாக உடலளவிலும் மனதளவிலும் இயங்கு நிலையில் இல்லை. கூட்டமைப்பின் தலைமைத்துவ பண்பை அவர் இழந்து கனகாலம். போன் அடிச்சுக்கூட அவரோட கதைக்கேலாது" எண்டு வெளிப்படையா குற்றம் சாட்டுறார் சிறிதரன்.*

*ஆனால், அதுக்கு நேர் எதிராக சுமந்திரன் சம்பந்தரைப் பற்றி கூறுகிறார்.*

*எது உண்மை?*

*சம்பந்தர் முதுமை காரணமாக முற்றுமுழுதாக இயங்கு நிலையில் இல்லை என்பதுதான் உண்மை.*

*இப்போது மறைமுகமாக சம்பந்தர் சார்பான பல முடிவுகளை சுமந்திரன் எடுக்கிறார் என்பதே கூட்டமைப்பின் மற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களின் மறைமுகமான குற்றச்சாட்டு.*

*ஆனால், அதை மறுக்கிறார் சுமந்திரன்.*

*இந்த வெட்டுக்குத்தின் உச்சக்கட்டமாகவே ஐ.நா. மனித உரிமை கூட்டத்தொடருக்கு சுமந்திரன் எழுதின கடிதத்தை சம்பந்தன் தனியா கையெழுத்துப்போட்டு அனுப்பினார் எண்டுகினம்.*

*புளொட்டும், ரெலோவும், சிறிதரனும் அம்பாறை மாவட்ட தமிழரசுக்கட்சி தேசியப்பட்டியல் உறுப்பினர் கலையரசனும் தனியா இஞ்சால விக்கினேஸ்வரன் கூட்டணியோட சேர்ந்து கடுதாசி அனுப்பியிருக்கினம்.*

*தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிக்காரர் [கஜேந்திரகுமார்] ஒரு சத்தம் சலாரும் இல்லை.*

*அவர் தனியா "பிளைட்" பிடிச்சு ஐ.நா. ஆணையரின் வீட்டுக்குப்போய் கடுதாசி குடுப்பார் எண்டு நினைக்கிறன்.*

*அவை ஒரு "வித்தியாசமான ஆக்கள்".சரியெண்டாலும் மற்ற எல்லாரும் செய்யுறதை செய்யாயினம்.*

*புதுசா ஏதும் " இடக்குமுடக்கா" சிந்திச்சு கடைசியில வாயால மட்டும் வடை சுடும் குறூப் அது. சனம் இப்ப பெரிசா அவையின்ர கதையை கணக்கில எடுப்பதில்லை.அவையா திருந்துவினம். இல்லை சனம் திருத்தும்.*

*சரி!*

*இப்ப கடைசியில ஐ.நா.வுக்கு கடுதாசி குடுத்தாச்சோ எண்டு கேட்டால்;*

*அம்மாவாணை தெரியாது.*

*அனுப்புறதால ஏதும் மாற்றம் வருமோ எண்டு கேட்டால்;*

*சத்தியமா அதுக்கும் பதில் தெரியாது.*

*கூட்டமைப்பு இருக்குதோ ? உடைஞ்சுபோட்டுதோ எண்டு கேட்டால்;*

*புளொட்டும், ரெலோவும் செத்தாலும் கூட்டமைப்பை விட்டு வெளியேறாது எண்டு அரசியல் ஆய்வாளர்கள் அடிச்சு சொல்லுகினம்.*

*சம்பந்தன் இல்லாத காலத்தில் கூட்டமைப்பின் தலைவராக வர சிறிதரனுக்கும், செல்வத்தாருக்கும் இடையில போட்டி வரும் எண்டுகினம்!*

*மாவை இல்லாத காலத்தில் சுமந்திரன் தமிழரசுக்கட்சியின் தலைவர் பதவிக்காய் காத்திருக்கிறார் எண்டும் சொல்லுகினம்.*

*ஆக;*

*"கூட்டமைப்புக்குள் குழப்பம்" எண்டு பேப்பரில செய்தி வந்ததே...அது பொய்யா? எண்டு கேப்பியள்.*

*அந்த "குட்டையை" குழப்பி பேப்பரில செய்தி போடவைச்சதே சுமந்திரன் தான் எண்டுகினம் விவரம் அறிஞ்ச ஆக்கள்.*

*காலம்தான் பதில் சொல்லவேணும்.*

*பொறுத்திருந்து பாப்பம்.*

★★★

*நாட்டில அவசரகாலச்சட்டம் நடைமுறைக்கு வந்துவிட்டது.*

*இந்தச்சட்டம் பெரும்பான்மையான வாக்குகளால் சிறிலங்கா நாடாளுமன்றத்தில் ஆளும் தரப்பால் நிறைவேற்றப்பட்டுள்ளது.*

*இந்தச்சட்டம் எப்பிடி இருக்கும்? என்ன செய்யும்? எண்டதை வரும் காலத்தில் நாட்டில் நடக்கும் "சம்பவங்களை" வைத்து அறிந்துகொள்ளலாம்.*

*பயங்கரவாத தடைச்சட்டம் எப்படி சிறுபான்மை மக்களாகிய எங்களை அடக்கி ஒடுக்கி குரல்வளையை நெரிக்கிறதோ;*

*அதைப்போல இந்த அவசரகாலதடைச்சட்டமும் நிச்சயம் சிங்கள மக்களின் கழுத்தை நெரிக்கும்.*

*அப்ப தெரியும் நாங்கள் பட்ட துன்பமும் வலியும்!*

*சுமந்திரனைத்தவிர தமிழ்தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாரும் இந்த "அவசரகால சட்டத்தைப்பற்றி" பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை என்பதுதான் உண்மை.*

*அவசரகாலசட்டத்தை அமுலுக்கு கொண்டுவந்த கையோடு அதைப்பயன்படுத்தி பல "நல்ல" காரியங்களை செய்வதாக ஆளும் தரப்பு தன் நாடகத்தை ஆரம்பித்துவிட்டது.*

*அதன் ஒரு அங்கமே "சீனி, அரிசி" பதுக்கலை கண்டுபிடித்து அதை சனத்துக்கு விநியோகிக்கும் நாடகம்.*

*உது என்ன பிரமாதம்?*

*இன்னும் இன்னும் இருக்கு!*

*ஆக;*

*நாங்கள் உந்த "அவசரகால சட்டத்தைப்பாத்து" சிரிச்சுப்போட்டு கடந்துசெல்வதே வழமை.*

*ஏனெண்டால் நாங்கள் அனுபவிச்ச, அனுபவிக்கிற "பயங்கரவாத தடைச்சட்டத்தோடு" ஒப்பிடும் போது "அவசரகாலச்சட்டம்" எங்களுக்கு தம்மாத்துண்டு விடயம் ராசா!*

# ஐக்கிய நாடுகள் சபையின் 76ஆவது பொது சபைக் கூட்டத்தொடரில் ஜனாதிபதி பங்கேற்பு

## பொருளாதாரம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் சர்வதேச தலைவர்களுடன் கலந்துரையாடவும் தீர்மானம்



நியூயோர்க்கில் எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் 76ஆவது பொதுச் சபைக் கூட்டத் தொடரில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கலந்துகொள்ளவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டத்தொடரில் ஜனாதிபதி கலந்துகொள்ளும் முதல் சந்தர்ப்பம் இதுவென்பதுடன், நாடு கடந்து, சர்வதேச கூட்டத்தொடரொன்றில் பங்கேற்கும் முதல் சந்தர்ப்பமும் இதுவாகும்.

இதுதொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

இந்த விஜயத்தின்போது பொருளாதாரம், கல்வி, விவசாயம் உள்ளிட்ட பல துறைகள் தொடர்பில் பல நாடுகளின் அரச தலைவர்களுடன் ஜனாதிபதி இரு தரப்பு கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளார்.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே ஆகியோரும் ஜனாதிபதியின் இந்த விஜயத்தில் கலந்துகொள்ளவுள்ளனர்.

தன்னுடைய தனிப்பட்ட கொள்கை மற்றும் நாட்டின் தற்போதைய நிலைமையைக் கருத்திற்கொண்டு, குறைந்தளவு தொகையினருடன் இந்த விஜயத்தை மேற்கொள்ள ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

அதன்படி, அண்மைக்கால வரலாற்றில்




ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத் தொடரொன்றில் உள்நாட்டிலிருந்து குறைந்தளவு தொகையினர் கலந்து கொள்வது இதுவென்பதுடன், அயோமா ராஜபக்ஷ தனது சொந்தச் செலவில் இந்த விஜயத்தில் கலந்துகொள்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மிகுதி தொகை ஏனைய பிரதேசங்களுக்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

# நாடுபூராகவும் 95 வீதம் டெல்ட்டா தொற்று பரவல்

## ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலை ஆய்வில் உறுதி



நாட்டில் தற்போதுள்ள டெல்ட்டா தொற்று நிலைமை தொடர்பில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தினால் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் நாடுபூராகவும் 95 சதவீதம் டெல்ட்டா தொற்று பரவலடைந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் நோய் எதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவப் பிரிவின் பணிப்பாளர் பேராசிரியர் சந்திம ஜீவந்தர தெரிவித்தார்.

இதுதொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீ ஜயவர்தபுர பல்கலைக் கழகத்தினால் கடந்த வாரம் விசேட பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. தனிப்பட்ட முயற்சியில் நாடுபூராகவுமிருந்து பி.சி.ஆர். பரிசோதனை மாதிரிகளை வரவழைத்து இந்த பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. நாட்டில் டெல்ட்டா தொற்று தற்போது எந்த நிலையிலுள்ளது, பரவல் நிலை எந்த தன்மையிலுள்ளது என்பதை அறிந்துகொள்வதற்காக இந்த விசேட பரிசோதனைகளை முன்னெடுத்திருந்தோம்.

இதற்காக சகல மாகாணங்களிலிருந்தும் இந்த மாதிரிகள் கொண்டுவரப்பட்டன. இந்த பரிசோதனைக்காக 881 மாதிரிகளை பெற்றுக்கொண்டிருந்தோம். இந்தப் பரிசோதனை அறிக்கை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் சுகாதார அமைச்சின் செயலாளர் ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்த மாதிரிகளினூடாக முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையின் அடிப்படையில் நாடுபூராகவும் 95 - 95.8 வீதம் டெல்ட்டா தொற்று பரவலடைந்துள்ளதை மதிப்பிடக் கூடியதாக இருந்தது. ஒவ்வொரு பிரதேசங்களிலும் 95 வீதம் டெல்ட்டா தொற்றின் தாக்கத்தை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

அதனடிப்படையில் பார்க்கும் போது மேல் மாகணத்தில் 100 வீதம் டெல்ட்டா தொற்றின் தாக்கத்தை அவதானிக்கக்கூடியதாக இருந்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

# பொதுமுடக்கம் காரணமாக கல்முனையில் கொரோனா நோயாளர் எண்ணிக்கையில் வீழ்ச்சி

## பணிப்பாளர் சுகுணன் சுட்டிக்காட்டு

(நூருல் ஹுதா உமர், பாறூக் சிஹான், எம்.என்.எம். அப்ராஸ்)

கொரோனா ஆரம்பித்த சீனா, இலங்கையில் அதிகமான கொரோனா நோயாளர்கள் அடையாளப்படுத்தப்பட்ட பேலியகொட, கிழக்கில் அக்கரைப்பற்று என கொரோனா நோயாளர்கள் அதிகமாக மீன்சந்தைகளிலேயே அடையாளம் காணப்பட்டனர். அந்த வரிசையில் மாளிகைக்காடு பிரதேச மீன் சந்தையும் இணைந்து கொள்ளக் கூடாது என்பதே எங்களின் எதிர்பார்ப்பாகும். மாதக்கணக்கில் பாவித்த முகக்கவசங்களுடன் சிலரும், முகக்கவசங்களை ஒழுங்கான முறையில் அணியாமல் சிலரும் சந்தைகளில் உலாவித் திரிவது பாரிய ஆபத்தை பொதுமக்களுக்கு உண்டாக்கும் - என கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜி.சுகுணன் கவலை தெரிவித்தார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு கருத்து வெளி யிட்ட அவர், இதுவரை கல்முனை பிராந்தியத்தில் 6,800 பேரளவில் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அதில் 157 பேர் இறந்துள்ளனர். கடந்த 24 மணித்தியாலங்களில் 50இற்கும் குறைவானவர்களே தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், ஒரு இறப்பு மட்டுமே பதிவாகியுள்ளது. இதன்மூலம் பிராந்தியத்தில் பாதுகாப் பான தெளிந்த நிலை உள்ளதை அவதானிக்க முடிகிறது. இந்த நிலை பொதுமுடக்கம் அமுலில் உள்ளதனால் கிடைத்த பெறுபேறாகவே நோக்க முடிகிறது. பொதுமுடக்கம் தளர்த்தப்பட்டு மக்கள் இயல்புநிலைக்குத் திரும்பினால் அதனால் உண்டாகும் பாதிப்பின் எதிரொலியை காணலாம்.

கல்முனை பிராந்தியத்தில் 500 கொரோனா தொற்றாளர்கள் அளவில் இப்போது சிகிச்சைபெற்று வருகின்றனர். அதில் 100 பேர் வைத்தியசாலையிலும், இன்னும் 100 பேர் இடைத்தங்கல் நிலையங்களிலும் மேலும் 300 பேரளவில் வீடுகளிலும் தங்கி சிகிச்சைபெற்று வருகின்றனர். கல்முனை பிராந்தியத்தில் தடுப்பூசி ஏற்ற தகுதியானோரில் 95 சதவீதமானோர் முதலாவது தடுப்பூசிகளை பெற்றுக்கொண்டுள்ளதுடன், ஏனையோருக்கான தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளும் நடமாடும் முறையில் இடம்பெற்று வருகின்றன. இரண்டாம் தடுப்பூசியை இதுவரை 75 சதவீதமானோர் பெற்றுக்கொண்டுள்ளதுடன், ஏனையோருக்கான தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளும் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

கடந்த ஒன்றரை வருடங்களாக



மூடப்பட்டிருக்கும்பாடசாலைகளை சரியான பொறிமுறையொன்றை நிறுவி மீளத் திறக்க அரச உயர்மட்டத்தில் பல்வேறு கலந்தாலோசனைகள் இடம்பெற்று வருகின்றன. நாட்டின் பொருளாதாரம், கல்வி, வர்த்தகம், தொழிற்சாலைகள் என்பன விரைவாக சாதாரண நிலைக்குத் திரும்ப தங்களின் முழு அர்ப்பணிப்பை சுகாதாரத்துறை வழங்கிவருகிறது. ஏனைய துறை யினரும் பொதுமக்களும் தமது முழு ஒத்துழைப்பை வழங்கினால் நாம் கொரோனா தொற்றை விரைவில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும் - என்றார்.

# ஒரு இலட்சத்து 20 ஆயிரம் 'ஸ்புட்னிக் வி' தடுப்பூசிகள் அடுத்தவாரம் நாட்டுக்கு

Sputnik V

THE FIRST REGISTERED COVID-19 VACCINE

PROVEN HUMAN ADENOVIRAL VECTOR TECHNOLOGY

நாட்டுக்கு அடுத்தவாரம் ஒருதொகை 'ஸ்புட்னிக் வி" தடுப்பூசிகள் கிடைக்கவிருப்பதாக இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவிததுள்ளார்.

அதற்கமைய ஒரு இலட்சத்து 20 ஆயிரம் தடுப்பூசிகள் கிடைக்கவுள்ளதாக அவர் மேலும் குறிப்படடுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

ரஷ்யாவின் தயாரிப்பான இந்த 'ஸ்புட்னிக் வி' தடுப்பூசியின் ஒருத்தொகை கண்டி மாவட்ட மக்களுக்கான இரண்டாம் கட்ட தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மிகுதி தொகை ஏனைய பிரதேசங்களுக்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



**உடப்பு ஸ்ரீ வீரபத்திரகாளியம்மன் ஆலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (10ஆம் திகதி) காலைநேர பூஜையில் விநாயகர் சதுர்த்தி அனுஷ்டிக்கப்பட்டது. இதன்போது பக்தர்கள் சமூக இடைவெளியைப் பேணி பூஜையில் கலந்துகொண்டனர். (உடப்பு நிருபர்)**

# பொன்.சிவபாலனின் 23ஆவது நினைவுதினம் அனுஷ்டிப்பு



(ஐ.சிவசாந்தன்)

யாழ் மாநகர சபையின் மறைந்த முன்னாள் முதல்வர் சட்டத்தரணி பொன்.சிவபாலனின் 23 ஆவது நினைவுதினம் நேற்று யாழ் சித்தன் கேணியில் அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது யாழ். சித்தன் கேணியில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் அவரது உருவப் படத்திற்கு சுடரேற்றி, மலர்மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் வலிகாமம் மேற்கு பிரதேச சபை தவிசாளர் த.நடனேந்திரன், யாழ். மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர்களான தங்க முகுந்தன், எஸ்.அரவிந்தன் ஆகியோர் உட்பட குடும்ப உறுப்பினர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

1998ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 11ஆம் திகதி யாழ். மாநகர சபையில், மாநகர போக்குவரத்து சம்பந்தமாக உயர் அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது, கூரைமேல் வைக்கப்பட்ட கிளைமோர் தாக்குதலில் பொன். சிவபாலன் கொல்லப்பட்டார்.

அவருடன் யாழ். நகர இராணுவத் தளபதி பிரிகேடியர் சுசந்த மெண்டிஸ், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சந்திரா பெர்னாண்டோ, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சந்திரமோகன், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சரத் பெர்னாண்டோ, யாழ். தலைமையக பொலிஸ் அதிகாரி மோகனதாஸ் ஆகியோர் அடங்கிய12 பேர் கொல்லப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

# மணல் உரிமம் வழங்குவதற்கான புதிய வழிமுறை

## சுற்றுச்சூழல் அமைச்சர் - கிழக்கு ஆளுநருக்கிடையில் பேச்சுவார்த்தை



(கிண்ணியா நிருபர்)

கடத்தல்காரர்களிடமிருந்து மணல் கடத்தலை கட்டுப்படுத்த மற்றும் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவுவதற்கு ஒரு நிலையான திட்டம் தயாரிக்கப்படும் - என்று கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் மற்றும் சக அரசாங்க அதிகாரிகளுடனான விசேட சந்திப்பில் சுற்றுச்சூழல் அமைச்சர் மஹிந்த அமரவீர நேற்று முன்தினம் காலை கூறினார்.

கிழக்கு மாகாணத்தில் தற்போதுள்ள சுற்றுச்சூழல் பிரச்சினைகளைத் தீர்க்க தேவையான முடிவுகளை எடுக்க ஆளுநரின் தலைமையில் ZOOM தொழில்நுட்பம் மூலம் குறித்த கூட்டம் நடைபெற்றது.

தற்போது நாட்டிற்கு தேவையான மணலின் அளவு பொலன்னறுவை மாவட்டத்துக்கு கிழக்கு மாகாணத்திலிருந்து பெறப்படுவதாக அமைச்சர் சுட்டிக்காட்டியதுடன், பல முக்கிய சுற்றுச்சூழல் பிரச்சினைகள் எழுந்திருப்பதை அமைச்சர் ஒப்புக்கொண்டார்.

திருகோணமலை மாவட்டத்தில் 300 அனுமதிப் பத்திரங்கள் மணல் எடுக்க வழங்கப்பட்ட போதிலும், கடந்த ஆண்டு மட்டும் நாட்டில் 1300 உரிமங்கள் வழங்கப்பட்டதாக அமைச்சர் கூறினார்.

எதிர்காலத்தில் இந்த நிலையை மாற்றத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அமைச்சர் சுட்டிக்காட்டினார். உரிமம் வழங்குவதில் முறைகேடுகள் நடைபெறுவதற்கு முக்கிய காரணம், ஊழல் நிறைந்த அதிகாரிகள் தனது மாகாணத்திற்கு வருவதாக கிழக்கு மாகாண ஆளுநர் குறிப்பிட்டார். அரசியல் அதிகாரிகளின் குறிப்பிட்ட ஆதரவுடன் இத்தகைய அதிகாரிகள் அரசாங்கத்திற்கும் நாட்டிற்கும் அவப்பெயரை ஏற்படுத்துகின்றனர் என்றும் ஆளுநர் கூறினார்.

ஒரு குழு மூலம் உரிமம் வழங்குவதே இதற்கான சிறந்த தீர்வு என்றார்.

அண்மையில் கிழக்கு மாகாணத்தில் சட்டவிரோத மணல் அகழ்வு குறித்து நாடாளுமன்றத்தில் குற்றஞ்சாட்டிய நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனின் கருத்து தொடர்பில் இது எந்த வெளிநாட்டிற்கும் மணல் அனுப்பப்படவில்லை என்று அமைச்சர் வலியுறுத்தினார். நாட்டின் தேவைகளைப் பூர்த்திசெய்ய போதுமான மணல் இருப்பு இல்லை என்று அவர் மேலும் கூறினார்.

கூட்டத்தில் சுற்றுச்சூழல் திணைக்களம், வனத்துறை, புவியியல் மற்றும் சுரங்கப் பணியகம் மற்றும் கிழக்கு மாகாணத்தின் பிரதம செயலாளர், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர்கள் மற்றும் ஆளுநரின் செயலாளர் ஆகியோரை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# மீன் கழிவுகளைப் பயன்படுத்தி சேதனப் பசளை Fish Tonic உற்பத்திசெய்யும் வேலைத்திட்டம்

## மாதம்பை மீன் சந்தையில் முன்னெடுப்பு



(இரத்தினபுரி நிருபர்)

இலங்கையில் மிகப் பெரிய மீன் மொத்த விற்பனை நிலையமாகக் கருதப்படும் கொடக்கவெல மாதம்பை மீன் விற்பனை நிலையத்தின் மீன் கழிவுகள் மற்றும் கழிவுநீரைப் பயன்படுத்தி சேதனப் பசளை மீன் திராவகம் (Fish Tonic) உற்பத்திசெய்யும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கொடக்கவெல பிரதேச சபை தலைவர் பிரியந்த பண்டார தெரிவித்தார்.

கொடக்கவெல மாதம்பை மீன் விற்பனை நிலையத்தின் மீன் கழிவுகள் மற்றும் கழிவுநீரைப் பயன்படுத்தி சேதனப் பயிர்செய்கைக்காக மீன் திராவக சேதனப் பசளை திரவம் (Fish Tonic) உற்பத்திசெய்யும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது குறித்து நேற்று முன்தினம் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவவின் ஆலோசனைக்கமைய சப்ரகமுவ மாகாணத்தில் அனைத்து உள்ளூராட்சி சபைகளையும் மையமாகக்கொண்டு பயிர்ச் செய்கைக்காக சேதனப் பசளை மற்றும் சேதனப் பசளை திராவகம் உற்பத்திசெய்யும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனைக் கருத்திற்கொண்டே மேற்படி சேதனப் பசளை திராவகம் (Fish Tonic) உற்பத்திசெய்யும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அமைச்சரவை மூலம் 2021ஆம் ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி இரசாயன உரப் பாவனையை நிறுத்தியுள்ளது.

ஜனாதிபதியின் சௌபாக்கிய கொள்கை திட்டத்திற்கமைய சேதனப் பசளை உற்பத்திசெய்யும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

கொடக்கவெல மாதம்பையில் அமைந்துள்ள மீன் மொத்த மற்றும் சில்லறை விற்பனை நிலையங்களில் நாளாந்தம் அகற்றப்படும் கழிவுகள் 100 கிலோவாகும்.

மேற்படி கழிவுகளில் சீனி கலந்து சேதனப் பசளை திரவம் (Fish Tonic) உற்பத்திசெய்து விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளது.

அத்துடன் கொடக்கவெல, இறக்குவானை நகரங்களின் பொதுச் சந்தைகளில் நாளாந்தம் ஒதுக்கப்படும் கழிவுகளைக்கொண்டு சேதனப் பசளை தயாரிக்கப்பட்டு வருகின்றது.

ஒரு கிழமைக்கு 800 கிலோ சேதனப் பசளை தயாரிப்பதற்காக இவ்வாறு கழிவுகள் சேகரிக்கப்பட்டு வருவதாகவும் கொடக்கவெல பிரதேச சபை தலைவர் பிரியந்த பண்டார மேலும் தெரிவித்தார்.

தமிழன் THAMILAN WEEKLY
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 012 67 34 42.
தொலைபேசி : 015 200 900/ 015 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilanweekly@gmail.com/thamilaneditor@gmail.com

# உலகத்திற்கு முன்னுதாரணமான ஜப்பானின் அரசியல் மாற்றம்!

கொரோனா வைரஸ் பரவலில் அரசியல் செய்வதா முக்கியம் என்ற கேள்விக்கு பதில் கொடுத்திருக்கிறது ஜப்பான். கடந்த காலத்தில் கொள்ளை நோய்த்தொற்றை திறமையாகக் கையாளவில்லை என்கிற பரவலான விமர்சனங்களுக்கிடையே ஜப்பானியப் பிரதமர் யோஹிஷிடே சுகா, இந்த மாதக் கடைசியில் நடைபெறவுள்ள கட்சித் தலைமைக்கான போட்டியில் கலந்துகொள்ளப் போவதில்லை என்று அறிவித்திருக்கிறார். பிரதமராக ஓராண்டு காலம் மட்டுமே பதவி வகித்த சுகாவின் அறிவிப்பு ஜப்பானிய மக்களை ஆச்சரியப்படுத்துகிறோ இல்லையோ, சர்வதேச அளவில் பல நாடுகளை ஆச்சரியப்பட வைத்திருக்கிறது.

தான் போட்டியில் கலந்துகொள்ளாமல் இருப்பதற்கான காரணத்தை இச்செய்தி வெளியானவுடன் அவரது அலுவலகத்தை நோக்கிப் படையெடுத்த பத்திரிகையாளர்களிடம் அவர் தெரிவித்தார். “கொரோனா நோய்த்தொற்றைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் நிலையில், லிபரல் ஜனநாயகக் கட்சித் தலைமைக்கான தேர்தல் பிரசாரத்தில் எனது கவனத்தைத் திசைதிருப்ப விரும்பவில்லை'' என்பதுதான் அவர் கூறியிருக்கும் காரணம். பதவிப் போட்டியைவிட, பிரதமர் என்கிற முறையில் மக்களின் உயிரைக் காப்பாற்றுவதுதான் தனது முதல் கடமை என்று அவர் கருதுவாரேயானால், அது மெச்சத் தகுந்த முடிவு.

லிபரல் ஜனநாயகக் கட்சியும், அதன் கூட்டணிக் கட்சிகளும் ஜப்பான் நாடாளுமன்றமான ‘டயட்’ இல் பெரும்பான்மை பலம் பெற்றிருக்கின்றன. செப்டம்பர் 29 அன்று நடைபெறும் கட்சித் தலைமைக்கான தேர்தலில் வெற்றி பெறுபவர் யாராக இருந்தாலும் பிரதமராக முடியும் என்பதால், கடுமையான போட்டியை எதிர்பார்க்கலாம்.

ஜப்பானில் அதிக நாள் பிரதமராக இருந்த 65 வயது ஷின்ஸோ அபே, கடந்தாண்டு உடல்நிலை பாதிப்பு காரணமாக பதவி விலகியபோது, தனது நீண்ட நாள் நண்பரான 71 வயது யோஹிஷிடே சுகாவுக்கு ஆதரவளித்து அவரைப் பிரதமராக்கினார். 2012 முதல் அமைச்சரவைச் செயலாளராகவும், அபேயின் கொள்கைகளை நடைமுறைப்படுத்துபவராகவும், கட்சியின் முதன்மை செய்தித் தொடர்பாளராகவும் இருந்த சுகா பிரதமரானபோது, சுமுகமான ஆட்சி மாற்றம் நடைபெற்றது. பிரதமராகப் பதவியேற்ற சுகா, அபேயின் அமைச்சரவையை அப்படியே தக்கவைத்துக் கொண்டதுடன், முன்னாள் பிரதமரின் கொள்கைகளையும், இலக்குகளையும் கைவிடாமல் முன்னெடுத்துச் சென்றார். பொருளாதாரத்தை மீட்டெடுப்பதும், கொரோனா நோய்த்தொற்றை எதிர்கொள்வதும் அவரது மிகப்பெரிய சவால்களாக இருந்தன.

அபேயின் வலதுகரமாக மிகத் திறமையுடன் செயற்பட்ட சுகா, பிரதமர் நாற்காலியில் அமர்ந்தபோது, அவரால் அதேயளவிலான வெற்றியை ஈட்ட முடியவில்லை என்று கடந்த ஓராண்டு நிர்வாகம் உறுதிப்படுத்துகிறது. கொள்ளை நோய்த்தொற்றைக் கட்டுப்படுத்த முடியாமல் போனது, அவரது மக்கள் செல்வாக்கிற்கு மிகப் பெரிய சறுக்கல். தடுப்பூசி அனுமதி வழங்குவதில் ஏற்பட்ட தாமதத்தால் ஏனைய வல்லரசு நாடுகளைவிட மிகவும் தாமதமாகத்தான் ஜப்பானில் தடுப்பூசி செலுத்துவது தொடங்கப்பட்டது.

அண்மைக்காலமாக தடுப்பூசித் திட்டம் வேகமெடுத்திருக்கிறது என்றாலும்கூட, ஜப்பான் மக்கள்தொகையில் 32.8% பேருக்கு மட்டுமே இதுவரை தடுப்பூசி போடப்பட்டிருக்கிறது. பிரிட்டனில் 64.6% உம், அமெரிக்காவில் 52.8% உம் போடப்பட்டிருக்கும் நிலையில், தடுப்பூசித் திட்டம் விரைவுபடுத்தப்படாதது ஜப்பான் மக்கள் மத்தியில் அதிர்ச்சியையும், அச்சத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.

ஒலிம்பிக் போட்டியை வெற்றிகரமாக நடத்துவதன் மூலம் சரிந்து வரும் அரசியல் செல்வாக்கை தூக்கி நிறுத்திவிட முடியும் என்கிற பிரதமர் சுகாவின் எதிர்பார்ப்பும் நிறைவேறவில்லை. அனைவருக்கும் தடுப்பூசி போடப்படாத நிலையில், மிகப்பெரிய சர்வதேச விளையாட்டு நிகழ்வை டோக்கியோவில் நடத்துவதற்கு ஜப்பானியர்கள் மத்தியில் கடுமையான விமர்சனம் எழுந்தது. அதையும் மீறி ஒலிம்பிக் போட்டியை நடத்திய சுகா நிர்வாகம், வேறுவழியின்றி பார்வையாளர்களுக்கு அனுமதி வழங்காமல் ஒலிம்பிக் போட்டியை நடத்த வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டது. டோக்கியோவில் அதிகரித்து வரும் நோய்த்தொற்றுப் பரவல் நான்காவது முறையாக அவசரநிலையை அறிவிக்கும் நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியபோது, சுகா நிர்வாகத்துக்கு எதிராக மக்கள் ஆத்திரமடைந்தனர். அதன் பிரதிபலிப்பை உள்ளாட்சித் தேர்தலில் லிபரல் ஜனநாயகக் கட்சி தோல்வியை எதிர்கொண்டதிலிருந்து தெரிந்து கொள்ள முடிந்தது. அந்தக் கட்சியின் முன்னணி தலைவர்கள் பலர் சுகாவின் தலைமையின் மீது மறைமுகமாக அதிருப்தியை வெளிப்படுத்த முற்பட்ட நிலையில்தான், தலைவர் தேர்தலில் பங்குபெறுவதில்லை என்று சுகா அறிவித்திருக்கிறார்.

தலைவர் தேர்தலில் போட்டியிட இருவர் களமிறங்கத் தயாராகிவிட்டனர். ஜப்பானில் அரசியல் செல்வாக்குள்ள தலைவரான நிர்வாக சீர்திருத்த அமைச்சர் டாரோ கோனோ, தான் போட்டியிடப்போவதாக வெளிப்படையாகவே தெரிவித்து விட்டார். அவருக்கு முன்னதாகவே முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் ஃபுமியோ கிஷிடா தன்னை வேட்பாளராக அறிவித்துக் கொண்டதுடன், கொரோனா நோய்த்தொற்றை எதிர்கொள்வதற்கான திட்டத்தையும் முன்வைத்து ஆதரவு திரட்டத் தொடங்கியிருக்கிறார்.

ஷின்ஸோ அபேயின் எட்டாண்டு கால ஆட்சிக் காலத்துக்கு முன்னர், நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அடிக்கடி பிரதமர்கள் மாறிக்கொண்டிருந்த ஸ்திரமற்ற தலைமை, ஜப்பானில் மீண்டும் ஏற்படக்கூடுமென்று அரசியல் நோக்கர்கள் கருதுகிறார்கள். யார் வெற்றி பெற்றாலும் ஜப்பானின் வெளியுறவுக் கொள்கைகளில் பெரிய மாற்றம் ஏற்பட வாய்ப்பில்லை. ஆனால், ஜப்பானின் அரசியல் உலக நாடுகள் பலவற்றுக்கும் முன்னுதாரணமாக அமைந்துள்ளதைக் குறிப்பிட்டாக வேண்டும். ஆனால், கொரோனா நோய்த்தொற்று காலத்தில் ஆட்சி மாற்றம் ஏற்படுவதும், பலவீனமான தலைமை அமைவதும், எந்த நாடாக இருந்தாலும், வரவேற்புக்குரியதல்ல.

எப்படியிருப்பினும் தற்போதைய கொரோனா வைரஸ் பரவல் சூழ்நிலையில் ஆட்சியதிகாரங்களை கட்டிப்பிடித்துக் கொண்டிருக்காமல் அவற்றை விட்டு ஜனநாயகத்திற்கு இடமளித்திருக்கும் ஜப்பானிய அரசியல் பிரமுகர்களைப் பாராட்டவே வேண்டும்.

# ஜனாதிபதி அதிகாரங்களுக்கான பாரதூரமான நகர்வே அவசரகால நிலை

ஓகஸ்ட் 30 அன்று, இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ திடீரென ஒடுக்குமுறையான தேசிய அவசரகால நிலையை பிரகடனம் செய்தார். கொவிட்-19 தொற்றுநோய் காலத்தில் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை உறுதி செய்வதற்கும், சமூகத்தின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பொருட்கள் மற்றும் சேவைகளை பராமரிப்பதற்கும் இந்தப் புதிய நடவடிக்கைகள் அவசியம் என்று அவர் அறிவித்தார்.

உணவுப் பற்றாக்குறை, அரிசி மற்றும் சீனி போன்ற உணவு விலையில் பாரிய அதிகரிப்பு ஆகியவற்றைக் கையாள்வதற்கு இந்த அறிவிப்பு அவசியம் என்பதே உத்தியோகபூர்வ காரணமாக காட்டப்படுகின்றது. அரிசி விலை கிலோவுக்கு 250 ரூபா மற்றும் சீனி விலை 220 ரூபாவாக இரட்டிப்பாகியுள்ளது. அரச சார்பு ஊடகங்கள், பதுக்கிவைக்கப்பட்ட உணவுப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டமையும், ராஜபக்ஷ வலியுறுத்திய பிற நடவடிக்கைகளும் உணவுப் பொருட்களின் விலையை கட்டுப்படுத்தும் என்றும், பொருட்களின் முறையான விநியோகத்துக்கு உத்தரவாதம் அளிப்பதாகவும் கூறி உடனடியாகப் பாராட்டின.

எவ்வாறாயினும், புதிய அவசரகாலநிலை நடவடிக்கைகள், பதுக்கல் மற்றும் விலை உயர்வுகளை சமாளிக்க ஏற்கனவே இருக்கும் சட்டங்களை இலகுவாக விஞ்சிச் செல்கின்றன. ராஜபக்ஷவின் பிரகடனத்திற்கும், சமூகத்தின் வாழ்க்கைக்கு இன்றியமையாத சேவைகளை வழங்குவதற்கும் எந்தத் தொடர்பும் கிடையாது, மாறாக, அது இன்னும் கடுமையான ஜனாதிபதியின் அதிகாரங்களுக்கான பாரதூரமான நகர்வாகும்.

கொரோனா வைரஸ் தொற்றுநோயால் உருவாக்கப்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியின் சுமையை திணிப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளை எதிர்க்கின்ற தொழிலாளர் வர்க்கத்தின் மீதும், ஒடுக்கப்பட்ட மக்கள் மீதும் பாய்வதற்காக, சர்வதேச அளவில் முதலாளித்துவ வர்க்கங்களும், அவற்றின் ஆட்சிகளும் சர்வாதிகார வழிமுறைகளை விரைவாக கையில் எடுக்கின்றன.

புதிய நடவடிக்கை, அவசரகால (அத்தியாவசிய உணவு வழங்கல்) விதிகள் என்று அழைக்கப்பட்டாலும், தற்போதுள்ள அவசரகால அதிகாரத்தின் கீழ், ஜனாதிபதியானவர் சொத்துகளை பறிமுதல் செய்யவும், எந்தச் சட்டத்தையும் திருத்தவும், எந்தச் சட்டத்தின் செயற்பாட்டையும் நிறுத்தவும் மற்றும் திருத்தத்துடன் அல்லது இல்லாமல் ஏதேனும் சட்டத்தைப் பயன்படுத்தவும் அதிகாரம் கொண்டவராவார். இது ஊடகங்களை தணிக்கை செய்யவும் அனுமதிக்கிறது.

கடந்த வாரம், ராஜபக்ஷ அத்தியாவசிய பொதுச்சேவைகள் சட்டத்தை புதுப்பித்தார். முதலில் மே 27 அன்று அமுல்படுத்தப்பட்ட இச்சட்டம், சுமார் ஒரு மில்லியன் அரச ஊழியர்களை உள்ளடக்கியவாறு அவர்களின் வேலை நிறுத்தங்கள் மற்றும் ஏனைய தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு தடைவிதிக்கின்றது.

அத்தியாவசிய சேவை சட்டங்களை மீறியதாக குற்றம் காணப்படும் எவரும், ஒரு நீதவான் முன் நடத்தப்படும் சுருக்கமான விசாரணையைத் தொடர்ந்து, கடுமையான சிறைத்தண்டனை, அபராதம், அவர்களின் சொத்தை பறிமுதல் செய்வது மற்றும் எந்தவொரு தொழிலிலும் வேலை செய்யமுடியாத தடையையும் எதிர்கொள்வார். இந்த விதிகளை மீறுவதற்காக அரசாங்க ஊழியர்களை தூண்டுவிடுவதாக அல்லது ஊக்குவிப்பதாக குற்றஞ்சாட்டி சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எவருக்கும் அதே தண்டனைகள் விதிக்கப்படலாம்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் திடீரென பெருந்தொகை சீனி, அரிசி மற்றும் நெல் மூடைகள் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதை அம்பலப்படுத்தி ஊடகங்கள் ஒரு விரிவான பிரசார நடவடிக்கைகளை முன்னெடுத்தன. பதுக்கல்காரர்கள் அடையாளம் காட்டப்பட வில்லை. இதைத் தொடர்ந்து அரசாங்க நுகர்வோர் விவகார அதிகாரசபையின் அதிகாரிகளுடன் பொலிஸார் களஞ்சிய சாலைகளில் சோதனை நடத்தி வளாகங் களுக்கு சீல் வைத்தனர்.

கைப்பற்றப்பட்ட பொருட்கள், சட்டவிரோத பதுக்கல்காரர்களிடமிருந்து நியாயமான விலையில் அரசாங்க அதிகாரிகளால் கொள்வனவு செய்யப்பட்டு நுகர்வோருக்கு விநியோகிக்கப்படும் என்று நுகர்வோர் அதிகாரசபை அறிவித்தது. இழப்பீடு கொடுக்காமல் இந்த அத்தியாவசிய உணவுப் பொருட்களை கைப்பற்றுவதற்கு பதிலாக, சட்டவிரோத பதுக்கல்காரர்களுக்கு வெகுமதி அளிக்கப்பட்டுள்ளமை, அரசாங்கத்தின் நடவடிக்கைகள் பெரும் வணிகர்களுக்கு எதிராக இலக்குவைக்கப்பட்டவை அல்ல என்ற தெளிவான சமிக்ஞையை அவர்களுக்கு காட்டியுள்ளது.

உண்மையில், அதிக விளம்பரப் படுத்தப்பட்ட சோதனை நடவடிக்கைகள் மற்றும் கைப்பற்றல்கள் என்பன விலைவாசி உயர்வு, பற்றாக்குறை மற்றும் தொற்றுநோயால் மோசமடைந்துள்ள சமூகப் பேரழிவு ஆகியவை சம்பந்தமான அரசாங்க எதிர்ப்பு உணர்வைத் திசைதிருப்பி விடுவதற்கான ஒரு பொது உறவுப்பேணல் பயிற்சியாகும். சமீபத்திய புள்ளிவிபரங்களின்படி, குழந்தைகள் உட்பட 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொவிட்-19 வைரஸால் இறந்துள்ளனர். இதில் 8,000 மரணங்கள், பொது சுகாதார சேவையை டெல்ட்டா மாறுபாடு மூழ்கடித்துள்ள நிலையில், கடந்த இரண்டு மாதங்களில் நடந்தவையாகும்.

அரசாங்கத்திற்குள் இன்னொரு சிரேஷ்ட இராணுவப் பிரமுகரை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கையில், மேஜர் ஜெனரல் டி.எஸ்.பி.நிவுன்ஹெல்லவை அத்தியாவசிய உணவு விநியோகங்களை ஒருங்கிணைப்பதற்காக, அத்தியாவசிய சேவைகளின் ஆணையாளர் நாயகமாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்தார்.

எவ்வாறாயினும், உணவுப் பற்றாக்குறை யானது பதுக்கலால் ஏற்படுவதில்லை. மாறாக, அது இறக்குமதிக்கு அரசாங்கம் விதித்துள்ள தடைகள் மற்றும் உயரும் பணவீக்கத்தினதும் விளைவாகும். உண்மையில், கொழும்பானது மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை பங்கீடு முறையில் வழங்குவதற்குத் தயாராகி வருகிறது.

பால்மா உட்பட பொருட்கள் மீதான இறக்குமதிக் கட்டுப்பாடுகள், இந்த ஆண்டு 4 பில்லியன் டொலர் வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான நடவடிக்கையோடு சம்பந்தப்பட்டதாகும். ஏற்றுமதி, சுற்றுலா மற்றும் வெளிநாட்டுப் பண வருகையின் மூலமான வருவாயில் ஏற்பட்டுள்ள கூர்மையான சரிவினால், அரசாங்கத்தின் அந்நிய செலவாணி இருப்பு கடந்த மாதம் 2.8 பில்லியன் டொலராக குறைந்தது. இலங்கையின் எரிசக்தி அமைச்சர், ஐக்கிய அரபு இராச்சிய அதிகாரிகளுடன், கடனுக்கு எண்ணெயைப் கொள்வனவுசெய்வதற்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளார்.

இலங்கை மத்திய வங்கி, ஜனவரி 1 முதல் ஓகஸ்ட் 30 வரை அமெரிக்க டொலருக்கு எதிரான ரூபாவின் மதிப்பு சுமார் 13.5 சதவீதம் வியத்தகு முறையில் சரிந்துவிட்டதாக அறிவித்துள்ள அதேநேரம், வணிக வங்கிப் பரிமாற்ற விகிதங்கள் கிட்டத்தட்ட 25 சதவிகிதம் சரிந்துவிட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஓகஸ்ட் 30 அன்று, பணப் பற்றாக்குறையில் வாடும் திறைசேரியால் அதன் பிணைமுறிகளை 4 பில்லியன் ரூபாவுக்கு மட்டுமே விற்க முடிந்த நிலையில், பங்குப்பத்திர சந்தையும் வீழ்ச்சியடைந்துள்ளது.

அரசாங்க செலவின பற்றாக்குறைகளை சமாளிக்க மத்திய வங்கி பில்லியன் கணக்கான ரூபாவை அச்சிட்டமை, மேலும், பணவீக்கத்தை அதிகரிக்கச் செய்ததுடன், ரூபாவின் மதிப்பைக் குறைக்கிறது. உத்தியோகபூர்வ பணவீக்க விகிதம், ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில், ஓகஸ்ட் மாதத்தில் 6 சதவீதமாக அதிகரித்தது.

நவம்பரில் மற்றொரு சிக்கன பாதீட்டுக்குத் தயாராகும் நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷ, அரச வருவாய் வெகுவாக குறைந்துவிட்டது. அடுத்த அடுத்த செலவுகளுக்குக் கூட இது போதாதென்று கடந்த வாரம் அமைச்சரவை அமைச்சர்களிடம் கூறினார். அவரது அமைச்சானது ஏனைய அனைத்து அமைச்சுகளுக்கும் செலவுகளைக் குறைக்கவும், அனைத்து திட்டங்களையும் நிறுத்தவும் உத்தரவிட்டுள்ளது. ஒரு ‘தீர்வாக’ அரச ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதியத்தை வெட்டுவதற்கு அரசாங்க அமைச்சர்கள் ஏற்கனவே பிரசாரம் செய்து வருகின்றனர்.

தொழிலாளர்கள் மற்றும் ஏழைகள் மீதான தாக்குதல்களை தீவிரமாக்க அது தயாராகின்ற நிலையிலும், ராஜபக்ஷ அரசாங்கம் பெரிய வணிகர்களுக்கு பாரிய உதவிகளை வழங்கியுள்ளதுடன், சர்வதேச நிதி நிறுவனங்களுக்கான அனைத்து கடன் பொறுப்புகளையும் வைத்துக்கொண்டுள்ளதோடு, தொழிலாளர்களை பாதுகாப்பற்ற நிலையில் ஏற்றுமதி ஆலைகள் மற்றும் ஏனைய வேலைத்தளங்களில் வேலை செய்ய உத்தரவிட்டுள்ளது. தொற்றுநோய் காலகட்டத்திலும் வங்கிகளும், ஏனைய வணிகங்களும் பெரும் இலாபங்களைப் பெற்றுள்ளன.

எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி (ஐ.ம.ச.), ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் அவசரகாலச் சட்டங்களை கோழைத்தனமான முறையில் விமர்சித்தன. அவசரகால விதிகளை அமுல்படுத்துவதற்குப் பதிலாக, தொற்றுநோயை சமாளிப்பதற்கான சட்டத்தை அறிவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐ.ம.ச. அரசாங்கத்தை கேட்டுக்கொண்டது. அரசாங்கம் அவசரகால நிலையை விதிப்பதற்குப் பதிலாக, தனியான பொதுச் சுகாதார அவசர சட்டங்களை கொண்டிருக்க வேண்டும் என்று தமிழ்க் கூட்டமைப்பு கூறியது.

ஜே.வி.பி. அவசரகால விதிமுறைகள் குறித்து அமைதியாக உள்ளது. ஜே.வி.பி. தலைவரான சுனில் ஹதுன்நெத்தி, ஓகஸ்ட் 29 அன்று அரசாங்கத்திற்கு பயனுள்ள விலைக் கட்டுப்பாடுகளைச் செயற்படுத்த அழைப்பு விடுத்தார். அவசரச் சட்டங்கள் திணிக்கப்பட்டபோது, ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், அவை வர்த்தகர்களுக்கு மட்டுமே பயனளிப்பதாகக் கூறினார். போலி இடது முன்னிலை சோஷலிசக் கட்சி, அவசரகாலச் சட்டம் பற்றி ஒரு வார்த்தை கூட சொல்லவில்லை.

ராஜபக்ஷ அரசாங்கம், எதிர்க்கட்சிகள், தொழிற்சங்கங்கள் மற்றும் போலி இடதுசாரி குழுக்களும், உண்மையில் தொழிலாளர் வர்க்கத்தின் மத்தியில் வளர்ந்துவரும் சமூக எதிர்ப்பையிட்டு பீதியடைந்துள்ளன. கோட்டாபய கடந்த மாதம் தனது தேசிய உரையின்போது, தயக்கத்துடன் புதிய முடக்கத்தை அறிவிக்கையில், இது வேலைநிறுத்த நடவடிக்கைகளுக்கான நேரம் அல்ல என அறிவித்தார்.

கடந்த மாதங்களில், கிட்டத்தட்ட 2,50,000 ஆசிரியர்களின் வேலைநிறுத்த நடவடிக்கையும் புகையிரதம், தபால், பெருந்தோட்ட மற்றும் சுகாதார ஊழியர் களின் வேலைநிறுத்தங்களும், போராட்டங் களும் வெடித்தமை, அரசாங்கத்திற்கும், தொழிற்சங்கங்களுக்கும் ஆழ்ந்த அரசியல் நெருக்கடியை உருவாக்கியுள்ளது.

ராஜபக்ஷவின் வர்க்கப் போர் அவசரகால நிலை மற்றும் அத்தியாவசிய சேவைகள் வேலைநிறுத்தத் தடைக்கு, அரசியல் ரீதியாகவும் தனது பலத்தை அணிதிரட்டியும் தொழிலாளர் வர்க்கம் பதிலிறுக்க வேண்டும். அரசாங்கத்தின் பக்கத்தில் நிற்கும் எதிர்க்கட்சிகள் மற்றும் தொழிற்சங்கங்களை தொழிலாளர்கள் நம்ப முடியாது.

தொழிலாளர்கள், முதலாளித்துவ வர்க்கம் மற்றும் தொழிற்சங்கங்களின் ஒவ்வொரு பிரிவிலுமிருந்தும் விலகி, அவசரகால நிலை மற்றும் அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டங்களை உடனடியாக இரத்துச்செய்யக் கோருவதோடு, பாதுகாப்பற்ற தொற்றுநோய் நிலைமைகளை எதிர்ப்பது உட்பட தங்கள் ஜனநாயக மற்றும் சமூக உரிமைகளைப் பாதுகாக்க ஒவ்வொரு வேலைத்தளத்திலும் நடவடிக்கை குழுக்களை கட்டியெழுப்ப வேண்டும்.

இலங்கையிலுள்ள தொழிலாளர்கள் தங்கள் உலகளாவிய வர்க்க சகோதர, சகோதரிகள் பக்கம் திரும்புவதன் மூலமும், நடவடிக்கை குழுக்களின் சர்வதேச தொழிலாளர் கூட்டமைப்பிற்காகப் போராடுவதன் மூலமும் மட்டுமே இந்தப் போராட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியும். தெற்காசியா மற்றும் சர்வதேசளவில் சோஷலிசத்திற்கான போராட்டத்தின் ஒரு பகுதியாக இந்தப் போராட்டம் இலங்கையில் சோஷலிச கொள்கைகளுக்காகவும் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளது அரசாங்கத்திற்குமான போராட்டத்துடன் இணைக்கப்பட வேண்டும். சோஷலிச சமத்துவக் கட்சி (இலங்கை) மட்டுமே இந்த வேலைத்திட்டத்தை அபிவிருத்தி செய்வதோடு அதற்காகப் போராடுகிறது.

நன்றி: சோஷலிச இணையம்



# கொரோனா தொற்று தீவிரம்; சிறுவர்களின் பாதுகாப்பு கேள்விக்குறி?

**கொரோனா தொற்றிலிருந்து பாதுகாக்கும் நடவடிக்கையில் அரசாங்கம் முதியவர்களின் விடயத்தில் இழைத்த தவறை சிறுவர்களின் விடயத்தில் செய்துவிடக்கூடாது. சிறுவர்கள் கொரோனா தொற்றுக்குள்ளாகும் வீதம் படிப்படியாக அதிகரித்து வருகின்றது. ஆகவே, 12 - 18 வயதுக்கிடைப்பட்டவர்களுக்கு உடனடியாக தடுப்பூசிகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் உப செயலாளரும் ஊடகப்பேச்சாளருமான வைத்தியர் சமந்த ஆனந்த 'தமிழன்' வார இதழுக்கு தெரிவித்தார்.**

**அவருடனான உரையாடலின் முழு விபரம் வருமாறு,**

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் உபசெயலாளர் வைத்தியர் சமந்த ஆனந்த உடனான செவ்வி

(உரையாடல் : தினுஷா)

**? கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் சுகாதார துறையினரின் பங்களிப்பு எவ்வாறுள்ளது?**

பொதுமக்களின் சுகாதாரப் பிரச்சினையாக இந்த தொற்று நிலைமை மொத்த சமூகத்தையும் பாதித்துள்ளதால் கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கான தலைமைத்துவத்தை சுகாதார அமைச்சே பொறுப்பேற்க வேண்டும். இதுபோன்ற அவசர நிலைமைகளை கையாள்வதற்கான முழு பொறுப்பும் தொற்று நோயியல் பிரிவுக்கே இருக்கிறது. சட்டத்தின் அடிப்படையில் இந்த நடவடிக்கைகளுக்கான அதிகாரம் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் இருக்கிறது. ஆகவே, நிபுணத்துவம் மற்றும் சட்டம் என்ற இரண்டு நடைமுறைகளையும் கையாளவேண்டியது அவசியமாகும்.

ஆனால், சுகாதாரத்துறையினால் இதனை தனியாக முன்னெடுக்க முடியாது. சுகாதார அமைச்சின் தலைமையில் ஏனைய பிரிவுகள் இந்த நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். முப்படையினர், சிவில் நிர்வாகம், அடிமட்ட அதிகாரிகள் என சகல பிரிவினரும் சுகாதாரத்துறையினருக்கு பங்களிப்புச் செய்பவர்களாக இருக்கவேண்டும்.

தொற்று நோய் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின்போது நோய்க் கட்டுப்பாடு, நோயாளர்களை அடையாளம் காணுதல், அவர்களை தேடிச் செல்லுதல், தடுப்பூசி வழங்குதல் போன்ற பிரதான செயன்முறைகளை சுகாதாரத்துறை முன்னெடுத்தே வருகின்றது.

தற்போதுவரையில் 95 சதவீதமானோருக்கு தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளதென கருதுகிறேன். அதனடிப்படையில் பார்க்கும்போது இந்த நடவடிக்கையில் சுகாதாரத்துறை முக்கிய பங்களிப்பை வழங்கியுள்ளது. மறுபுறம் நாடுபூராகவுமுள்ள முக்கிய வைத்தியசாலைகளிலுள்ள கொரோனா நோயாளர்களை பராமரிப்பதற்கு சுகாதாரப் பணியாளர்கள் தமது முழு பங்களிப்பை வழங்கியுள்ளனர். திட்ட ஒழுங்கமைப்பு மற்றும் நடைமுறை என்ற அடிப்படையில் சுகாதாரப் பிரிவினர் அர்ப்பணிப்பை வழங்கியிருந்தாலும், அதனை அவர்கள் விளம்பரப்படுத்தாமை பிரதான பிரச்சினையாக மாறியுள்ளது. அதன் காரணமாகவே சுகாதாரத்துறை இந்த செயற்பாடுகளில் தலையிடாதது போன்ற ஒரு நிலைமை உருவாகியுள்ளது. ஆனால், 95 சதவீத பங்களிப்பு சுகாதாரப் பிரிவினருடையதாகும்.

**? இந்த நடவடிக்கைகள் தற்போது முறையாக முன்னெடுக்கப்படுகின்றன என கருதுகிறீர்களா?**

தொழில்நுட்ப ரீதியில் முடிவெடுக்க வேண்டிய நிலையை தற்போது சந்தித்துள்ளோம். தற்போதைய நிலைமையில் நிபுணர்களினூடாக தொழில்நுட்ப முடிவுகளை எடுத்துக்கொண்டே அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்குச் செல்ல வேண்டும். ஆனால், ஒருசில இடங்களில் அரசியல் மற்றும் ஏனைய தலையீடுகளினால் நிபுணர்களால் முன்னெடுக்கப்படும் தொழில்நுட்ப தீர்மானங்களில் மாற்றம் ஏற்படுகின்றது.

ஆரம்பத்தில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கி தடுப்பூசிகளை வழங்குமாறு கோரியிருந்தோம். ஆனால், 30 வயதிலிருந்து 60 வயதுக்குட்பட்டோருக்கே ஆரம்பத்தில் தடுப்பூசி வழங்கப்பட்டது. இதன் காரணமாக தற்போது 60 வயதுக்கும் மேற்பட்ட அநேகமானவர்கள் கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளனர். இந்த வயது பிரிவுகளைச் சேர்ந்த அநேகமானவர்கள் உயிரிழந்ததன் பின்னரே அவர்களுக்கான தடுப்பூசிகளை வழங்குவதற்கு ஆரம்பித்தார்கள். எனவே, இதுவொரு காலங்கடந்த தீர்மானம். தடுப்பூசிகளை காலங்கடந்து நடைமுறைப்படுத்தியதாலேயே மரணவீதம் அதிகரித்தது.

18 – 20 வயதுக்கிடைப்பட்ட சிறுவர்களுக்கு தடுப்பூசி வழங்குமாறு கோரியுள்ளோம். தற்போது சிறுவர்கள் அதிகளவில் கொரோனா தொற்றுக்குள்ளாவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. ஆனால், அவர்கள் இன்னும் பாடசாலைகள் செல்லாமல் வீடுகளிலேயே இருக்கிறார்கள். அதனால், குறுகிய சிறுவர்களே தொற்றுக்குள்ளாகிறார்கள். வீடுகளில் இருந்தாலும் சிறுவர்கள் தொற்றுக்குள்ளாகும் வீதம் படிப்படியாக அதிகரித்து வருகின்றது.

> “12 – 18 வயதெல்லைக்குட்பட்ட சிறுவர்களுக்கு ''பைசர்''தடுப்பூசி மாத்திரமே வழங்கமுடியும்”

பாடசாலைகள் திறக்கப்பட்டதன் பின்னர் நிச்சயமாக சிறுவர்கள் பிரயாணங்கள், பொது இடங்களுக்கு செல்லும் நடவடிக்கைகளில் அதிகரிப்பு ஏற்படும். அதன்போது சிறுவர்கள் நேரடியாகவே தொற்றுக்குள்ளாகுவார்கள். தற்போதுள்ளதைவிட அதிகளவான கொரோனா நோயாளர்கள் அடையாளங் காணப்படுவார்கள். மரணங்களும் அதிகரிப்பதற்கான வாய்ப்புகளும் அதிகமுள்ளன. இதுவொரு தீவிரநிலை. அதற்கு முன்னர் அவர்களுக்கான தடுப்பூசிகளை வழங்கவேண்டும். நிலைமை கைமீறி 60 வயதுக்கும் மேற்பட்டவர்களுக்கு ஏற்பட்ட சூழ்நிலை போன்று சிறுவர்களுக்கும் ஏற்படும் வரையில் பொறுத்திருக்கக்கூடாது. எனவே, சிறுவர்களுக்காக வழங்கும் திட்டத்தை காலந்தாழ்த்திவிட வேண்டாம் என்பதே எமது கோரிக்கை.

**? 20 தொடக்கம் 30 வயதுக்குட்பட்ட இளைஞர், யுவதிகளுக்கு பைசர் தடுப்பூசி வழங்குவதை தவிர்க்குமாறு கடந்தவாரம் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுகாதார அமைச்சிடம் கோரியிருந்தது. அதற்கு காரணம் என்ன?**

சிறுவர்களுக்கான கொரோனா தடுப்பூசிகளை காலந்தாழ்த்தாமல் முன்னெடுக்க வேண்டுமாயின், தற்போதைய நிலையில், அவர்களுக்கு பைசர் தடுப்பூசி மாத்திரமே வழங்கமுடியும். 12 - 18 வயதெல்லைக்குட்பட்ட சிறுவர்களுக்கு பைசர் தடுப்பூசி மாத்திரமே வழங்கமுடியுமென அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஆனால், 20 தொடக்கம் 30 வயதுக்குட்பட்டோருக்கு பைசர் தடுப்பூசி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதுவொரு தவறான தீர்மானம்.

மாறாக 20 தொடக்கம் 30 வயதுக்குட்பட்டவர்களுக்கு பைசர் தவிர்ந்த வேறெந்த தடுப்பூசியையும் வழங்கலாம். அதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. சினோபார்ம் தடுப்பூசி வழங்கமுடியும். ஆகவே, தற்போது இருப்பிலுள்ள பைசர் தடுப்பூசிகளை 12 – 18 வயதுக் கிடைப்பட்ட சிறுவர்களுக்கு வழங்க முடியும். இதுதொடர்பில் ஜனாதிபதி உள்ளிட்ட அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தியுள்ளோம். எங்களின் பரிந்துரையை மதிக்காமல் சிறுவர்களின் மரணங்களும் அவர்கள் தொற்றுக்குள்ளாகும் வீதமும் அதிகரித்தால், இந்த விடயத்தில் அதிகாரமுள்ள சகல அதிகாரிகளும் பொறுப்புக்கூற வேண்டும். சிறுவர்களுக்கு பைசர் தடுப்பூசிகளை வழங்கிவிட்டு 20 – 30 வரையிலான வயதெல்லைக்குட்பட்டவர்களுக்கு ஏனைய தடுப்பூசிகளை வழங்கும்போது இரு தரப்பினருக்கும் தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டத்தை நிவர்த்திசெய்ய முடியும்.

**? தற்போதைய நிலைமையில் பாடசாலைகளை திறப்பதற்கு சுகாதார ரீதியில் சாதகமான சூழ்நிலைகள் இருக்கின்றனவா?**

பாதுகாப்பான முறையில் எவ்வாறு மீண்டும் பாடசாலைகளை ஆரம்பிப்பதென்பது தொடர்பில் சிந்திக்க வேண்டும். மாணவர்கள் ஒன்றரை வருடங்களுக்கு மேலாக வீடுகளிலேயே இருக்கிறார்கள். ஆனால், சூம் தொழில்நுட்பத்தினூடாக கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்கக் கூடிய மாணவர்கள் குறுகிய எண்ணிக்கையிலானவர்களே இருக்கிறார்கள். கிராமப்புறங்களிலுள்ள மாணவர்களுக்கு சூம் தொழில்நுட்பத்துக்காக தனியாக பணம் செலவழிக்க முடியாத நிலையே நிலவுகின்றது. ஒருசில பகுதிகளில் இணைய வசதி இல்லை. இவ்வாறானவொரு இக்கட்டான சூழ்நிலையில் மாணவர்கள் கல்வி கற்காமல் வீடுகளிலேயே இருக்கிறார்கள்.

மறுபுறம், வீடுகளில் இருப்பதால் மாணவர்கள் பல்வேறு மனநிலை பாதிப்புகளையும் சந்திக்கிறார்கள். அதனால், கட்டாயம் பாடசாலைகளை திறக்க வேண்டியது அவசியமாகும். ஆனால், எவ்வாறு பாதுகாப்பாக பாடசாலைகளை திறக்கவேண்டும் என்பது தொடர்பில் உரிய தீர்மானங்களை எடுக்கவேண்டியது அவசியமாகும். அதனடிப்படையில், மாணவர்கள் மத்தியில் சுகாதார நடைமுறைகளை கடுமையாக்கவேண்டும். இதுபோன்ற திட்டங்களை உருவாக்கும் அதே சந்தர்ப்பதத்தில் பாடசாலை மாணவர்களுக்கு தடுப்பூசிகளை பெற்றுக் கொடுப்பது மேலும் நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடியதாக அமையும்.

ஆனால், மாணவர்களுக்கு தடுப்பூசி வழங்காமலிருப்பதே பிரச்சினையாகவுள்ளது. ஒன்று, பாடசாலைகளை திறக்கவேண்டும் என்ற எண்ணம் அரசாங்கத்துக்கு இல்லை. அவ்வாறில்லாவிட்டால் எந்தவொரு திட்டமும் இல்லாமல் பாடசாலைகளை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறார்கள். இவ்விரு நிலைப்பாடுகளும் தவறானவையாகும். அதனால், சரியான தீர்மானங்களை எடுப்பதற்கு தற்போதாவது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஒன்றுதிரள வேண்டும். அதனை அரசாங்கமே செய்யவேண்டும்.

**? இன்னும் இரண்டு அல்லது மூன்று மாதங்களில் மூன்றாம் கட்ட தடுப்பூசியை வழங்க முடியுமென அரசாங்கம் அறிவித்துள்ளது. இது சாத்தியப்படுமா?**

தடுப்பூசிகளிலுள்ள வினைத்திறன் அல்லது நோய் எதிர்ப்புச் சக்தி மீள் சூழற்சியானது ஐந்து அல்லது ஆறு மாதங்களில் குறைவடையும் எனபதே தற்போது உலகம் பூராகவும் மேற்கொள்ளப்பட்ட தரவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் மீள்சூழற்சி குறைவடையும்போது தடுப்பூசிகளை செலுத்திக்கொண்டவர்களுக்கு மீண்டும் நோய் தொற்று ஏற்படும்.

அதனால் அவர்கள் மூன்றாம் கட்ட தடுப்பூசிகளை பெற்றுக்கொண்டு அவர்களின் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிப்பது சிறந்த யோசனை. தற்போது ஒருசில உலக நாடுகளில் தெரிவுசெய்யப்பட்ட பிரிவினருக்கு இந்தத் தடுப்பூசிகள் வழங்கப்படுகின்றன. எனவே, தெரிவுசெய்யப்பட்ட குறிப்பாக, கொரோனா நோயாளர்களுடன் தொடர்ச்சியாக இயங்கக்கூடிய குழுவினருக்கு வழங்கவேண்டும். உதாரணமாக, சுகாதார பாதுகாப்புப் பிரிவினருக்கு அந்த தடுப்பூசிகளை வழங்க முடியும். இரண்டாம் கட்ட தடுப்பூசியை பெற்றுக்கொண்ட 400 வரையிலான சுகாதார பாதுகாப்புப் பிரிவினர் பாதிப்படைந்துள்ளனர். காரணம், அவர்களின் நோய் எதிர்ப்புச் சக்தி குறைவடைந்திருக்கலாம். இராணுவத்தினர், பொலிஸார், அடிமட்ட சுகாதார அதிகாரிகள், கிராம சேவகர்கள், சமுர்த்தி அதிகாரிகள் போன்ற தரப்பினர் தற்போது உயர் எச்சரிக்கை நிலையிலுள்ளனர்.

மேலும், 60 வயதுக்கு மேற்பட்ட புற்றுநோய் போன்ற வேறு நோய்களால் பாதிக்கப்பட்டவர்களும் எச்சரிக்கை நிலைமைகளிலேயே இருக்கிறார்கள். அவ்வாறான தெரிவுசெய்யப்பட்ட பிரிவினருக்கு மூன்றாம் கட்ட தடுப்பூசி வழங்குவதில் விஞ்ஞான ரீதியான யதார்த்த நிலையொன்று இருக்கிறது. இதுதொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். சுகாதாரப் பிரிவினருக்கு முதலில் மூன்றாம் கட்ட தடுப்பூசியை வழங்குமாறு சுகாதார அமைச்சிடம் கோரியுள்ளோம்.

**? தடுப்பூசி பகிர்ந்தளிக்கும் வேலைத் திட்டத்தில் குறைபாடுகள் இருப்பதாக குறிப்பிடப்படுகின்றது. இதுதொடர்பில் அறிந்துவைத்துள்ளீர்களா?**

தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டத்தில் எம்மிடம் பலமிக்க பொறிமுறை இருக்கிறது. நாடுபூராவும் சிறந்த திட்டமொன்று காணப்படுகின்றது. அதன் காரணமாகவே கொவிட்-19 தடுப்பூசி வேலைத்திட்டத்தில் உலகில் முதலிடத்தைப் பிடித்துள்ளோம். சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளை அடிப்படையாகக்கொண்டே வைத்தியசாலைகள் தீர்மானிக்கப்படுகின்றன. அதற்கமைய, 3 அல்லது 4 கிராமசேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய வகையில் ஒரு சுகாதார வைத்திய அதிகாரிகள் காரியாலயங்கள் இயங்கி வருகின்றன. அவ்வாறாயின் வைத்தியசாலைகளுக்கும் சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளுக்கும் போதுமானளவு தடுப்பூசிகளை பெற்றுக்கொடுத்தால், நாளொன்றுக்கு 5 அல்லது 6 இலட்சம் பேருக்கு தடுப்பூசி வழங்குவது எமது நாட்டை பொறுத்த வரையில் சுலபமான விடயம். காரணம், இது ஏற்கனவே அனுமதிபெற்று நடைமுறையில் இருந்துவரும் முறையொன்றாகும். அதனால், மக்களுக்கு சென்றடையவேண்டிய தடுப்பூசிகளை வைத்தியசாலைகளுக்கும் சுகாதார வைத்திய அதிகாரிகள் காரியாலயங்களுக்கும் வழங்க வேண்டியது அவசியமாகும். அதற்குத் தேவையான பயிற்சிகளும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இது புதிய விடயமல்ல. இந்த விடயத்தில் பல்வேறு தொழில்நுட்ப ரீதியான விடயங்களை திருத்தியமைக்க வேண்டியுள்ளது. எடுத்த எடுப்பில் தடுப்பூசி செலுத்த முடியாது. தடுப்பூசிகளை களஞ்சியப்படுத்தல், அவற்றை எடுத்துச்செல்லுதல், வழங்கும் இடங்களில் அவற்றை பாதுகாத்தல், வெப்பநிலை பராமரித்தல் போன்ற தொழில்நுட்ப விடயங்களை முகாமைத்துவம் செய்து முறையாக முன்னெடுப்பதென்பது எமது சுகாதாரப் பிரிவினருக்கு அவ்வளவு பெரிய விடயமல்ல.

> “90 வீதமான பிரயாணத்தடை எதிர்பார்க்கப்பட்டாலும் 40 – 50 வீதத்தையே அவதானிக்க முடிகிறது”

இந்த தடுப்பூசி திட்டத்துக்கு நாங்கள் ஒருபோதும் எதிர்ப்புத் தெரிவிக்கப் போவதில்லை. ஆனால், இதில் பயற்சி பெற்றவர்களையும் இணைத்துக்கொண்டு விரைவில் சகலருக்கும் தடுப்பூசி வழங்கப்படவேண்டும் என்பதே எங்களின் நிலைப்பாடு.

**? நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் தொடர்பில் என்ன கருதுகிறீர்கள்?**

கட்டுப்படுத்த முடியாதளவுக்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டமையினாலேயே நாடுபூராகவும் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது. மறுபுறம், எதிர்பாராதளவுக்கு மரண வீதமும் அதிகரித்தது. ஊரடங்கு என்பது நாட்டில் இக்கட்டான சூழ்நிலையை உருவாக்கும். ஊரடங்கு இல்லாமல் கொரோனா தொற்றுப்பரவலை கட்டுப்படுத்திக்கொண்டு அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்கு செல்லக்கூடிய நிலைமை எமக்கு இருக்கவேண்டும். அதற்கான வாய்ப்புகள் எம்மிடம் இருக்கின்றன. அதற்கான, திட்டங்களை முறையாக வகுத்து சரியாக நடைமுறைப்படுத்தினால் நாட்டை முடக்காமல் முன்செல்ல முடியும். மீண்டும் நாட்டை திறப்பதா என்பதே தற்போதுள்ள பிரச்சினை. நாட்டை திறந்ததும் எவ்வாறு நோய் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது என்ற தீர்மானத்தின் அடிப்படையிலேயே நாட்டை திறக்கும் தீர்மானத்துக்கு வரவேண்டும். எப்போது திறப்போம் என்பதை விட எந்த திட்டத்தின் அடிப்படையில் திறக்கிறோம் என்பதிலேயே வெற்றி இருக்கிறது.

**? ஊரடங்கு அமுலில் இருந்தாலும் நோயாளர்கள் மற்றும் மரண எண்ணிக்கையில் மாற்றத்தை அவதானிக்கக் கூடியதாக இல்லையே?**

நாடு முடக்கப்பட்டுள்ளதால் எதிர்காலத்தில் நோயாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சியை அவதானிக்கக்கூடியதாக இருக்கும். இதனூடாக ஓரளவாவது பிரயாணத்தடை பேணப்பட்டுள்ளது. முறையாக மூடப்படவில்லை என்றே கூறவேண்டும். ஊரடங்கு காலத்தில் பொதுவாக 89 அல்லது 90 வீதம் பிரயாணத்தடை எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், 40 – 50 வீதமே பிரயாணக் கட்டுப்பாட்டை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. எனவே, தற்போது அமுலிலுள்ள பொதுமுடக்கத்தின் பலன் கிடைக்க இன்னும் இரு வாரங்களாவதாகும். ஆனால், இரண்டு வாரங்களின் பின்னர் முறையாக செயற்படாவிட்டால் ஒன்றரை மாதமாகும்போது மீண்டும் நோயாளார்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்படும். இந்த வைரஸின் புதிய திரிபுகள் உருவாகுவதால் எதிர்காலத்தில் எவ்வாறான திரிபுகள் உருவாகும் என்பதையும் மதிப்பிட முடியாமலுள்ளது.

**? டி.1.617.2 என்று பெயர் குறிப்பிடப்படும் டெல்ட்டா தொற்று, தடுப்பூசிக்கு கட்டுப்படாது என்றவொரு கருத்து வெளியாகிறது. இதில் எந்தளவில் உண்மைத் தன்மையுள்ளது?**

தற்போது தயாரிக்கப்பட்டுள்ள தடுப்பூசிகளில் பாதுகாப்பொன்று இருக்கிறது என்றே சர்வதேச தரவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு திரிபுகளின் தன்மைக்கும் ஏற்ப பாதுகாப்பை பெற்றுக்கொள்ள முடியும். விரைவாக பரவலடைவதே டெல்ட்டா தொற்றிலுள்ள பிரதான பிரச்சினையாகும். இந்தத் தொற்று ஏற்பட்டதும் அவர்களுக்கு ஒட்சிசன் தேவைப்பாடு ஏற்படுகிறது. இந்தத் தொற்றின் வீரியத்தினாலேயே அதிகளவில் பரவலடைகிறது. தற்போதுள்ள சகல திரிபுகளிலிருந்தும் தடுப்பூசிகளினால் பாதுகாப்பை பெற்றுக்கொள்ள முடியுமென்றேசர்வதேச தரவுகள் தெரிவிக்கின்றன. அதனால் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகும். அதனூடாக மரண வீதத்தைக் குறைத்துக்கொள்ளமுடியும்.

**? தற்போது வைத்தியசாலைகளில் ஒட்சிசன் தட்டுப்பாடு இருக்கிறதா?**

தற்போது நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துவரும் நிலையில், ஒட்சிசன் உற்பத்தியும் கொள்வனவும் அதிகரிப்பட்டதால் தேவையான அளவு ஒட்சிசன் வைத்தியசாலைகளில் இருக்கிறது. மீண்டும், நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்குமாக இருந்தால் அதற்கு நாம் தற்போதிருந்தே தயாராக வேண்டும்.

# அவசரகால நிலை பிரகடனம் மூலம் பொருளாதார நெருக்கடி சமாளிக்கப்படுகின்றதா?

**எம்.எஸ்.அமீர் ஹுசைன்**



தற்போது கொரோனா வைரஸ் தொற்று பரவும் வேகம் உக்கிரமடைந்து வருவதோடு தினசரி மரண எண்ணிக்கையும் உயர்வடைந்து கொண்டு செல்கின்றதை அவதானிக்க முடிகின்றது. நாட்டில் உள்ள ஏராளமான வைத்தியசாலைகளில் டாக்டர்கள், தாதிமார்கள், சுகாதாரத்துறை அதிகாரிகள், மருத்துவ ஆய்வு கூட ஊழியர்கள், வைத்தியசாலைகளில் கடமைபுரியும் சிற்றூழியர்கள் உட்பட தொழில், வயது வேறுபாடின்றி எல்லாத்தரப்பினர்களும் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உள்ளனர்.

பரவலாக வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் வைத்தியசாலைகளில் கடமை புரியும் டாக்டர்களுக்கும், கணிசமான சுகாதாரத்துறை ஊழியர்களுக்கும் கொரோனா தொற்றிருப்பதால் பல வைத்தியசாலைகளை மூடிவிடும் நிலை ஏற்பட்டிருப்பதாக அறிய முடிகின்றது. அதே நேரம் நோயாளிகளை அனுமதிக்க நாட்டில் உள்ள அதிகமான வைத்தியசாலைகளில் இடவசதி இல்லாத நிலை ஏற்பட்டிருக்கின்றது. காரணம், சாதாரண வார்ட்டுகளில் கூட கொரோனா நோயாளர்களை சிகிச்சைக்காக அனுமதிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதால் அடிக்கடி வைத்தியசாலைகளுக்கு சிகிச்சைகளுக்கு வரும் அவசர

ஏற்கனவே அரசாங்கம் நாட்டை முடக்கவில்லையானால் சுயமாக முடக்குவோம் என்று கோஷம் எழுப்பிய தரப்பினர், இப்போது இந்த முடக்கத்தில் உள்ள குறைபாடுகளை சுட்டிக்காட்டி இப்படியான முடக்கம் நாட்டில் கொரோனா பரவுவதை அல்லது மரண வீதங்களை குறைக்க பயன்படாது என்றும் கருத்து வெளியிட்டு வருகின்றனர். இவ்வாறு குற்றம்சாட்ட காரணம் நாட்டில் வன்முறை அல்லது அச்சம், பீதியான சூழ்நிலை காலங்களில் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவு போன்று மக்கள் நடமாட்டம் அற்ற நிலை காணப்படாததாகும். பரவலாக வாகன போக்குவரத்து, பல காரணங்களின் அடிப்படையிலான மக்கள் நடமாட்டம் என்பன வழமைபோன்று காணப்படுவதுமாகும்.

ஏற்கனவே 2020 ஆம் ஆண்டில் இருந்து பலமுறை இவ்வாறு நாடு முடக்கப்பட்ட போது பல்வேறுவிதமாகவும் அரசாங்கத்தால் வறுமை நிவாரண உதவிகளைப் பெறும் குடும்பங்களுக்கு ரூபா 10.000 என்ற அடிப்படையில் வருமான இழப்பிற்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன. அவ்வாறாக சுமார் 55 இலட்சம் குடும்பங்களுக்கு 6ஆயிரத்து 500 கோடி ரூபாக்கள் அளவில் நிவாரண கொடுப்பனவாக வழங்கப்பட்டுள்ளன. சமுர்த்தி நிவாரண

நிலையில் உள்ள நோயாளிகளை கூட அனுமதிக்க இடமில்லாத நிலை ஏற்பட்டு வருகின்றது.

அரச மற்றும் தனியார் துறை வேறுபாடு இன்றி பல்வேறு துறைகளிலும் கடமையாற்றும் ஊழியர்களும் தினமும் கொரோனா தொற்றுக்குள்ளாகி வருகின்றனர். 2021 ஆகஸ்ட் 30 ஆம் திகதி ஆகும் போது தினசரி மரணங்களும் 210என்ற நிலைக்கு வேகமாக உயர்வடைந்து சென்றிருக்கின்றது. ஒரு மணித்தியாலத்திற்கு 09 கொவிட் மரணங்கள் என்ற நிலையை புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. தற்போது வேகமாக கொரோனா பரவி வரும் 14 நாடுகள் வரிசையில் தினசரி மரண வீதத்தில் இலங்கை நான்காவது இடத்திற்கு வந்திருக்கின்றது. 03 கோடி 20 இலட்சம் சனத்தொகையை கொண்ட மலேசியாவில் தினசரி 282,08 கோடி 30 இலட்சம் சனத்தொகையை கொண்ட ஈரானில் தினசரி 620 மரணங்களும் நிகழ்ந்து கொண்டிருக்கின்ற நிலையில் சாதாரணமாக 02 கோடி 40 இலட்சம் சனத்தொகையை கொண்ட நாடு என்ற வகையில் இலங்கையில் தற்போதைய தினசரி மரண வீதம் 213 ஆக உயர்வடைந்திருப்பது இலங்கை இந்த நிலையை எட்ட காரணம் என்று சர்வதேச கொரோனா பதிவு அறிக்கை சுட்டிக்காட்டி இருக்கின்றது. இவ்வாறான ஒரு பின்னணியில் 10 நாட்களுக்கு முடக்கப்பட வேண்டும் என்ற நாட்டை 23 நாட்களுக்கு மேலாக முடக்கப்பட்ட நிலையிலும் தினசரி பதிவாகும் நோயாளர் எண்ணிக்கையிலோ மரணங்களின் எண்ணிக்கையிலோ எந்தவிதமான குறைவையும் காட்டவில்லை. முடக்கம் என்றால் முழுமையாக மக்கள் நடமாட்டம் அற்றதாக அமைய வேண்டும். தெருவில் எந்தவிதமான வாகன ஓட்டமும் இருக்கக் கூடாது. அத்துடன் தினசரியான பி.சி.ஆர். பரிசோதனை எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்ய வேண்டும். அதுவே விஞ்ஞான ரீதியான முடக்கம் (லொக்டவுன்) ஆகும் என்று இந்த முடக்கம் தொடர்பான மீளாய்வு பற்றி குறிப்பிடுகையில் ஒரு தரப்பினர் தெரிவிக்கின்றனர். இன்றேல் துரிதமாக கொரோனா பரவுவதை கட்டுப்படுத்த வழி இல்லை என்று அரசியல்வாதிகள், மருத்துவ சங்கப் பிரதிநிதிகள், டாக்டர்கள், தொழில் சங்கப் பிரதிநிதிகள் உட்பட பலதரப்பட்டவர்களும் கடந்த சில தினங்களாக தொடர்ந்தும் அரசாங்கத்தை வலியுறுத்தி வருகின்றனர்.

உதவி பெறும், பெறுவதற்கான எதிர்பார்ப்பு பட்டியலில் இருக்கின்ற மற்றும் அதனோடிணைந்த வகையில் 26 இலட்சம் குடும்பங்கள், முதியோர் நிவாரணம் பெறும் தகைமையுடைய 6இலட்சத்து 26ஆயிரம் குடும்பங்கள், அங்கவீனர்களுக்கான நிவாரண உதவி பெறும் 1இலட்சத்து 23ஆயிரம் குடும்பங்கள், சிறுநீரக நோய் நிவாரண உதவி பெறும் 44ஆயிரத்து 400 குடும்பங்கள் என்ற அடிப்படையில் 40 இலட்சம் குடும்பங்கள் முழுமையாக 2ஆயிரம் கோடி ரூபா நிவாரண உதவியை பெற்றுள்ளன.

2020 ஆம் ஆண்டு ஏப்ரல்,மே, ஜூன், அக்டோபர் மற்றும் 2021 ஏப்ரல் ஆகிய மாதங்களில் இடையிடையே நாடு முடக்கப்பட்ட போது இத்தகைய 5ஆயிரம் ரூபா கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன. அந்த சந்தர்ப்பத்தில் பொருளாதார மேம்படுத்தல் தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவராக பெசில் ராஜபக்ஷ கடமையாற்றினார். ஆனாலும் இன்றைய நிலையில் அவரே நிதி அமைச்சராக இருக்கின்ற நிலையில் நாடு 23 நாட்களாக மடக்கப்பட்டாலும் 5ஆயிரம் ரூபாவுக்கு பதிலாக 2ஆயிரம் ரூபாவை மாத்திரமே வழங்க முடிந்திருக்கின்றது. அதுவும் ஏற்கனவே நிவாரணம் வழங்கப்பட்ட 40 இலட்சம் குடும்பங்களில் இருந்தும் இயன்றவரையில் வடிகட்டப்பட்டு அதில் அரைப்பங்கு அளவிலான குடும்பங்களுக்கே அந்த 2ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டன. அதிலும் இந்த நிவாரண வெட்டு காரணமாக குறைந்த வருமானம் பெறும் அல்லது அன்றாடம் தொழில்புரிந்து ஜீவியம் நடத்தும் ஒரு தரப்பினருக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது.

மறுபுறம் உள்நாட்டில் பாரிய பொருளாதார நெருக்கடி நிலை உருவாகி இருக்கின்றது. அமெரிக்க டொலருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதால் அரசாங்கம் இறக்குமதிகளை கட்டுப்படுத்தி இருக்கின்றது. அதன் விளைவாக எரிவாயு, பால்மா, இரசாயன உரம் போன்றவற்றிற்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டிருந்த நிலையில் அரசாங்கம் விஷேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டு மொத்த விற்பனை வியாபாரிகளை தேடி நாடளாவிய ரீதியில் வலைவிரிக்க ஆரம்பித்திருப்பதால் பொருட்களுக்கான தட்டுப்பாடு ஓரளவுக்கு சமாளிக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. ஆனாலும் விவசாயிகளும் வீட்டுத் துறையினரும் அனுபவித்து வருகின்ற கஷ்டங்கள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. இலங்கை மத்திய வங்கியிடம் இருக்க வேண்டிய சிறப்பெடுப்பு ஒதுக்கு (SDR) 700 பில்லியன் அமெரிக்க டொலர்களில் இருந்து 300 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரையில் வீழ்ச்சியடைந்திருப்பதாக பொருளியல் வல்லுனர்கள் தெரிவிக்கின்றனர். அமெரிக்க டொலருக்கு தட்டுப்பாடு ஏற்பட காரணம் இந்த சிறப்பெடுப்பொதுக்கிலான வீழ்ச்சியாகும்.

ஆனாலும் இந்த சிறப்பெடுப்பு ஒதுக்கிலான வீழ்ச்சியை சமாளிப்பதற்காக அரசாங்கம் மேலும் சில வெளிநாட்டு கடன் உதவிகளை எதிர்பார்த்து எடுத்த முயற்சிக்கு பிரதிபலனாக ஆகஸ்ட் 31 ஆம் திகதி சுமார் 96 கோடி அமெரிக்க டொலர்கள் ( 18,600 கோடி இலங்கை ரூபா) கிடைத்ததாக நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆடிகல தெரிவித்திருந்தார். சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து 78 கோடி 70 இலட்சம் அமெரிக்க டொலர்களும் பங்களாதேஷிடம் இருந்து 15 கோடி அமெரிக்க டொலர்களும் சீனாவிடம் இருந்து 03 கோடி அமெரிக்க டொலர்களுமாக இந்த கடன்கள் கிடைத்திருக்கின்றன. எனினும் தற்போது டொலருக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை சமாளிக்க இந்த 100 கோடிக்கு அண்மித்த டொலரின் வருகை போதுமானதாக இருக்க முடியாது.

இதன் பிரதிபலிப்பாக இறக்குமதிக்கு ஏற்பட்ட கட்டுப்பாடு காரணமாக உள்நாட்டில் சில வகையான அத்தியாவசிய பொருட்களின் விலைகளும் உயர்வடைந்து காணப்படுகின்றன. சீனி விலை ஒரு கிலோ 230ரூபாவை கடந்து கொண்டிருந்தது. பால்மாவுக்கான தட்டுப்பாடு காரணமாக சில வகையான கம்பனிகளின் பால்மா வகைகளை சில தனிப்பட்ட வர்த்தகர்கள் அதன் பொதுவான விலையை விட 50 ரூபா மேலதிகமாக கறுப்பு சந்தையில் விற்பனை செய்யும் நிலை ஏற்பட்டிருக்கின்றது. முன்னர் 400 கிராம் பால்மா பைக்கற்றை வாங்கிய சில குடும்பங்கள் 50 கிராம் அல்லது 100 கிராம் பால்மாவை தேடி அழைகின்ற நிலை உருவாகி இருக்கின்றது. ஆனாலும் அரசாங்கம் விலைக்கட்டுப்பாட்டை அறிமுகம் செய்யும் வகையில் வெளியிட்ட அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் காரணமாக சீனியின் விலையை ஒரு கிலோ 130 ரூபாவுக்கு இறக்க முடிந்தது.

அரசாங்கம் மக்களின் உயிர்களை காக்க கொவிட் தடுப்பூசிகளை திட்டமிட்ட அடிப்படையில் வழங்கி வருகின்றது. முதலில் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்றும் பின்னர் 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் என்ற அடிப்படையிலும் பைசர், ஸ்புட்னிக், அஸ்ராசெனிகா மற்றும் சினோபார்ம் ஆகிய நான்கு வகையான தடுப்பூசிகளையும் வெளிநாடுகளில் இருந்து பெற்று நாடளாவிய ரீதியில் மக்களுக்கு வழங்கி வருகின்றது. செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதி ஆகும் போது கொவிட் தடுப்பூசி பெற்றுக்கொள்ள வேண்டிய ஒருவரும் இல்லாமல் சகல பருவத்தினர்களுக்கும் தடுப்பூசி ஏற்றப்பட்டிருக்கும் என்று அரசாங்கம் கணிப்பீடு செய்திருக்கின்றது. செப்டெம்பர் மாதத்தின் பின்னர் கொவிட் தடுப்பூசி ஏற்றிக் கொள்ளாதவர்களை கண்டுபிடிக்க சட்டம் கொண்டு வரவும் அரசாங்கம் திட்டமிட்டு வருகின்றது.

இன்று வரையில் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ள மொத்த தொகையை பார்க்கும் போது 30 வயதிற்கு மேற்பட்ட முதலாவது தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை 01 கோடி 28 இலட்சம் (55வீதம்) ஆகும். இரண்டாவது தடுப்பூசி வழங்கப்பட்டுள்ள தொகை 97 இலட்சத்து 53 ஆயிரத்து 853 ஆகும். இது 23வீதம் சற்று உயர்வாகும். அதே நேரம் 30 வயதிற்கு கீழ்பட்டவர்கள் உள்ளடங்களாக தடுப்பூசி வழங்கப்பட வேண்டியவர்களின் வீதம் 44வீதம் ஆகும். இதற்கிடையில் டெல்டா திரிபு மாற்றம் வேகமாக பரவி வருகின்றது. 20 – 30 வயதுக்கு இடைப்பட்ட பருவத்தினருக்கு தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டிருப்பதால் கொரோனா ஒழிப்பு விடயத்தில் புதிய நம்பிக்கை பிறந்திருக்கின்றது.

தற்போதைய நிலையில் அரசாங்கம் பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதா அல்லது கொரோனா வைரஸ் பரவுவதை கட்டுப்படுத்துவதா என்ற இரண்டும் கெட்டான் நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றது. இருந்தாலும் தடுப்பூசி ஏற்றியவர்களாக இருந்தாலும் அல்லது வெளியில் வராமலே வீட்டுக்குள் முடங்கி பாதுகாப்பாக இருந்தாலும் எப்படியாவது கொரோனா தொற்றி உயிரை குடிக்கும் நோயாக மாறி இருக்கின்றமை கவலை தருகின்றது. அண்மையில் முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர கூட இந்த கொரோனாவுக்கு பழியாகியமை அனைவரதும் கவனத்தை ஈர்த்துள்ள பதிவாகும்.

இவ்வாறான ஒரு நிலையிலே அரசாங்கம் கடந்த 2021 செப்டெம்பர் 06 ஆம் திகதி அவசரகால நிலையை நீடிப்பதற்கான பிரேரணையை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியது. இந்த அவசரகால நிலையை நிறைவேற்ற காரணம் நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்படாமல் சமாளிப்பதற்காக என்று காரணம் தெரிவிக்கப்பட்டது. அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்வதற்காக வியாபாரிகள் அரிசி, சீனி, நெல், கோதுமை மா, உற வகைகளை பதுக்கி நாட்டில் அத்தகைய பொருட்களுக்கான தட்டுப்பாட்டை ஏற்படுத்தி விலையை அதிகரிக்க மறைமுகமாக செயற்படுவதால் சுற்றி வளைத்து தேடுதல்களை நடத்தி சட்ட நடவடிக்கை எடுக்க அவசரகால நிலை தேவை என்ற நியாயத்தை அரசாங்கம் முன்வைத்தது.

ஆனாலும் இந்த நியாயத்தை எதிரணி தரப்பு ஏற்கவில்லை. நாட்டில் பேச்சு, எழுத்து, கருத்து வெளிப்பாட்டு மற்றும் கூட்டம் கூடும் சுதந்திரத்தை நசுக்குவதற்காக மேற்கொண்ட ஒரு நடவடிக்கை என்றே எதிர்க்கட்சித் தரப்பினர் கருதுகின்றனர்.

சம்பள உயர்வு கோரி ஏற்கனவே ஆசிரியர்களும் அதிபர்களும் நடத்தியது போன்று எதிர்ப்பு ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்களை நடத்தும் போது இந்த அவசரகால நிலைமையின் கீழ் கட்டுப்படுத்த முடியும் என்பதே பின்புலத்தில் உள்ள யதார்த்தமாக கருதுவதால் அதற்கான எதிர்ப்பும் கிளம்பி இருக்கின்றது. எவ்வாறாயினும் அரசாங்கம் கொரோனா பரவுவதை கட்டுப்படுத்துவது என்ற பெயரிலும் அவசரகால நிலையை பயன்படுத்தியும் அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமானால் அது ஜனநாயக விரோத செயலாகும். மக்களது அடிப்படை உரிமைகளை நசுக்க எடுக்கும் நடவடிக்கையாகும்.

அதனால் அரசாங்கம் பொருளாதார நெருக்கடியை சமாளிப்பது, கொரோனா பரவுவதை கட்டுப்படுத்துவது ஆகிய நடவடிக்கைகளில் அதன் நேர்மை, வெளிப்படை தன்மைகளை பாதுகாப்பதும் மிக முக்கியமானதாகும்.

# செப்டெம்பர் 11



ஆக்கம்:-
-ப்ரியா
ராமநாதன்-




**2001 செப்டெம்பர் 11ஆம் திகதி,** உலகின் தூங்காநகரம் என வர்ணிக்கப்படுகின்ற நியூயோர்க் நகரம் வழக்கம்போல் பரபரப்பாக இயங்கிக்கொண்டிருந்தது. விண்ணை முட்டும் அளவிற்கு ஓங்கியுயர்ந்திருந்த அந்த உலக வர்த்தக மையக் கட்டடங்கள் அன்றைய பொருளாதார நிலையை நிர்ணயிக்க தயாராகிக்கொண்டிருந்தன. சரியாக காலை 8.46 மணியளவில் 110 மாடிகளைக்கொண்ட உலக வர்த்தக மையக் கட்டடத்தின் வடக்கு கட்டடத்தில் 93 மற்றும் 99ஆம் மாடிகளுக்கிடைப்பட்ட பகுதிகளில் திடீரென விமானமொன்று அதிபயங்கர வேகத்துடன் மோதிவெடிக்க, மொத்த நகரமே ஸ்தம்பித்துப்போனது. எண்பத்தியொரு பயணிகள் மற்றும் பதினொரு பணியாளர்களுடன் போஸ்டன் சர்வதேச விமானநிலையத்திலிருந்து லொஸ் ஏஞ்சல்ஸ் விமானநிலையம் நோக்கி பயணித்த அமெரிக்கன் விமானம்-11 மோதி, சரியாக பதினெட்டு நிமிடங்களில் ஐம்பத்தியாறு பயணிகள் மற்றும் ஒன்பது பணியாளர்களுடன் அதே போஸ்டன் விமானநிலையத்திலிருந்து புறப்பட்ட போயின்-175 ரக விமானம் காலை 9 மணியளவில் உலக வர்த்தக மையத்தின் தெற்கு கட்டடத்தில் மோதி வெடித்தது. அமெரிக்காவின் ஆளுமையை உலகிற்கே பறைசாற்றிக்கொண்டிருந்த அந்த கம்பீரக் கட்டடங்கள் சீட்டுக்கட்டுபோல் சரிந்தபோதே இது விபத்தல்ல, ஏதோ அசம்பாவிதம் நடந்துகொண்டிருக்கிறது என்பதை அமெரிக்காவும் உலக நாடுகளும் உணரத்தொடங்கின. அதேவேளை, மூன்றாவதாக அமெரிக்காவின் இராணுவத் தலைமையகமான பென்டகனும் தாக்கப்பட்டது.

கடத்தப்பட்ட நான்காவது விமானம் பென்சில்வேனியா மாகாணத்தில் வெட்டவெளியொன்றில் வீழ்ந்து நொறுங்கியது. காரணம், விமானத்திலிருந்த பயணிகள் தீவிரவாதிகளுடன் கடுமையாக சண்டையிட்டதால் விமானம் நிலைகுலைந்து வயல்வெளியில் வீழ்ந்ததாக தகவல் வெளியாகியது. நான்காவது விமானத்தை கடத்திய தீவிரவாதிகள் எங்கு தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்தனர் என்பதற்கு இன்றுவரை விடையில்லை. இந்த நான்கு தாக்குதல்களிலும் சுமார் மூவாயிரம் உயிர்கள் மடிய இருபத்தையாயிரத்திற்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். அடுத்த சிலமணிநேரத்தினுள் தாக்குதல்களுக்கு தாங்கள் பொறுப்பேற்பதாக 'அல்கொய்தா' இயக்கம் பகிரங்கமாக அறிவித்தது. பலஸ்தீனத்தை ஒடுக்க இஸ்ரேலுக்கு அமெரிக்கா உதவுவது, ஈராக் மீதான பொருளாதாரத் தடை, காஷ்மீர் இஸ்லாமியர்களுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு ஆதரவு கொடுப்பது, சவூதி அரேபியாவில் அமெரிக்கப் படைகள் முகாமிட்டிருப்பது போன்ற அடுக்கடுக்கான காரணங்கள் தாக்குதலின் பின்னணியாக கூறப்பட்டது அல்கொய்தாவால்.

இதனையடுத்து அல்கொய்தா இயக்கத்தின் தலைவரான ஒசாமா பின்லேடனை களையெடுக்க களமிறங்கியது அமெரிக்கா. தீவிரவாதத்திற்கு எதிரான சர்வதேச போரை பிரகடனப்படுத்தினார் ஜனாதிபதி புஷ். யாருமே நுழையமுடியாத இந்துகுஷ் பள்ளத்தாக்கில் பதுங்கியிருந்த ஒசாமாவை ஒப்படைக்குமாறு ஆட்சிபீடத்திலிருந்த தலிபான்களை எச்சரித்தது அமெரிக்கா. 2001 டிசம்பர் 07 ஆப்கான் மீது போர்த்தொடுக்க, பிரிட்டன், கனடா மற்றும் நேட்டோ படைகள் அமெரிக்காவுடன் கைகோர்த்தன.

தலிபான்கள் விரட்டியடிக்கப்பட்டு ஆப்கானை தன்வசப்படுத்திய அமெரிக்காவின் நீண்டநெடிய தேடுதலில் ஒசாமா சிக்காத ஏமாற்றத்தில் ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுஸைன் மீது பார்வையை திருப்பியது அமெரிக்கா. பேரழிவு இரசாயன ஆயுதங்களை குவித்து வைத்திருப்பதாக குற்றஞ்சாட்டி 2003 மார்ச் 20 அன்று ஈராக் மீது போர்தொடுத்த அமெரிக்கா மற்றும் பிரிட்டன் கூட்டுப்படைகள் ஒருவழியாக ஈராக்கை கைப்பற்றி பல மாத தேடுதல் வேட்டையில் 2003 டிசம்பர் 13 'திக்ரிக்' நகரில் பதுங்குகுழியொன்றில் பதுங்கியிருந்த சதாமை கைதுசெய்து நீதிமன்ற விசாரணைக்குப்பின் 2006 டிசம்பர் 30 தூக்கிலிட்டது. (ஆனால், உலக வர்த்தக மைய தாக்குதலின் பின் தீவிரவாதத்திற்கு எதிரான சர்வதேச போர் என்கிற பெயரில் மறைமுகமாக மதவாத தீவிரவாதத்தை கையிலெடுத்துவிட்டதாக அமெரிக்கா மீது விமர்சனங்கள் எழாமலுமில்லை)

பல்வேறு இடங்களிலும் ஒசாமாவை சல்லடையிட்டு தேடிக்கொண்டிருந்த CIAவிற்கு 2010ஆம் ஆண்டு பின்லேடனின் பதுங்கிடம் பற்றி ஓர் இரகசியத் தகவல் கிடைத்தது. பாகிஸ்தானிலுள்ள 'அபோதாபாத்' என்கிற இடத்தில் பெரும் சுவர்கள் அரணாக அமைந்த அடுக்குமாடிக் குடியிருப்பொன்றில் அவர் பதுங்கியிருப்பதாக கிடைத்த தகவலின்படி, இம்முறை பாகிஸ்தானுக்கு தெரியாமலே (ஒசாமா தங்கள் நாட்டில் இல்லை என்றே பாகிஸ்தான் மறுத்துவந்த நிலையில்) தாக்குதல் நடத்துவதென அமெரிக்காவால் தீர்மானிக்கப்பட்டது. பின்லேடன் தங்கியிருந்த வீட்டில் எந்தவித நவீன தொலைத்தொடர்பு சாதனங்களும் இருக்கவில்லை. காரணம், தொலைத்தொடர்பு சாதனங்களின் அலைக்கற்றையினால் ஏற்படும் சமிக்ஞையினால் தான் இருக்கும் இடத்தை அமெரிக்கா கண்டுபிடித்துவிடும் என்கிற முன்னெச்சரிக்கையினால் வெறும் கடிதத்தொடர்பு மூலமாகவே தன்னோடு நெருக்கமானவர்களுடன் தொடர்புவைத்துக்கொண்டிருந்தார் பின்லேடன். தங்களிடமிருந்த அதிநவீன செயற்கைகோள் மூலம் பல மாதங்களாக அந்த வீட்டினை கண்காணித்துக்கொண்டேயிருந்த CIA அங்கே ஒசாமா இருப்பதை உறுதிப்படுத்திக்கொண்டது. அடுத்து தாக்குதலை திட்டமிட்டது. 'Navy seal' படையிலிருந்து இரகசியப் படையொன்று உருவாக்கப்பட்டு 'operation Neptune spear' என தாக்குதலுக்கு பெயரிடப்பட்டது.






ஒசாமாவை உயிருடன்தான் பிடிக்கவேண்டுமென்றில்லை. சுட்டுப் பிடித்தாலும் பரவாயில்லை என்பதே படையினருக்கு பிறப்பிக்கப்பட்ட கட்டளை.

ஒரு நாட்டுக்குள் புகுந்து அந்த நாட்டுக்கே தெரியாமல் தாக்குதல் நடத்துவது ஒன்றும் அவ்வளவு எளிதல்லவே. அதிலும் இஸ்லாமிய நாடான பாகிஸ்தானுக்குள் புகுந்து அந்த நாட்டுக்கே தெரியாமல் எப்படி தாக்குதல் நடத்துவது என்கிற சிறப்புத்திட்டமொன்றை தயாரித்தது அமெரிக்க உளவுத்துறை. பிற நாடுகளின் ராடர்களின் கண்களில் சிக்காமல் நழுவிப் பறக்கும் பிரத்தியேக ஹெலிகொப்டர்களை பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டது. தாக்குதல் நடத்தும்போது அக்கம்பக்கத்து வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டால் அது அமெரிக்க இராணுவத்திற்கு பெரும் சிக்கல்களை ஏற்படுத்திவிடும் என்பதால் அதி சிரத்தையெடுத்தது CIA. 2011 மே 02 நள்ளிரவுநேரம் பாகிஸ்தானை ஒட்டியுள்ள ஆப்கான் எல்லையிலிருந்து பாகிஸ்தான் ரேடார்களின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு உள்ளே புகுந்த அமெரிக்க ஹெலிகொப்டர்கள் சரியாக நள்ளிரவு ஒரு மணிக்கு ஊரே அடங்கியநேரத்தில் அந்த மர்மவீட்டுக்குள் இறங்கி அதிரடி தேடுதல் நடத்தின. அடுத்த சில நிமிடங்களில் துப்பாக்கிகள் சரமாரியாக வெடித்தன. எனினும், சைலென்சர் பொறுத்தப்பட்டிருந்தமையால் பெரிதாக ஒலி எழவில்லை. நிராயுத பாணியாக இருந்த ஒசாமா தலையில் குண்டுபாய்ந்து கொல்லப்பட்டார். பின்லேடனைக் காப்பாற்ற மனித கேடயமாக அவரை மறைத்துநின்ற ஒரு பெண்ணும் துப்பாக்கிக்குண்டுகளுக்கு பலியானார். தாக்குதலில் நான்கு ஆண்களும் ஒரு பெண்ணும் மரணித்தனர். பின்னர் சுமார் நாற்பது நிமிடங்கள் வீடு முழுவதும் சல்லடைபோட்டு சலித்தெடுக்கப்பட்டு முக்கியமான பல ஆவணங்களும் கைப்பற்றப்பட்டு பின்லேடனின் உடலுடன் மீண்டும் ஹெலிகொப்டர்கள் புறப்படத் தயாரானபோது, திடீரென ஒரு ஹெலிகொப்டர் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இயங்கமறுக்க அதை வெடிக்கச் செய்துவிட்டு கிளம்பியது அமெரிக்க இராணுவம்.

காரணம், அந்த ஹெலிகொப்டரின் இரகசியம் பாகிஸ்தானுக்கு கிடைத்துவிடக் கூடாது என்பதுதான். இந்த அனைத்து நிகழ்வுகளையும் வெள்ளைமாளிகையின் ஓர் அறையினுள் இருந்து நேரடியாக பார்த்துக்கொண்டிருந்தார் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா. அவருடன் வெளியுறவுத்துணை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் மற்றும் தேசிய பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த சில முக்கிய அதிகாரிகள் மட்டுமே உடனிருந்தனர்.

பின்லேடனின் சடலம் ஆப்கானிஸ்தானிலுள்ள அமெரிக்க இராணுவ முகாமக்கு கொண்டுசெல்லப்பட்டு அந்த உடல் ஒசாமாவினுடையதுதானா என பரிசோதிக்கப்பட்டது . மரபணுசோதனை நடத்தப்பட்டபின், அந்த உடலுக்கு இஸ்லாமிய முறைப்படி சடங்குகள் நடத்தப்பட்டு வெள்ளைத்துணியால் போர்த்தி படகில் வைத்து கடலில் மூழ்கடிக்கப்பட்டதாகவும், உடற்கூறு எதுவும் செய்யப்படவில்லை எனவும் அறிவித்தது அமெரிக்க இராணுவம்.

தாக்குதல் நடந்து ஐந்து தினங்களுக்குப் பின் 2011 மே 06 பின்லேடன் இறந்துவிட்டதை அதிகாரபூர்வமாக அறிவித்தது அல்கொய்தா. ஒவ்வொரு ஆண்டும் உலக வர்த்தக மைய தாக்குதல் நினைவுதினம் அனுஷ்டிக்கப்படும்போதும், அல்கொய்தா தீவிரவாத அமைப்பும் தாக்குதல் சம்பவ பின்னணியும் நிழலாடிவிட்டே செல்கின்றன. ஆயுதப் போராட்டங்கள் எந்தவிதத்திலும் பிரச்சினைக்குத் தீர்வாகாது என்பதற்கு இன்னுமொரு சரித்திரச்சான்றே இந்தத் தாக்குதலும். ஆயுதத்தால் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாது, ஆயுதம் ஏந்தியவனுக்கு ஆயுதத்தால்தான் மரணம் என்கிற உண்மை இன்றளவிலும் மெய்ப்பிக்கப்பட்ட வண்ணமே உள்ளது.



# திருகோணமலையில் இதுவரை 60 குழந்தைகளுடன் 5 வயதுக்குட்பட்ட 169 சிறுவர்களுக்கு கொரோனா

(சீனக்குடா நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தில் இதுவரை 10 ஆயிரத்து 931 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளதுடன், 291 பேர் பலியாகியிருப்பதாகவும் திருகோணமலை பிராந்திய சுகாதார அலுவலகத்தால் வெளியிடப்பட்டுள்ள கொரோனா நிலைவர நாளாந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, இந்த மொத்த தொகையில் 6 மாதங்களுக்கு குறைவான 25 குழந்தைகளும் 6 மாதத்துக்கும் ஒரு வருடத்துக்கும் இடைப்பட்ட குழந்தைகள் 35 பேரும் 1 - 5 வயதுக்கு இடைப்பட்ட 169 சிறுவர்களும் பாதிக்கப்பட்டிருப்பதோடு, 65 வயதுக்கு மேற்பட்டோர் 443 பேரும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அத்தோடு, 158 கர்ப்பிணித் தாய்மார்களும் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மேலும், இதுவரை 9 ஆயிரத்து 940 பேர் பூரண குணமடைந்திருப்பதோடு, 350 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். அவர்களில்41 பேர் அவசரசிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்தோடு, இந்த மாதம் கடந்த எட்டு தினங்களில் (செப்டெம்பர் 1 - 8 வரை) இந்த மாவட்டத்தில் ஆயிரத்து 116 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகி இருப்பதாகவும், இந்தக் காலப்பகுதிக்குள் 43 பேர் பலியாகியிருப்பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கடந்த 24 மணிநேரத்தில் (செப்டெம்பர் 8 வரை) 159 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர். இதில் ஆண்கள் 92 பேரும் பெண்கள் 67 பேரும் அடங்குவதுடன், 11 மரணங்களும் பதிவாகியுள்ளன.

# அட்டாளைச்சேனை கோணாவத்தை ஆற்றில் இரு நாட்களாக இறந்து மிதக்கும் மீன்கள்



(அட்டாளைச்சேனை நிருபர்)

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் அமையப்பெற்றுள்ள கோணாவத்தை ஆற்றிலுள்ள மீன்கள் கடந்த இரு நாட்களாக திடீரென இறந்து மிதந்து வருவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாற்றின் மூலம் பல்லாயிரக் கணக்கான நெல் விவசாயச் செய்கை இடம்பெற்று வருவதோடு, இவ்வாற்றில் மீனவத் தொழிலில் ஈடுபட்டுவரும் பல நூற்றுக்கணக்கானோரின் வாழ்வாதார தளமாகவும் அட்டாளைச்சேனை கோணாவத்தை ஆறு இருந்துவருகின்றது.

இவ்வாற்றில் முதல் சிறியளவிலான மீன்கள் இறந்து மிதந்து காணப்பட்டதோடு, மாலைவேளையாகும்போது பல்லாயிரக் கணக்கான மீனினங்கள் இறந்து கரையொதுங்கி வருகின்றன. இதனால் இப்பிரதேசத்தில் துர்நாற்றம் வீசி வருவதோடு, இப்பிரதேச மக்களின் இயல்பு வாழ்விலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அம்பாறை மாவட்டத்தில் நீண்ட காலமாக நிலவிவரும் வரட்சியுடனான காலநிலை காரணமாக இவ்வாற்றுப் பகுதியில் உவர்த்தன்மை ஏற்பட்டமை மீனினங்கள் இறப்பதற்கு காரணமாக இருக்கக்கூடும் எனவும், ஆற்றுநீரில் ஏதேனும் இரசாயனப் பதார்த்தங்கள் சேர்வதனாலும் இதுபோன்ற சம்பவங்கள் நிகழக் காரணமாக அமையலாம் எனவும் பிரதேச மக்களும் துறைசார்ந்தோரும் தெரிவிக்கின்றனர்.

இதுபோன்று இதற்கு முன்னர் இவ்வாறு பெருந்தொகையான மீனினங்கள் இறந்து கரையொதுங்கவில்லை எனவும் இவ்வாறு பல்வேறு இன மீன்கள் இறந்து கரையொதுங்குவதானது தமக்கு மிகுந்த அச்சத்தினை ஏற்படுத்தியுள்ளதாகவும் கரையோர பிரதேச மக்களும் மீனவர்களும் தெரிவிக்கின்றனர்.

# கிண்ணியாவில் பதுக்கிவைத்திருந்த 120 சீனி மூடைகள் கண்டுபிடிப்பு

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை - கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கச்சகொடித்தீவு பிரதேசத்தில் சூட்சமமான முறையில் மறைத்துவைக்கப்பட்டிருந்த 50 கிலோ நிறையுடைய 120 சீனி மூடைகள் நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப்பட்டதுடன், அவற்றுக்கு முத்திரை இடப்பட்டுள்ளதாக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்ஷன பாண்டிகோரல தெரிவித்தார்.

இரகசியமாக கிடைக்கப்பெற்ற தொலைபேசி அழைப்பையடுத்து குறித்த பிரதேசத்திற்கு பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை உத்தியோகத்தர்கள் அனுப்பப்பட்டு குறித்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது பிறிதொரு பொருட்கள் அடங்கிய களஞ்சியசாலையில் குறித்த 120 சீனி மூடைகளும் பதுக்கிவைக்கப்பட்டிருந்ததாகவும் உரிய நபருக்கு எதிராக பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்டத்தின்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் மாவட்ட அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.

கடந்த சில தினங்களாக மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட சில பொருட்கள் கட்டுப்பாட்டு விலைக்கு மேலதிகமாக விற்கப்பட்டு வருவதாக தமக்கு முறைப்பாடு பொதுமக்களால் செய்யப்பட்டுள்ளதாகவும் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை உத்தியோகத்தர்களுக்கு அவ்வாறான பிரதேசங்களை இனங்கண்டு சுற்றிவளைப்புகள் மேற்கொண்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு தாம் அறிவுறுத்தல் வழங்கியதாக இதன்போது அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.

தற்போதைய சூழ்நிலையில் கையிருப்பில் பொருட்களை வைத்துக்கொண்டு அவற்றை மொத்த, சில்லறை அடிப்படையில் விற்பனைசெய்யாமல் செயற்கையான முறையில் பொருட்களுக்கு தட்டுப்பாட்டை ஏற்படுத்தி அவற்றை பதுக்கி வைத்திருப்பது அனுமதிக்க முடியாது. மக்கள் பொருளாதார அசௌகரியங்களுக்கு மத்தியில் தற்போது வாழ்ந்து வருகின்றனர். அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலைக்கு பொருட்களை வழங்கவேண்டிய தேவை காணப்படுகின்றது. இவ்வாறான சுற்றிவளைப்புகள் மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் தொடராக மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் பாவனையாளர்களது நலன் தொடர்பில் கூடிய அக்கறைகொண்டு இச்செயற்பாட்டை தொடர்ச்சியாக



மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதாகவும் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை உத்தியோகத்தர்களுக்கு உரிய அறிவுறுத்தல் தம்மால் இது தொடர்பில் வழங்கப்பட்டுள்ளதாகவும் மாவட்ட அரசாங்க அதிபர் இதன்போது தெரிவித்தார்.

மாவட்டத்தின் ஏதாவதொரு பிரதேசத்தில் அறிவிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலைக்கு மேலதிகமாக பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றபோதும் அதேபோன்று நெல் அளவுக்கதிகமான முறையில் பதுக்கி வைக்கப்பட்டிருப்பது அல்லது களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருப்பது தொடர்பான விபரங்கள் மக்களுக்கு தெரியுமெனின் அது குறித்து மாவட்ட செயலகத்தையோ, பிரதேச செயலகத்தையோ அல்லது பாவனையாளர்கள் அதிகார சபையையோ தொடர்புகொண்டு குறித்த தகவல்களை வழங்குமாறு இதன்போது அரசாங்க அதிபர் மக்களிடம் வேண்டிக்கொண்டார்.

# ஏறாவூரில் ஐஸ் - கேரள கஞ்சாவுடன் மூவர் கைது - மோட்டார்சைக்கிள் மீட்பு

(மட்டக்களப்பு நிருபர்)

ஏறாவூரில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தைப் பயன்படுத்தி 16,000 மில்லிகிராம் கேரள கஞ்சா மற்றும் 400 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளைக் கடத்திய மூவர் நேற்று முன்தினம் ஏறாவூர் பகுதியில் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளும் மீட்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி ஐ.பி. பண்டார தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது 16,000 மில்லிகிராம் கேரள கஞ்சா, 400 மில்லிகிராம் ஐஸ் ஆகியவற்றுடன் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து மோட்டார் சைக்கிளும் மீட்கப்பட்டுள்ளது.

கைதான நபர்களை போதைப்பொருட்களுடன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.





# மட்டக்களப்பில் இயந்திர படகுசேவையை வழங்க 40 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு



(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டு பகுதிகளில் புதிய இயந்திர படகு சேவையை வழங்குவதற்காக 40 மில்லியன் ரூபா நிதியை அரசாங்கம் ஒதுக்கீடுசெய்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் படுவான்கரையையும் எழுவான் கரையையும் இணைக்கும் வகையில் அம்பிளாந்துறை - குருக்கள்மடம், மண்டூர்- குருமண்வெளி படகு சேவைகள் நீண்டகாலமாக நடைபெற்றுவருகின்றன.

குறித்த பகுதியில் பயன்படுத்தப்படும் இயந்திரப் படகுகள் நீண்ட காலமாக பழுதடைந்த நிலையில் காணப்படுவதால் அதனை திருத்தியமைக்க உதவுமாறு கோரிக்கைகள் விடுக்கப்பட்டுவந்துள்ள நிலையில், இது தொடர்பில் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனின் கவனத்திற்கு கொண்டுசெல்லப்பட்டதை தொடர்ந்து அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அம்பிளாந்துறை துறை பகுதிக்குச் சென்ற இராஜாங்க அமைச்சர் அங்கு முன்னெடுக்கப்படும் படகு சேவையை பார்வையிட்டதுடன், குறித்த பகுதியின் நிலைமைகள் தொடர்பிலும் கேட்டறிந்துகொண்டார்.

வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட பிரதம பொறியியலாளர் றிஸ்வி மற்றும் மண்முனை தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் என்.புஸ்பலிங்கம் உட்பட பலர் இணைந்திருந்தனர்.

இதன்போது குறித்த இறங்குதுறைப்பகுதியை புனரமைப்பதற்கான நடவடிக்கையையும் மேற்கொள்ளுமாறு வீதி அபிவிருத்தித் திணைக்களத்திற்கு பணிப்புரைகளை விடுத்துள்ளார்.

நவீன வகையிலான இயந்திரப் படகு இரண்டை கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் 40 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் இதன்போது தெரிவித்தார்.

# நூரளையில் மாயமான யுவதி 5 நாட்களின் பின்னர் கண்டுபிடிப்பு

நுவரெலியா, டன்சினன் காட்டுப் பகுதியில் விறகு சேகரிக்கச் சென்றபோது காணாமல்போன 25 வயது யுவதி, ஐந்து நாட்களுக்குப் பிறகு கிக்கிலியமான காட்டுப்பகுதியில் நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப்பட்டதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா வட்டபஹால பகுதியில் வசிக்கும் ஜெயபாலன் கற்பகதாரணி (வயது 25) என்பவரே மீட்கப்பட்டுள்ளார்.

தனது தாயுடன் டன்சினன் காட்டில் கடந்த 05ஆம் திகதி விறகு தேடச் சென்றபோது யுவதி காணாமல்போனார்.

நுவரெலியா இராணுவத்தினர், நுவரெலியா பொலிஸ் மற்றும் டன்



சினன் தோட்டத் தொழிலாளர்கள் காணாமல்போன யுவதியை ஐந்து நாட்களாக தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

நுவரெலியா சாந்திபுர பகுதியில் வசிப்பவர்கள் நடத்திய தேடுதல் நடவடிக்கையின்போது நுவரெலியா கிக்கிலியமான ரிசர்வ் பகுதியில் யுவதியின் உதவிக்குரல் கேட்டதையடுத்து, இராணுவத்தினருக்கு தகவல் வழங்கப்பட்டது.

இந்நிலையில், இராணுவத்தினரால் அவர் மீட்கப்பட்டதுடன், 5 நாட்களாக பட்டினியுடனிருந்த யுவதிக்கு கிராம மக்கள் உணவு மற்றும் பானம் கொடுத்து பின்னர் நுவரெலியா பொலிஸில் ஒப்படைக்கப்பட்டு, தற்போது நுவரெலியா பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# நூறாவது ஆண்டில் மரியாயின் சேனை

LEGION OF MARY
FOUNDED 7 SEPTEMBER 1921

மிகச்சிறந்த முறையில் கடவுளை அன்பு செய்வது எப்படியென்றும், இவ்வுலகில் அந்த அன்பைப் பரப்பி ஆன்மாக்களுக்குத் தொண்டுபுரியுமாறு உழைப்பது எப்படியென்றும் யோசித்தார்கள். அந்த ஆலோசனையின் பயனாக மரியாயின் சேனை உருவானது. (சேனை கைநூலிலிருந்து)

இன்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன் 1921ஆம் ஆண்டு செப்டெம்பர் 7ஆம் திகதி அயர்லாந்தின் டப்ளின் மாநகரில் மீரா இல்லத்தில் 15 பேருடன் மிக மிக எளிமையான முறையில் மரியாயின் சேனை ஆரம்பிக்கப்பட்டது. உலகளாவிய ரீதியில் கிட்டத்தட்ட 170 நாடுகளில் தன் கிளைகளைப் பரப்பி பல இலட்சக்கணக்கான உறுப்பினர்களுடன் கத்தோலிக்க திருச்சபையில் பொதுநிலையினருக்கான ஓர் அப்போஸ்தலிக்க இயக்கமாக இயங்கிவரும் மரியாயின் சேனை அன்றுபோல் இன்றும் கூட அடிப்படை ஒழுங்குமுறைகளில் துளியளவும் மாற்றமின்றி உதாரணமாக வாராந்தம் கூட்டம் வாராந்தப் பணி எனும் அடிப்படையில் நூறு ஆண்டுகளாக இடைவிடாது இயங்கிவருவது மரியாயின் இடைவிடா பரிந்துரையால் ஆண்டவர் இயேசு நிகழ்த்திய மாபெரும் அற்புதமே என்றால் அது மிகையாகாது.

பொதுவாக ஓர் அமைப்பை உருவாக்குதற்கு முன் ஒருசிலர் அமர்ந்து பல நாட்கள் ஆராய்ந்து சட்டதிட்டங்களை உருவாக்கி பின்னர் அந்த அமைப்புக்கு ஒரு பெயர் சூட்டி ஆரம்பிப்பார்கள். ஆனால், மரியாயின் சேனையின் தோற்றமோ, இந்த இயற்கை நியதிக்கு முற்றிலும் மாறுபட்டதாக அமைந்திருந்தது.

ஒரு மாலைவேளையில் அவர்கள்





ஒன்றுகூடினர். மேசை மீது ஓர் எளிய பீடம் அமைக்கப்பட்டது. தூய வெண்ணிறத் துணியின் மீது அமல உற்பவ அன்னையின் திருச்சுரூபம் வைக்கப்பட்டு சுரூபத்தின் இருமருங்கிலும் பூச்சாடிகளில் பூங்கொத்துகளுடன் இரு தீபக்கால்களில் மெழுகுதிரிகள் எரிந்துகொண்டிருந்தன. சேனைப் பீடத்தைப் பற்றி முன்கூட்டியே முடிவெடுக்கப்படவில்லை. நேரத்தோடு வந்த பெண்களில் ஒருவர் செய்திருந்த எளிய தயாரிப்பு அது. மரியாயின் சேனை ஒரு படை. போர்வீரர்கள் ஒன்றுகூடும் முன்னே சேனையின் அரசி அங்கே அவர்களுக்காக காத்திருக்கின்றார் என்ற உண்மையை துலக்கிக் காட்டும் வகையில் அப்பீடம் அமைந்திருந்தது.

அன்று 13 பெண்களும் சேனை உருவாக இறைவன் கருவியாக பயன்படுத்திய இறைபணியாளர் பிராங்க் டஃப் மற்றும் அருட்பணியாளர் மைக்கல் டோஹர் ஆகியோர் ஒன்றுசேர்ந்து முழந்தாள் படியிட்டு தூய ஆவியே எழுந்தருளி வாரும் எனும் செபத்தை செபித்து வரலாற்று முக்கியத்துவம்மிக்க சேனையின் முதல் கூட்டத்தை ஆரம்பித்துவைத்தார்கள். அவர்கள் வெறுமனே ஒரு பக்திச் சபையை உருவாக்கவில்லை. மாறாக, தன் அயலானில் கிறிஸ்துவையே கண்டு அவருக்கே பணிபுரியும் அப்போஸ்தலிக்க இயக்கத்தை ஆரம்பித்து வைத்தனர்.

உலகளாவிய ரீதியில் மரியாயின் சேனை ஆரம்பிக்கப்பட்டு பல நாடுகளில் தனது கிளைகளை பரப்பியதையடுத்து 1936ஆம் ஆண்டு இலங்கையில் மரியாயின் சேனை ஆரம்பிக்கப்பட்டது. யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள பாண்டியன் தாழ்வு என்ற சிற்றூரில் புனித அன்னம்மாள் ஆலயத்தில் அப்போதைய பங்குத்தந்தையாக இருந்த அமரர் அருட்திரு ஜே.ஏ.இராஜநாயகம் அடிகளாரின் வழிகாட்டலில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இலங்கையின் முதலாவது மரியாயின் சேனை பிரசீடியம் ஆரம்பிக்கப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

உறுப்பினர்களை புனிதப்படுத்துவதன் வாயிலாக கடவுளை மகிமைப்படுத்துவதே சேனையின் நோக்கமாகும். “நீங்கள் தூயோராவதே கடவுளுடைய திருவுளம்” (1தெசலோனிக்கர் 4:3) உங்களை அழைத்தவர் தூய்மையுள்ளவராய் இருப்பதுபோல், நீங்களும் உங்கள் நடத்தையிலெல்லாம் தூய்மையுள்ளவராயிருங்கள். (1 பேதுரு 1:15-16) என்று புனிதத்துவம் பற்றி இறைவார்த்தை ஆணித்தரமாக வலியுறுத்தி நிற்கின்றது.

இறைவார்த்தையின் அடிப்படையில் இவ்வுலகில் மிக முக்கியமானது புனிதம்தான். நாம் அடையவேண்டிய இலக்கும் அதுதான். இறையடியார் பிராங்க் டஃப் கூறுவதுபோல் “நாம் புனிதர்களாக ஆசைப்படுகின்றோம். நம்மைவிட பல்லாயிரம் மடங்கு ஆண்டவர் அதை விரும்புகிறார்” என்கிறார். எனவே, ஒவ்வொருவரையும் புனிதராக அழைப்புவிடுக்கும் மரியாயின் சேனை இந்த நோக்கத்தை அடைவதற்குரிய இரண்டு வழிகளை காட்டித் தருகின்றது. அவை செபமும், சேவையுமாகும்.

மரியாயின் சேனை நூறாவது ஆண்டை கொண்டாடும் இவ்வேளை, இரு கரம் விரித்து சேனையின் உறுப்பினராக சேர உங்களுக்கும் அழைப்பு விடுக்கின்றது.

நீங்கள் சிறுவரானாலும் இளைஞரானாலும் வயது வந்தவரானாலும் முதிர் வயதினரானாலும் உங்களுக்கும் சேனையின் விசேட அழைப்பு உண்டு. வாராந்தம் கூட்டத்தில் பங்குபற்றி பணி செய்யக்கூடியவர்கள் ஊழிய உறுப்பினராகவும், சேர ஆசைதான். ஆனால், கூட்டத்துக்கும் பணிக்கு என்னால் வரமுடியாத சூழ்நிலை இருக்கின்றது என்று கூறுபவர்களுக்கு வீட்டிலிருந்தே செபிக்கும் உதவி உறுப்பினராக சேரும் வாய்ப்புண்டு. எனவே, வாருங்கள் மரியாயின் சேனையில் சேருங்கள். மரியன்னையின் படையில் பணிபுரியும் போர்வீரர் ஆகுங்கள்.

(தகவல்: மரியாயின் சேனையாளர்கள்)

# வணிக உலகம்
Business world



# பில்லியன் கணக்கான பணத்தை ஈட்டக்கூடிய இலங்கையின் இறப்பர் துறை தொடர்பாக கவனம் செலுத்துவோம்

(மனோஜ் உடுகம்பொல – ஆக்கம்)

இலங்கை வசமுள்ள அந்நிய செலாவணி இருப்பு எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டிய சூழ்நிலை நிலவுகின்ற இத்தகைய காலகட்டத்தில், இலங்கை இறப்பர் ஏற்றுமதியில் சரியாக பயன்படுத்தப்படாத விசேட பிரிவுகள் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டிய தேவை எழுந்துள்ளது.

இறப்பர் துறை ஊடாக வெளிநாட்டு நாணயங்கள் ஈட்டுவதை கவனத்தில் கொள்ளும்போது 2024 ஆண்டின்போது துறைக்காக 4.4 பில்லியன் அமெரிக்க டொலர்களை ஏற்றுமதி வருமானமாக பெறுவதற்கு இதற்கு முன்னர் ஏற்றுமதி அபிவிருத்தி சபை இலக்காக கொண்டிருந்தது. அந்த தொகையான அரசாங்கத்தினால் செலுத்தப்பட்ட (2021 ஜுலை மாத கடைசி வாரத்தில்) சர்வதேச இறையாண்மை பத்திரம் (1 பில்லியன் டொலர்கள்) பெறுமதி போன்று 4.4 மடங்காகும்.

மேலும், குறுகிய காலத்திலிருந்து நடுத்தர காலம் வரை மற்றும் நீண்டகாலம் ஆகிய இரண்டு பிரிவுகளிலும் நாட்டின் ஏற்றுமதி வருமானத்தை அதிகரிப்பதற்கு இந்நாட்டு இறப்பர் துறையால் முடியும்.

குறுகிய காலம் என்ற வகையில் இறப்பர் விலைகள் அதிகரித்து சென்றதை காணக் கிடைத்தது என்பதுடன், அதன் பலனாக வருடத்தின் முதலாவது அரையாண்டில் கொழும்பு இறப்பர் ஏலத்தில் இறப்பர் கிலோவிற்கான விலை 300 ரூபாவிலிருந்து 600 ரூபா வரை இரு மடங்காக அதிகரித்தது.

நீண்டகாலமாக கவனிக்கும்போது குணநலன் கொண்ட தரத்திற்கமைய இறப்பர் உற்பத்தி செய்யும் திறமையானது, ஏனைய நாடுகளில் அதனை உற்பத்தி செய்யாமையானது இலங்கைக்கு போட்டித்தன்மை நிறைந்த சந்தையில் சாதக நிலையை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் இறப்பரில் காணப்படும் விசேட தன்மை காரணமாக (உதாரணமாக இயற்கையாகவே சிறந்த இறப்பர் அறியப்படும் கேப் இறப்பர் மற்றும் சோல் கேப் தர இறப்பர் உற்பத்திகள் இலங்கையில் மட்டுமே இடம்பெறுகின்றன) இலங்கை இறப்பருக்காக சர்வதேசத்தில் பெற்றுள்ள இடத்தை மேலும் பலப்படுத்த முடிந்துள்ளது. மேலும், உலகில் பாரிய Industrial solid Tyres ஏற்றுமதி போன்று சத்திர சிகிச்சைகளுக்கு பயன்படுத்தப்படுத்தும் கையுறை ஏற்றுமதி செய்யும் நாடுகள் வரிசையில் இலங்கையும் இடம்பெற்றிருப்பதாக ஏற்றுமதி அபிவிருத்தி சபை குறிப்பிட்டுள்ளது.

### தற்போதுள்ள சவால்கள்

நிகழ்காலத்தில் இறப்பர் துறையானது இரண்டு பிரதான சவால்களை எதிர்நோக்குகின்றது. அதாவது உரத் தட்டுப்பாடு தொடர்பான பிரச்சினை மற்றும் இறப்பர் தோட்டங்களில் பரவும் இலைகளுக்கு அழுத்தம் கொடுக்கும் புதிய நோய்த்தன்மை ஆகும்.

இரசாயன உர இறக்குமதிக்கு தடைவிதித்தமை காரணமாக எதிர்வரும் வருடம் அளவில் உற்பத்தியில் 20 வீதம் குறைவு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் இந்த அழுத்தமானது இன்னும் பல ஆண்டுகளுக்கு நீடிக்கும். பிரச்சினை அதுவாயின் அதன் மிகக் கொடிய நிலை எதுவெனின் கைத்தொழில்துறையானது இன்னும் படுகுழியில் வீழ்வதால் ஏற்படக்கூடிய பொருளாதார மற்றும் வெளிநாட்டு நாணய வருமானத்தை ஈட்டுவதற்கு துறையானது வழங்கும் பங்களிப்பும் குறைவடையும். இலங்கையில் இறப்பர் கைத்தொழிலுடன் தொடர்புபட்டுள்ள பாரிய அளவு மக்களது வாழ்க்கைக்கு (200,000 என மதிப்பிடப்பட்டுள்ளது) இது அழுத்தத்தை கொடுக்கும்.

நிலையான அபிவிருத்தி மற்றும் சிறந்த அறுவடையை பெற்றுக்கொள்வதற்கு இறப்பர் மரத்திற்கு தேவையான போசனைகளை வழங்க வேண்டியது அவசியமாகும். இலங்கையின் இறப்பர் செய்கையானது பரம்பரையாக முன்னெடுக்கப்படுவதால், மண் வளம் குறைவடைந்துள்ளமையே இந்த பிரச்சினைக்கான சிக்கல் நிலையாக உள்ளது. ஆகையால் உரிய அளவு உரம் போடுவது அத்தியாவசியமாகும். இறப்பர் பயிரிடுவோர் மூன்று வருடங்களுக்கு ஒரு தடவை மண் ஆய்வை செய்து இலங்கை இறப்பர் ஆய்வு நிறுவக சிபாரிசுக்கு அமைய தகுதியான உரத்தை பயன்படுத்துவது அத்தியாவசியமாகும். அதற்கமைய இலங்கை இறப்பர் ஆய்வு நிறுவகத்தின் வழிகாட்டல்களை பின்பற்றினால், மரத்திற்கு மேலதிக உரம் போடுவது தேவையற்றது. இதிலுள்ள முக்கிய அம்சம் எதுவெனில், மரக்கறி மற்றும் நெல் போன்ற



மனோஜ் உடுகம்பொல – இறப்பர் விற்பனை சங்கத்தின் உப தலைவர்

ஏனைய போகங்களுடன் ஒப்பிடுவகையில் இறப்பருக்கான நிலப்பரப்பிற்கு பயன்படுத்தும் உர மற்றும் இரசாயனக் குறைவாகும். இதனால் தண்ணீர் வளத்திற்கு ஏற்படும் அழுத்தமும் குறைவாகவே இருக்கும்.

குறுகிய கால அறுவடையை குறைப்பதற்கு மேலதிகமாக இலங்கை இறப்பர் ஆய்வு நிறுவகத்தின் சிபாரிசுக்கமைய பயன்படுத்தாமை இறப்பர் அபிவிருத்தி குறைவவதற்கு காரணமாகும் என்பதுடன், இறப்பர் நடப்பட்டு ஆறு ஆண்டுகள் வரையான காலத்திற்கு அது அழுத்தம் கொடுக்கும். இது இறப்பர் மரத்தின் மொத்த செயற்திறனின் (உற்பத்தி திறன் கொண்ட இறப்பர் மரத்தின் ஆயுள் 30 வருடங்களாகும்) குறைக்கும் என்பதுடன், அதன்மூலம் ஒட்டுமொத்த செயற்திறனும் குறையும்.

மேற்குறிப்பிட்ட காரணிகளுக்கு மேலதிகமாக இலங்கை இறப்பர் செய்கையானது எதிர்கொள்ளும் பூச்சிகள் மற்றும் நோய்களுக்கு எதிராக போரிடுவதற்கு மரத்திற்கு தேவையான சக்தியை மேம்படுத்துவதற்கு உரம் அவசியமாகின்றது.

தற்போது இலங்கையின் இறப்பர் பயிர்ச்செய்கை இடம்பெறும் அனைத்து பிரதேங்களிலும் இறப்பர் பயிர்ச்செய்கைக்கு "Pestalotiopsis" என்ற இலை அழுகி கருகிப்போகும் நோயினால் அதிக அழுத்தம் ஏற்பட்டுள்ளது.

இந்த நோய் காரணமாக இறப்பர் மரங்களிலுள்ள இலைகள் விரைவாக உதிர்ந்து போகும். மீண்டும் மீண்டும் இந்த நோய் காரணமாக பாதிப்புக்கள் ஏற்பட்டபட்டால், 40% வரை அறுவடை குறைவுக்கு அது காரணமாக அமையும். துரதிர்ஷ்டவசம் எதுவெனின், இந்த நோயை கட்டுப்படுத்த அநேக இரசாயனங்களுடன் மேலதிக உரத்தை பயன்படுத்துவதே இதற்கான பிரதான சிபாரிசாக அமைந்துள்ளது. எனினும், இந்த எண்ணம் நிறைவேற்றப்படாமை காரணமாக இந்த பிரச்சினையானது சிக்கல் நிறைந்ததாகவே காணப்படுகின்றது.

### நீண்டகால அழுத்தம்

இறப்பர் மீள மீள பயிரிடுவது மிக முக்கியம்போன்று விலை அதிக செயற்பாட்டை இது கொண்டுள்ளபோதிலும், இறப்பர் துறையின் நடத்தை மற்றும் நிலையியல் தன்மைக்கு இவை பிரதான காரணிகளாக அமைந்துள்ளன. மனங்கவர் இறப்பர் விலையுடன் பயிரிடுபவர்கள் மத்தியில் அதிக அர்ப்பணிப்பு காணப்படுகின்றமையானது உண்மையில் சந்தோஷமான விடயமாகும். இருந்தாலும் மேலும் இறப்பர் பயிரிடுபவர்களை துறையில் ஈர்த்துக்கொள்வது பாரிய பிரச்சினையாக உள்ளது. இது நீண்டகாலமாக துறைக்கான சிறந்த நிலை அல்ல.

மீள நடுவதற்கு தேவையான ஆரோக்கியமான மற்றும் பலமான இறப்பர் மரங்களை உருவாக்குவதற்கு இரண்டு வாரத்திற்கு ஒரு தடவை விசேட உர கலவைகளை செடிகளுக்கு இட வேண்டியது முக்கியமாகும். ஆரம்ப காலத்திற்கு உரம் போதிய அளவு கிடைக்காமையால் மரங்களின் குணநலன்கள் பாதிக்கப்படும் என்பதுடன், எதிர்வரும் 30 ஆண்டுகளுக்கு இந்த இறப்பர் மரங்கள் உற்பத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் என்பதால் இறப்பர் உற்பத்திகளுக்கு நீண்டகாலம் எதிர்மறையான அழுத்தத்தை கொடுக்கக்கூடும்.

### மாற்று தீர்வு

இலங்கை இறப்பர் ஆய்வு நிறுவகம் மற்றும் இறப்பர் பெருந்தோட்ட நிறுவனம் இணைந்து உரங்களை குறைவாக பயன்படுத்துவதற்காக பல்வேறு திட்டங்களை செயற்படுத்தியுள்ளது. உதாரணமாக முதிர்ச்சியடையாத இறப்பர் பகுதிகளில் இறப்பர் ஆலையைச் சுற்றி புதைக்கப்பட்ட ஒரு நுண்குழாயைப் பயன்படுத்தி மெதுவாக வெளியிடும் உரங்களை அறிமுகப்படுத்துவதற்கான சோதனைகள் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளன. இதுவரை இந்த நுட்பம் உர பயன்பாட்டை வியத்தகு முறையில் குறைக்க முடியும் என்று தோன்றுகிறது. இத்தகைய உத்திகள் உரத்தின் உறிஞ்சுதல் விகிதத்தை அதிகரிக்க உதவுகிறது மற்றும் உரங்கள் மற்றும் உழைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் தோட்டங்களின் பணத்தை சேமிக்க முடியும். எனவே, அவை வணிக அளவில் சாத்தியமானால் தோட்டங்களால் இவை ஏற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய மாற்று ஊடாக இரசாயன பொருட்கள் பயன்பாட்டினால் சுற்றாடலுக்கு ஏற்படும் அழுத்தத்தை கவனத்திற்கொண்டு குறைக்க முடியும் என்பதுடன், அதனூடாக கார்பன் உரத்திற்கு பதிலாக பாரம்பரிய உரத்தை மாற்றீடாக பயன்படுத்த முடியும்.

மண்ணின் இயற்பியல், இரசாயன மற்றும் உயிரியல் பண்புகளை மேம்படுத்துவதற்காக கார்பன் உரத்தை பயன்படுத்த சிபாரிசு செய்யப்பட்டிருந்தாலும், இறப்பர் வளர்க்கப்படும் அநேக இடங்களில் கார்பன் உரத்தை பயன்படுத்தி பின்னர் பூச்சிகள் மற்றும் இலை அழுகி கருகிப் போகும் நோய் நிலை அதிகரித்து சென்றதையும் காண முடியும்.

இதனால் ஏற்படும் துரதிர்ஷ்டவசமான நிலைமை எதுவெனின், பாரம்பரிய உரத்திற்கு பதிலாக பயன்படுத்தக்கூடிய கார்பன் உரத்திற்கு மாற்றீட்டை இன்னும் இலங்கை இறப்பர் ஆய்வு நிறுவகம் பரிந்துரைக்காமை பிரச்சினையாக உள்ளது.

இறப்பர் துறையானது தற்போது அதிக சவால்களை எதிர்கொண்டு வருகின்றது. வெளிநாட்டு நாணயங்களை வருமானமாக ஈட்டும் மற்றும் நாட்டு மக்களின் குறிப்பிடடப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பிரிவாக அது உள்ளது. ஆகையால் அத்துறை தொடர்பாக கவனம் செலுத்த வேண்டியது முக்கியம்.

உள்ளூர் உற்பத்தி இறப்பர்களில் உள்ள உயர் இயற்கை குணநலன்கள் மற்றும் ஏனைய நாடுகளில் காணப்படாத குணநலன்கள் அதியுயர் கொண்ட இறப்பர் உற்பத்தி செய்வதற்கு இலங்கையிடம் நிலவும் திறன் காரணமாக நாட்டிக்கு போட்டித்தன்மை நிலவும் நன்மைகள் கிடைத்துள்ளது. எவ்வாறாயினும் உரம் தொடர்பாக துறையில் தற்போது உள்ள தீர்மானமிக்க குறுகிய கால மற்றும் நீண்டகால சவால்களுக்கு தீர்வு வழங்காவிடின் இந்த நிலைமையை முழுமையாக அடைய முடியாது போகலாம்.

தொழில்துறையின் பங்குதாரர்கள் அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ள மற்றும் சாத்தியமான தீர்வுகளைக் காண ஆர்வமாக உள்ளனர். உரையாடல், ஒத்துழைப்பு மற்றும் ஒத்துழைப்புடன், அனைத்துத் தரப்பினருக்கும் இணக்கமான ஒரு தீர்வைக் காணலாம். இது தொழில்துறையை அதன் உண்மையான திறனுக்கு உயர்த்தும் என்று நாங்கள் நம்புகிறோம்.

ஆக்கம் எழுதுபவர் தொடர்பாக:

மனோஜ் உடுகம்பொல இறப்பர் துறை தொடர்பாக 30 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தை கொண்டுள்ளார். அவர் இறப்பர் விற்பனை சங்கத்தின் தற்போதைய உப தலைவராவார். புசல்லாவை பெருந்தோட்ட நிறுவனத்தின் இறப்பர் துறையின் பிரதான செயற்பாட்டு அதிகாரியாவார். வயம்ப பல்கலைக்கழத்தின் முன்னாள் மாணவரான அவர் MBA பட்டதாரியாவார்.
வியாபார முகாமைத்துவம் தொடர்பாக முதுகலை பட்டமும் பெற்றுள்ளார். அத்துடன் அவர் தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் பெருந்தோட்ட முகாமைத்துவம் தொடர்பான டிப்ளோமாவையும் பயின்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் கருவிகள் பற்றி சிறிய - நடுத்தர தொழில்துறையினருக்கு (SME) இணையவழி கருத்தரங்கு (Webinar) நடத்திய கொமர்ஷல் வங்கி



"வர்த்தகத்தில் டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் டிஜிட்டல் கருவிகளின் பாவனை" எனும் தொனிப் பொருளில் கொமர்ஷல் வங்கி அண்மையில் தனது சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி பிரிவு (SME) வாடிக்கையாளர்களுக்கும், ஏனையவர்களுக்குமான இணையவழி நேரலை கருத்தரங்கொன்றை நடத்தியது.

சூம் தொழில்நுட்பம் வழியாக 90 நிமிடங்கள் இடம்பெற்ற இந்த இணையவழி கருத்தரங்கில் ரோர் டிஜிட்டல், குட் மார்கெட், வங்கியின் கார்ட் பிரிவு, சில்லறை உற்பத்திகள் மற்றும் டிஜிட்டல் அலைவரிசைகள் திணைக்களம் என்பன பங்கேற்றதோடு, சிங்களம் மற்றும் ஆங்கில மொழி மூலமான கேள்வி-பதில் அமர்வு ஒன்றும் இடம்பெற்றது. செட்பொக்ஸ் வழியாக பங்கேற்பவர்களின் ஒருங்கிணைப்பு ஊக்குவிக்கப்பட்டது. வங்கியின் ஊழியர் அபிவிருத்தி மையத்திலிருந்து நடத்தப்பட்ட இந்நிகழ்வில் செய்திகளை அனுப்புவதற்கான ஆற்றல்களும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்நிகழ்வு பற்றிய வீடியோ காட்சி தற்போது வங்கியின் இணையத்தில் பதிவேற்றப்பட்டுள்ளது. வங்கியின் பேஸ்புக் பக்கம், யூடியூப் அலைவரிசை என்பனவற்றிலும் ஆர்வமுள்ளவர்கள் இதனைக் காணக் கூடியதாக உள்ளது என்று வங்கி அறிவித்துள்ளது.

SME பிரிவினர் மத்தியில் டிஜிட்டல் முறையை ஊக்குவிப்பதை நோக்காகக் கொண்டே இந்நிகழ்வு வடிவமைக்கப்பட்டிருந்தது. அவர்கள் டிஜிட்டல் முறைக்குச் சென்று இந்த நோய் பரவல் காலத்தில் அதன் சவால்களுக்கு முகம் கொடுத்து, தமது வர்த்தகச் செயற்பாடுகளை தங்கு தடையின்றி வெற்றிகரமாக நடத்திச் செல்வதை ஊக்குவிப்பதே இதன் குறிக்கோளாகும்.

இந்த இணையவழி கருத்தரங்கில் உதார தர்மசேன - ரோர் டிஜிட்டல்லின் உப தலைவர் (வாடிக்கையாளர் வெற்றி பிரிவு) மற்றும் இலங்கையில் பேஸ்புக் அங்கீகாரம் பெற்ற விற்பனைப் பங்காளி (ASP), திருமதி அசலா சமரதிவாகர- இணை ஸ்தாபகர் குட் மார்க்கெட் இலங்கையின் ஆர்வம் மிக்க ஒரு சமூகப் பிரிவும் மார்க்கெட் இடமும், பிரதீப் பந்துவன்ஸ - வங்கியின் சில்லறை உற்பத்திகள் மற்றும் டிஜிட்டல் அலைவரிசைகள் பிரிவு தலைவர், அஷங்க கிறிஸான் - கொமர்ஷல் வங்கியின் கார்ட் நிலைய உற்பத்தி முகாமைத்துவப் பிரிவின் முகாமையாளர் ஆகியோர் வளவாளர்களாகப் பங்கேற்றனர். இந்த அமர்வின் வழிநடத்துனராக கொமர்ஷல் வங்கியின SME வங்கி அலகின் பிரதான முகாமையாளர் மொஹான் பெர்னாண்டோ பங்கேற்றார்.

இலங்கையில் முழுவதும் காபன் நடுநிலையான முதலாவது வங்கியான கொமர்ஷல் வங்கி, உலகின் முதல் 1,000 வங்கிகள் என்ற பட்டியலில் இடம்பிடித்த இலங்கையைச் சேர்ந்த முதலாவது வங்கியாகவும் அப்பட்டியலில் தொடர்ச்சியாக 11 ஆண்டுகள் இடம்பிடித்த இலங்கையின் ஒரே வங்கியாகவும் விளங்கும் கொமர்ஷல் வங்கி, இலங்கையில் 268 கிளைகளையும், 931 தானியங்கி வங்கி இயந்திரங்களையும் (ஏ.டி.எம்.) கொண்ட வலையமைப்பைக் கொண்டுள்ளது. வங்கியின் வெளிநாட்டுச் செயற்பாடுகள், 19 கிளைகளைக் கொண்டுள்ள பங்களாதேஷை உள்ளடக்குகின்றன. அதேபோல், மியான்மாரின் நேய்பியுடோவில் நுண்நிதி நிறுவனமொன்றையும், மாலைதீவில் முழுமையான செயற்பாடுகளைக் கொண்ட முதல் வரிசை வங்கியொன்றை பெரும்பான்மைப் பங்குரிமையோடு வங்கி கொண்டுள்ளது.

(முற்றும்)

# கிரிஸ்ப்ரோவின் பசுமை பராமரிப்பின்கீழ் மரம் நடும் திட்டம்

இலங்கையின் மிகப்பெரிய கோழி இறைச்சி தயாரிப்பு நிறுவனமான கிரிஸ்ப்ரோ குழுமம், தமது நிறுவனத்திற்காக இணைத்துக் கொள்ளும் புதிய ஊழியர்களுக்காக பல்வேறு வேலைத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டுள்ளது. பசுமை பராமரிப்பு சுற்றுச்சூழல் திட்டத்தின் கீழ் கிரிஸ்ப்ரோ குழுமத்திற்கு புதிதாக இணைத்துக் கொள்ளப்படும் அனைத்து ஆண் அல்லது பெண் ஊழியர்களும் தாங்கள் வேலைக்கு வரும் முதலாவது தினத்தில் மரமொன்றை நடும் வேலைத்திட்டமொன்றை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிரிஸ்ப்ரோவின் பசுமை பராமரிப்பு நிறுவன ரீதியான சமூகப் பொறுப்புணர்வை நீண்டகாலம் தொடர்வதற்காக மேற்கொள்ளப்படும் இந்த புதிய வேலைத் திட்டத்தின் கீழ் கிரிஸ்ப்ரோ குழுமத்திற்கு சொந்தமான 17 வியாபார ஸ்தாபனங்களுக்கு புதிதாக இணைத்துக் கொள்ளப்படும் அனைத்து ஊழியர்களும் இந்த வேலைத்திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். இதற்கு தேவையான மரக்கன்றுகளை கிரிஸ்ப்ரோவின் மனித வளப்பிரிவினால் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிரிஸ்ப்ரோ குழுமத்தின் மனித வளங்கள் மற்றும் நிர்வாக முகாமையாளர் ரஞ்சன மஹிந்தசிறி இதுகுறித்து கருத்து தெரிவிக்கையில், இலங்கையின் மிகப்பெரிய கோழி இறைச்சி தயாரிப்பு நிறுவனமான கிரிஸ்புரோ தமது தயாரிப்பு நடவடிக்கையானது ISO 9001:14000 சர்வதேச தரத்தின் அடிப்படையில் நிலைத்தன்மை கொண்ட சுற்றுச்சூழல் பயன்பாட்டிற்குள் மேற்கொள்வதற்கு தேவையான காபன் வெளியேற்றத்தை குறைத்துக் கொள்வதற்கு கிரிஸ்ப்ரோ குழுமத்திற்கு சொந்தமான 17 மத்திய நிலையங்களிலும் பாரிய சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான



நடவடிக்கை எடுத்துள்ளது. மேலும், இந்தப் புதிய திட்டத்தின் மூலம் நிறுவனத்திற்கு இணைத்துக் கொள்ளப்படும் ஒவ்வொரு ஊழியரும் ஆரம்பத்திலிருந்தே நிறுவனத்தால் பராமரிக்கப்படும் கடுமையான சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடைமுறைகளுக்கு நேரடி பங்களிப்பை வழங்க வாய்ப்புள்ளது. ஒவ்வொரு ஆண்டும் கிரிஸ்ப்ரோ இலங்கையின் பல்வேறு பகுதிகளில் பல திட்டங்களை அறிமுகப்படுத்தி, கிரிஸ்ப்ரோ குழுமத்தின் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை, சமூக சுகாதாரம், சமூக-பொருளாதார ஒழுங்கு மற்றும் பொருளாதார இலாப நோக்கத்தின் முக்கிய குறிக்கோள்களை அடைவதில் கவனம் செலுத்துகிறது. புதிய கோழியை இறைச்சியை உற்பத்தி செய்வதற்கு, நமது முதன்மை தயாரிப்பு, வளமான மண், வளமான தாவர அமைப்பு மற்றும் சுத்தமான நீர் வளங்கள் தேவை. கிரிஸ்ப்ரோ உற்பத்தி செயல்முறை முழுவதும் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் சேதத்தை குறைக்கும் தொழில்நுட்பத்தை இக்குழுமம் கொண்டுள்ளது என்பது கடந்த 50 ஆண்டுகளில் நாங்கள் செய்த மிகப்பெரிய சாதனைகளில் ஒன்றாகும் என்று தெரிவித்தார்.

சுற்றுச்சூழல் தரவுகளின்படி, 1990 முதல் 2011 வரை இலங்கையின் கார்பன் டை ஆக்சைடு வெளியேற்றம் சுமார் 43 வீதம் அதிகரித்துள்ளது. இந்த சூழ்நிலையை அறிந்த கிரிஸ்ப்ரோ அதன் நிலையான வர்த்தகப் பார்வையை வலுப்படுத்தியுள்ளதுடன், அதன் பசுமை பராமரிப்பு திட்டத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட சுற்றுச்சூழல் உணர்திறன் பகுதிகளில் இதுவரை 3,500க்கும் மேற்பட்ட புதிய மரக்கன்றுகளை நாட்டியுள்ளது.

அதே நேரத்தில், கிரிஸ்புரோ கோழி உற்பத்தி கட்டமைப்பின் சுற்றுச் சூழலுக்கு தீங்கிழைக்கும் பூஜ்ய கொள்கையை (zero-wastage policy) கொண்டுள்ளது. அனைத்து உற்பத்தி நடவடிக்கைகளிலும் சுற்றுச்சூழலுக்கு ஏற்றதாக இருப்பதை கிரிஸ்ப்ரோ உறுதி செய்கிறது.

1972ஆம் ஆண்டு வெறும் 100 கோழிக் குஞ்சுகளோடு தரமான மற்றும் சிறந்த படைப்புக்களை சந்தைப்படுத்தி மேலோங்கி நிற்கவேண்டுமென்ற விருப்பத்துடன் நிறுவப்பட்ட க்ரிஸ்ப்ரோ நிறுவனம் இலங்கையின் முதல் மற்றும் அதிநவீன முறையில் கோழி இறைச்சியை உற்பத்தி செய்து செங்குத்தாக உயர்ந்திருக்கும் ஒரு நிறுவனமாகும். இலங்கையில் முதலாவதாக அதிநவீன இயந்திரங்களை பயன்படுத்தி முழுமையாக கணினி மயப்படுத்தி (vertically integrated) தமது உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. தமது கடின உழைப்பின் விளைவாக தற்போது பாரிய பண்ணைகள் மற்றும் தீவன ஆலைகளையும் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. நிறுவன தாரக மந்திரமான 'பண்ணையிலிருந்து மேசை கரண்டி வரை' என்ற திட்டமே வெற்றிக்கு காரணியாகும். மேலும், இந்த வெற்றிக்கு நேரடி மற்றும் மறைமுக ஊழியர்கள், வெளிநாட்டவர்கள்,உள்நாட்டு விவசாயிகள் மற்றும் இலங்கையிலுள்ள நுகர்வோர் ஆகியோரும் காரணமானவர்கள் ஆவர்.




# சீத்துவக்கேடு 152



உப்பிடி மூச்சு விடாமைக் கதைச்ச ஆச்சி களைப்புத்தீர குசினி விறாந்தையில திருகாணியில வைச்சு ஓலைப்பெட்டியால மூடிக்கிடந்த சருவக்குடத்திலை இருந்த அத்தாய் தண்ணியை செம்பிலசரிச்சு மடக்கு மடக்கு எண்டு குடிச்சுப் போட்டு மோனை வைரவர் எண்டால் பயங்கரமானவர் எண்டு அர்த்தம் எண்டு சொன்னா.

அப்பிடி எண்டால் தன்னை எதிர்ப்பவர்களுக்கு அநியாயம் அக்கிரமம் செய்யிறவர்களுக்கு பயங்கரமானவர் எண்டு அர்த்தம். ஆனால், தன்னை நம்பியவர்களுக்கு அவர் மிகவும் நட்பானாவர் எண்டா. அதாலதான் வைரவரை நாங்கள் எங்கட குடும்பத்தில ஒருத்தர் மாதிரி பாவிச்சு கும்பிடுறனாங்கள்.

எங்கட சொந்த பந்தத்திட்டை எங்கட கஷ்டம் நஷ்டம் எல்லாத்தையும் சொல்லுறமாதிரி அவரிட்டை சொல்லுறனாங்கள்.

பெடி பெட்டை சோதினைக்கு போகேக்கை வரேக்கை வைரவருக்கு கற்பூரம் கொளுத்தி கும்பிட்டுப் போட்டுப் போகுங்கள். ஆடு - மாடு குட்டி போடப் போகுது கண்டு போடப் போகுது எண்டால் அதுகள் பிரச்சினை இல்லாம்மல் ஈன வேணும் எண்டு வைரவருக்கு விளக்கு கொளுத்தி கும்பிடு போடுவம்.

உப்பிடித்தான் வயல் வேலைக்கு நெல்லு விதைக்கிறதுக்கு, அருவி வெட்டுறதுக்கு, சூடு மிதிக்கப் போகேக்கை வைரவருக்கு நேத்தி வைச்சு தேங்காய் உடைச்சு கற்பூரம் கொளுத்தி கும்பிடுவம்.

வைரவருக்கு வடை மாலை எவ்வளவு விருப்பமோ அந்தளவுக்கு அவர் அபிசேகப் பிரியனானா சிவபெருமானின்ரை அம்சம் எண்டதால அவருக்கு சந்தன அபிசேகம் நல்லாப் பிடிக்கும் கண்டியோ எண்ட அப்பு உதாலதான் அநேகமான நேரங்களிலை கோயில்களிலை அவர் சந்தனக் காப்போட நிக்கிறவர் எண்டார்.

வரைவரின்ரை வாகனம் பொதுவாக நாய் எண்டது எல்லாருக்கும் தெரியும் எண்ட ஆச்சி ஆனால், கனபேருக்கு அட்ட வரைவருக்கு வாகனமா நாயோட அன்னம், ரிஷபம், மயில், கருடன், குதிரை, யானை, சிம்மம் எல்லாம் இருக்கு எண்ட விசயம் தெரியாது எண்டார் அப்பு.

உந்த வைரவரின்ரை வாகனம்தான் நாய் எண்டபடியால எங்கட ஆக்கள் தங்கட வீடுகளிலை நிக்கிற நாயளை பொதுவா வைரவர் எண்டுதான் கூப்பிடுவினம். உப்பிடி வைரவா.... வைரவா எங்க நிக்கிறாய் இஞ்சை வா எண்டு அடிக்கடி கூப்பிடுறதால எல்லாரின்ரை வீட்டிலும் வைரவர் அவையோடயே இருக்கிறமாதிரி ஓர் உணர்வு இருக்கும்.

அதாலேயே தங்களுக்கு ஒரு காவல் இருக்கு தாங்கள் பாதுகாப்பா இருக்கிறம் நல்லது கெட்டதை எல்லாம் வைரவர் பாத்துக் கொள்ளுவார் எண்டு ஓர் எண்ணம் தானாகவே வரும்.

மோனை உனக்கு ஒரு விசயம் தெரியுமே, பொதுவா எங்கட கோயில்களிலை மூலவருக்கு பூசை முடிஞ்ச பிறகுதான் வைரவருக்கு பூசை நடக்கும்.

ஆனால், காசி விசுவநாதர் கோயிலிலை அங்க இருக்கிற கபால வைரவருக்கு பூசை நடந்த பிறகுதான் காசிநாதருக்கு பூசை நடக்குமாம் எண்டு உங்க எங்கட வாரிவளவுப் பிள்ளையார் கோயிலிலை பிரசங்கம் செய்யேக்கை கிருபானந்த வாரியார் சுவாமி ஒருக்காச் சொன்னவர் எண்டு ஆச்சி சொன்னா.

உந்த கபால வைரவர் எண்ட உடன எனக்கு ஒரு ஞாபகம் வருகுது எண்ட அப்பு உனக்கு தெரியுமேடா வைரவரின்ரை கையில ஒரு கபால ஓடு, அதுதான் மண்டை ஓடு ஒண்டு இருகுதெல்லே அது ஆற்றை மண்டை ஓடு தெரியுமே அது உவர் பிரமன்ரை மண்டை ஓடு எண்டார்.

உவர் பிரமன் தனக்கு அஞ்சு தலை இருக்கு. தான்தான் எல்லாத்தையும் படைக்கிறனான். என்னை விட்டா ஆளில்லை. நான்தான் பெரிய ஆள். எனக்கெல்லாம் தெரியும். சிவபெருமானை என்னத்துக்கு மதிக்கவேணும் எண்டு உங்க உள்ள சில ஆக்கள் மாதிரி எல்லாத் தலையிலையும் கனம் பிடிச்சு கொண்டு திரிஞ்சவராம்.

உடன சிவபெருமான் வைரவரிட்டை உவன் பிரமன் தலைக்கனம் பிடிச்சுத் திரியிறான் கொஞ்சம் அடக்கி வை எண்டு சொல்ல வைரவர் உடனேயே போய் பிரமன்ரை ஒரு தலையை கிள்ளி எடுத்து அந்த கபாலத்தைத்தான் தன்ரை கையில வைச்சிருக்கிறார் எண்டு புராணங்களிலை சொல்லிக் கிடக்கு எண்டார் அப்பு.

உப்பிடி வைரவர் ஒரு தலையைப் பிடுங்கி எடுத்த பிறகு அஞ்சு தலைப் பிரமன் நாலு தலைப் பிரமனா வந்திட்டார் எண்டார்.

உடன ஆச்சி உதை கேக்கிற சிலர் சும்மா கதை விடுறம் எண்டு சொல்லுவினம். ஆனால், உதில ஒரு முக்கியமான படிப்பினை சொல்லிக் கிடக்கு என்னவெண்டால் ஒரு மனுசனுக்கு தலைக்கனம் கடைசிவரையும் இருக்கப்படாது.


அப்பிடி இருந்திச்சுது எண்டால் தலையே இல்லாமல் போடும் எண்டதுதான் அந்த விசயம் அதுகும் கடவுளே தண்டனை குடுப்பார் எண்டா ஆச்சி.

அதால ஒருத்தரும் எனக்குத்தான் கவிதை தெரியும், எனக்குத்தான் இலக்கியம் தெரியும் எனக்குத்தான் ஆன்மிகம் தெரியும்.

எனக்குத்தான் அரசியல் தெரியும் என்னை விட்டால் ஆளில்லை எண்டு தலைக்கனம் பிடிச்சுக் கொண்டு திரிஞ்சால் கடைசியில அவை விலாசம் இல்லாமல் போடுவினம் எண்டார் அப்பு.

**(தொடரும்)**

# இவ்வார இராசி பலன்கள்



**வித்வ கலாபூஷணம் ஜோதிட திலகம் சிவஸ்ரீ வெங்கட சுப்ரமணிய குருக்கள்**

**மேஷ ராசி அன்பர்களே!**

வார முற்பகுதி புதிய முயற்சிகளுக்கு உகந்ததாக இருக்கும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். சிலருக்குச் சிறிய அளவில் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படக்கூடும் என்றாலும் உடனே சரியாகி விடும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவுகள் எடுக்கும்போது, பெரியவர்களுடன் கலந்தாலோசித்து எடுப்பது நல்லது. வீட்டில் சுபநிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கு வாய்ப்பு உள்ளன. கணவன் - மனைவி இருவரும் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. வியாபாரத்தில் லாபம் எதிர்பார்த்த அளவுக்கு இருக்காது என்றாலும் ஓரளவு திருப்திகரமாக இருக்கும். கடையை விரிவுபடுத்த நினைப்பவர்கள் அதற்கான முயற்சிகளில் ஈடுபடலாம். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு உற்சாகமும் மகிழ்ச்சியும் தரும் வாரமாக இருக்கும். புகுந்தவீட்டு உறவினர்களுடன் ஏற்பட்ட மனவருத்தங்கள் நீங்கும்.

**ரிஷப ராசி அன்பர்களே!**

பொருளாதார நிலைமை திருப்திகரமாக இருக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. உறவினர்கள் வருகையால் சுபநிகழ்ச்சிகள் ஏற்பாடாகும். திருமண வயதில் உள்ளவர்களுக்கு திருமண முயற்சிகளை மேற்கொள்ளலாம். பழைய கடன்களைத் தந்து முடிக்கும் வாய்ப்பு ஏற்படும். உறவினர், நண்பர் வீட்டு விசேஷத்தில் கலந்துகொள்வீர்கள். சிலருக்கு திடீர்ப் பயணங்களும் அதனால் ஆதாயம் கிடைக்கக்கூடிய வாய்ப்பும் ஏற்படும். வியாபாரத்தில் முக்கிய முடிவுகள் எதையும் இப்போது எடுக்கவேண்டாம். அவசியம் முடிவு எடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டால், தகுந்தவர்களிடம் ஆலோசனை கேட்டு செய்யவும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு குடும்பத்தை நிர்வகிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. உறவினர்கள் மூலம் ஆதாயம் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**மிதுன ராசி அன்பர்களே!**

பொருளாதார நிலை நல்லபடி இருக்கும். வீண் செலவுகள் எதுவும் ஏற்படாது. கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடு நீங்கி அந்நியோன்யம் ஏற்படும். எதிர்பாராத பயணங்களும் அதனால் உடல் அசதியும் மனச்சோர்வும் உண்டாகும். உங்களைப் பற்றித் தவறாகப் புரிந்துகொண்ட நண்பர்கள், தங்கள் தவறை உணர்ந்து மன்னிப்புக் கேட்பார்கள். அவர்களால் ஆதாயமும் உண்டாகும். பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். வியாபாரத்தின் காரணமாக சிலர் தொலைதூர பயணங்களை மேற்கொள்ள நேரும். பணியாளர்களின் ஒத்துழைப்பு நன்றாக இருக்கும். சக வியாபாரிகளிடையே இணக்கமான சூழ்நிலை உண்டாகும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு உறவினர்கள் வருகையால் பொறுப்புகள் அதிகரிக்கும். ஆனாலும் சலித்துக்கொள்ளாமல் செய்து பாராட்டு பெறுவீர்கள்.

**கடக ராசி அன்பர்களே!**

பொருளாதார நிலைமை திருப்தி தருவதாக இருக்கும். கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்ப விஷயமாக வெளியூர்ப் பயணங்களை மேற்கொள்ள வேண்டிவரும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். மகன் அல்லது மகளின் திருமண முயற்சிகளில் ஈடுபட சாதகமான வாரம். தாயாரின் உடல்நலனில் கவனம் தேவைப்படும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் இலாபம் கிடைக்கும். சிலர் வாடகை இடத்தில் இருந்து சொந்த இடத்துக்கு கடையை மாற்றி விரிவுபடுத்துவீர்கள். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு புகுந்தவீட்டு உறவினர்களுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும். உங்கள் முயற்சிக்கு கணவரின் ஆதரவு கிடைக்கும்.

**சிம்ம ராசி அன்பர்களே!**

வருமானம் அதிகரிக்கும். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். திடீர் செலவுகளால் மனதில் சஞ்சலம் ஏற்படக்கூடும். மூன்றாவது நபர்களின் தலையீடு காரணமாகக் குடும்பத்தில் சில குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். உறவினர்களுடன் கருத்துவேறுபாடு ஏற்படக் கூடும் என்பதால், பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். வியாபாரத்தில் சற்று கூடுதலாக உழைக்கவேண்டி வரும். பற்று வரவு சுமுகமாக நடக்கும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். பங்குதாரர்களும் அனுசரணையாக நடந்துகொள்வார்கள். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மனதில் அவ்வப்போது லேசான சோர்வு ஏற்படும். கணவரிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும்.

**கன்னி ராசி அன்பர்களே!**

பணவரவுக்கு குறைவிருக்காது. செலவுகளும் அவசியமான செலவுகளாகவே இருக்கும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் வழியில் சுபச் செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. தந்தைவழி உறவினர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், அவர்களுடன் பேசும்போது சற்று எச்சரிக்கையாக இருக்கவும். அரசாங்கக் காரியங்கள் முடிவதில் சற்று இழுபறியான நிலையே காணப்படும். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தரும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததைவிட இலாபம் கூடுதலாகக் கிடைக்கும். பணியாளர்கள் நல்ல முறையில் பணி செய்வார்கள். சக வியாபாரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு உற்சாகமான வாரம்தான். செலவுகளைச் சமாளிக்கத் தேவையான பணம் இருப்பதால் பிரச்சினை எதுவும் ஏற்படாது.

**துலா ராசி அன்பர்களே!**

பொருளாதார நிலைமை திருப்திகரமாக இருக்கும். அநாவசிய செலவுகள் எதுவும் இருக்காது. உடல் ஆரோக்கியத்தில் மட்டும் கவனம் தேவை. பணியின் காரணமாக சிலருக்கு வெளியூர்ப் பயணம் செல்ல நேரும். கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. எந்தக் காரணத்தை முன்னிட்டும் கடன் வாங்குவதைத் தவிர்க்கவும். கணவன் - மனைவிக்கிடையே கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். சக வியாபாரிகளுடன் சுமுகமான போக்கு ஏற்படும். பங்குதாரர்கள் அனுசரணையாக இருப்பார்கள். ஆனால், கடன் வாங்கி முதலீடு செய்வதைத் தவிர்க்கவும். குடும்ப நிர்வாகத்தை கவனிக்கும் பெண்களுக்கு உற்சாகமான வாரமாக இருக்கும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும். பிள்ளைகளால் மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும்.

**விருச்சிக ராசி அன்பர்களே!**

எதிர்பார்த்ததைவிடவும் வருமானம் கூடுதலாகவே இருக்கும். கணவன் - மனைவிக்கிடையே ஒற்றுமை வலுப்படும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத்துணை பக்கபலமாக இருப்பார். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். சிலருக்கு உறவினர்களால் சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. சிலருக்கு வெளியூர்களில் இருக்கும் புகழ் பெற்ற புனிதத் தலங்களைத் தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படும். குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட இலாபம் அதிகமாக வரும் என்றாலும் அதற்காக மிகவும் உழைக்கவேண்டி இருக்கும். வங்கிக் கடனுதவி கிடைக்கும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மனதுக்கு நிம்மதி உண்டாகும். சகோதரர் மூலம் பணவரவுக்கும் பொருள்சேர்க்கைக்கும் வாய்ப்பு உள்ளது.

**தனுசு ராசி அன்பர்களே!**

குடும்பத்தில் நிம்மதியும் மகிழ்ச்சியும் காணப்படும். பொருளாதார வசதிக்கு குறைவு எதுவும் இருக்காது. புதிய முயற்சிகளில் யோசித்து இறங்குவது நல்லது. உடல்நலம் சீராகும். கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடுகள் மறைந்து அந்நியோன்யம் ஏற்படும். தாயாரின் உடல்நலனில் கவனம் தேவை. தாய்வழி உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படும் என்றாலும் அதனால் பாதிப்பு இருக்காது. வெளியூர்ப் பயணத்தின்போது எச்சரிக்கையாக இருக்கவும். வியாபாரத்தில் எதிர்பார்த்த அளவுக்கு இலாபம் கிடைக்காது. போட்டிகளைச் சமாளிக்க கடுமையாக உழைக்கவேண்டி வரும். புதிய முயற்சிகள் எதுவும் இப்போது வேண்டாம். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மிகவும் மகிழ்ச்சியான வாரம் இது. வீட்டுச் செலவுகள் போக சிறிதளவு சேமிக்கவும் முடியும்.

**மகர ராசி அன்பர்களே!**

வார முற்பகுதியில் புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். நெருங்கிய உறவினர்களிடம் பக்குவமாக நடந்து கொள்வதன் மூலம் தேவையற்ற பிரச்சினைகளைத் தவிர்த்துவிடலாம். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். திருமண வயதில் இருப்பவர்களுக்கு நல்ல இடத்தில் திருமணம் நிச்சயமாகும். நீண்ட நாட்களாகச் சந்திக்காமல் இருந்த நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். வியாபாரத்தில் புதிய முதலீடுகள் இப்போது வேண்டாம். சக வியாபாரிகளின் பேச்சைக் கேட்டு புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபட வேண்டாம். பங்குதாரர்களின் ஆதரவு மனதுக்கு ஆறுதலாக இருக்கும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு அதிக பொறுப்புகளால் மனதில் சோர்வும் உடல் அசதியும் உண்டாகும். ஆனால், கணவரின் அன்பு உற்சாகப்படுத்தும்.

**கும்ப ராசி அன்பர்களே!**

வார முற்பகுதியில் நீங்கள் நீண்டநாட்களாக எதிர்பார்த்திருந்த நல்ல செய்தி வந்து சேரும். வாரப் பிற்பகுதியில் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவைப்படும். பணவரவு அதிகரிக்கும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். குடும்ப விஷயத்தில் மற்றவர்கள் தலையிடுவதை அனுமதிக்காதீர்கள். சிலருக்கு நீண்டநாளாக நிறைவேற்றாமல் விடுபட்ட குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். பிள்ளைகளால் பெருமையும் மகிழ்ச்சியும் உண்டாகும். வியாபாரத்தை விரிவுபடுத்த நினைப்பவர்கள் அதற்கான முயற்சிகளைத் தொடங்கலாம். அனுகூலமாக முடியும். சக வியாபாரிகளுடன் இணக்கமான உறவு ஏற்படும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு செலவுகள் கூடும். இருந்தாலும் உங்கள் தேவை அறிந்து கணவர் பண உதவி செய்வதால் சமாளித்துவிடுவீர்கள்.

**மீன ராசி அன்பர்களே!**

அதிர்ஷ்டம் தரும் வாரமாக இருக்கும். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. சிலருக்கு வெளியூர்ப் பயணமும் அதனால் ஆதாயமும் ஏற்படும். திருமண வயதில் உள்ள மகன் அல்லது மகளின் திருமணம் தொடர்பான முயற்சிகள் சாதகமாக முடியும். வாழ்க்கைத் துணைவழி உறவினர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். பிள்ளைகளால் உறவினர்களிடம் கௌரவம் அதிகரிக்கும். அரசாங்கக் காரியங்கள் முடிவதில் சற்று இழுபறியான நிலையே காணப்படும். வியாபாரத்தை விரிவுபடுத்தவு ம், வாடகை இடத்தில் இருந்து சொந்த இடத்துக்குக் கடையை மாற்றவும் வாய்ப்பு உண்டாகும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்கள் அக்கம்பக்கத்தில் உள்ளவர்களிடம் பக்குவமாக நடந்து கொள்ளவும். புகுந்தவீட்டு உறவினர்கள் அனுசரணையாக இருப்பார்கள்.

தமிழன் தொடர்கதை

# யார் அது?

அத்தியாயம் -09

வன்னித் தமிழ் மறவன்

அருகில் சென்று பார்த்த ராம் தேவுக்கு சுயநினைவு வருகிறது என்ற மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தான். ஒவ்வொரு நொடியும் கடக்கக் கடக்க அசைவு அதிகமாகிக்கொண்டே சென்று எல்லையை மீறியது. அசைவானது அவன் நெஞ்சுப்பகுதியிலும் தலைப்பகுதியிலும் மட்டுமே தெரிந்தது.

ஒரு கட்டத்தில் அசைவு திணறலாக உருப்பெற்று செயற்கை சுவாசத்தில் கூட மூச்சு எடுக்கமுடியாத நிலை வரவே பயந்துபோன ராம்,

“நேர்ஸ், நேர்ஸ் ஓடி வாங்க தேவுக்கு ஏதோ ஆச்சு. வேகமா வாங்க'' என்றும் உரத்த சத்தத்தில் கூப்பிடவே ஓடிவந்த நேர்ஸ் தேவ் அருகில் போனார்.

தேவ் மூச்சு எடுக்க சிரமப்பட்டு உயிருக்குப் போராடிக்கொண்டிருப்பதை உணர்ந்தார். அதற்கேற்ற நடவடிக்கை எடுக்கும் முன்பதாகவே தேவின் மூச்சு நின்று இதயத்துடிப்பு நின்றுவிட்டது என்று கம்பியூட்டரில் சமநிலைக் கோடும் அபாய ஒலியும் ஒடிக்கொண்டிருந்தது.

அந்த அறைக்கும் டாக்டர் அறைக்கும் தொடர்பில் இருந்த அபாய ஒலி பட்டனை நேர்ஸ் அழுத்தியதும் வைத்திய அறையில் இருந்த டாக்டருக்கும் செய்தி போய் அவரும் விரைவாக வந்தார் .

அப்போது மூச்சற்று இதயத்துடிப்பு இன்றி கிடந்த தேவைப் பார்த்த டாக்டர், உடனடியாக நெஞ்சில் கை வைத்து அழுத்தி இதயத்துடிப்பை உண்டாக்க முயன்றார். அப்போதும் பயனளிக்காமல் போகவே,

“நேர்ஸ் பிஸியோதரபிட் கோல் பண்ணுங்க. எமேஜென்சி அவங்களை வேகமா வரச்சொல்லுங்க'' என்று கூறி மேலும் மேலும் நெஞ்சை அழுத்தி இதயத்துடிப்பை உருவாக்க முயற்சி செய்துகொண்டிருந்தார்.

நேர்ஸ் கோல் பண்ணி அடுத்த நிமிடம் விரைவாக உள்ளே வந்த பிஸியோதரபிட், தேவ் அருகில் சென்று இதயத்துடிப்பை கொண்டு வர அவரால் முடிந்த முயற்சிகளை செய்தார். அவர் தன்னால் முடிந்தவரை முயன்று அழுத்தியபோது ஏதோ உடைந்த சத்தம் கேட்டதுஇ அதை பிஸியோதரபிட்டாலும் உணர முடிந்தது. என்ன நடந்திருக்கும் என்று அவரால் ஊகிக்க முடிந்தது

அப்போது பிஸியோதரபிட்,

“டாக்டர்... பேசண்ட் ஸ்டெர்னம் கபிறாக்சராகிவிட்டது. (நெஞ்சை அழுத்தி இதயத்துடிப்பை கொண்டுவரும் முயற்சியில் தேவின் நெஞ்சு எலும்பு உடைந்துவிட்டது.) இனி அழுத்த முடியாது அழுத்தினால் இதயத்திற்கு பாதிப்பு வந்துவிடும்.”

“ஓகே போதும். இது உயிரைக் காப்பாற்றும்போது நெஞ்சு எலும்பு உடைவது வழமைதானே. உயிரை விட எலும்பு முறிவு சாதாரண ஒன்றுதான்” என்றார் டாக்டர்.


டாக்டரும் பிஸியோதரபிட்டும் தங்களால் இயன்றளவு முயன்றபோதிலும் எந்த முயற்சிகளும் பயனளிக்காமல் போகவே, இறுதியாக டாக்டர் நேர்ஸிடம்,

“நேர்ஸ் வேகமா டிபிப்ரேஷன் ரெடி பண்ணுங்க (எலேக்ரிக் சார்க்). அதில் முயன்று பார்க்கலாம். திடீரென இப்படி ஆனதிற்கு என்ன காரணம்? அதை முதலில் கண்டுபிடியுங்கள்” என்றவுடனே ஒக்சிசன் சிலிண்டரை அவதானித்த பிஸியோதரபிட்,

‘‘டாக்டர் ஒக்சிசன் மீட்டர் லெவல் குறைந்துவிட்டது. அதுதான் இப்படி ஆகியிருக்கிறது. உடனடியாக ஒட்சிசன் சிலிண்டர் மாற்ற வேண்டும்'' என்று கூறவே,

“ஓ மை காட்'' என்று தலையில் கை வைத்த டாக்டர், ‘‘ஒட்சிசன் சிலிண்டர் ஹொஸ்பிட்டல்ல ஏதும் இல்லை. வேறு ஹொஸ்பிட்டலிலிருந்து ஏற்றப்பட்ட ஒட்சிசன் சிலிண்டர்கள் நாளைக் காலையில்தான் வரும்” என்றார்.

இப்போது கொரோனா வைரஸ் தாக்கம்



அதிகமானதால் ஒட்சிசன் மக்களுக்கு அளவுக்கு அதிகமாக தேவைப்படுகிறது. அதனால் பிரதமரின் கட்டளைக்கிணங்க மேலதிகமாக இருந்த சிலிண்டர்களை கொரோனா வைரஸ் அதிகமாக பாதிக்கப்பட்ட மாநிலங்களிலுள்ள ஹொஸ்பிடலுக்கு அனுப்பிட்டோம். இப்போ இங்கும் தீர்ந்துவிட்டது. தமிழ் நாட்டிலே இல்லை என்ற தகவல் எங்களுக்கு சில நாட்கள் முன் கிடைத்தது.

தற்போதைய தமிழ்நாட்டு முதலமைச்சருக்கு தமிழ்நாட்டு வைத்தியசாலை பணிப்பாளர்களாகிய நாங்கள் அனைவரும் சார்பாக இணைந்து எழுதி அனுப்பிய மனுவால் தற்போதைய முதலமைச்சர் பிரதமருக்கு உடனடியாக ஒட்சிசன் சிலிண்டர் அனுப்பவேண்டும் என்று அதிகாரபூர்வமான கட்டளை கடிதம் அனுப்பியிருக்கிறார். அதை ஏற்று பிரதமர் சிலிண்டர்களை அனுப்பினால் தமிழ்நாட்டில் அதிகளவான எண்ணிக்கையில் உயிர்கள் காப்பாற்றப்படும்.

இந்த ஒட்சிசன் சிலிண்டர் இல்லாத வேளையில் இப்படி ஆகிவிட்டதே என்று மனமுடைந்து நின்றார் டாக்டர்.

இதை அருகில் நின்று பார்த்துக்கொண்டிருந்த ராம்

“டாக்டர் நீங்க டிபிப்ரேஷன் ட்ரீட்மென்ட் ஆரம்பியுங்க. நான் சிலிண்டரோடு வாரேன்” என்று கூறிவிட்டு, அறையின் கதவை சடாரென இழுத்து திறந்துகொண்டு ஓடினான்

இதைப் பார்த்த பிசியோதரபிட்,

“யார் இது. எப்படி முடியும். ஹொஸ்பிட்டலிலேயே ஒட்சிசன் சிலிண்டர் இல்லையே” என்றதும்,

“அவன் இவனின் உயிர் நண்பன். இராமனுக்கு எப்படி அனுமானோ, அப்படி இவனுக்கு அவன். இராமனுக்காக மூலிகை மலையைத் தூக்கினார் அனுமான். இவனுக்காக அவன் ஓர் ஒட்சிசன் சிலிண்டர் தூக்கமாட்டானா என்ன?. அவன் உயிர் போனாலும் நிச்சயம் சிலிண்டர் கொண்டு வருவான். நாம நம்பிக்கையோடு டிபிப்ரேஷன் ட்ரீட்மன்டை ஆரம்பிப்போம்.சரியான நேரத்தில் வந்துடுவான்” என்று கூறி டாக்டர் டிபிப்ரேஷன் ட்ரீட்மென்ட் ஆரம்பித்தார்.

முதலாவது சாக் கொடுத்தபோது எந்த அசைவும் இல்லை. இன்னும் அதிகமாக சாக்கை கூட்டியவர் மறுபடி சாக் கொடுத்தார்.

உடல் மட்டும் மேலே எழுந்து கீழே போனது. ஆனால், தேவ் இதயத்தில் எந்த மாற்றமும் இல்லை. கம்பியூட்டரில் ஹார்ட் ப்ரீக்குவன்சி எந்த மாற்றமும் தெரியவில்லை

வேகமாக கதவை திறந்தபடி ஒட்சிசன் சிலிண்டர் தேடிப்போனவன் அருகில் இருந்த அறையை திறந்தான்

அங்கு ஒட்சிசன் சிலிண்டர் இருந்தது. ஆனால்அ அங்கே ஒரு பச்சிளம் குழந்தைக்கு செயற்கை சுவாசம் போய்கொண்டிருந்தது.

இதைப் பார்த்தவன் மெதுவாக அந்த அறையின் கதவை பூட்டிவிட்டு அடுத்த கதவை திறந்தான். அங்கே சிலிண்டர் இருப்பதை பார்த்து மகிழ்ச்சியுற்று அருகில் போனான்.

அந்த சிலிண்டர் அருகில் நிறை மாத கர்ப்பிணித் தாய் ஒருவர் படுத்திருப்பதை பார்த்து,

தேவ் எம்மைவிட்டு பிரிந்தால் ஒரு உயிர்தான். இங்கே இரண்டு உயிர்கள் இருக்கின்றன. கட்டாயமாக இவருக்கே ஒட்சிசன் சிலிண்டர் தேவை என்று எண்ணியபடி அந்த அறையை விட்டு வெளியேறினான்.

இப்படி அத்தனை அறைகளையும் திறந்த ராமிற்கு ஏமாற்றம் மட்டுமே மிஞ்சியது.

தேடிச்சென்ற இடம் முழுவதும் ஏதோ ஒரு நோயால் உயிருக்குப் போராடிக் கொண்டுதான் இருந்தார்கள். எல்லாவற்றையும் பார்த்த ராம் மனமுடைந்து அந்த இடத்தைவிட்டு கடந்துவந்து நண்பனை காப்பாற்ற முடியாதா என்று ஏங்கியவாறு தலையில் கை வைத்தபடி சுவரில் சாய்ந்தவாறு கீழே அமர்ந்து விம்மி விம்மி அழுதான்.

அப்போது வைத்தியசாலையில் எங்கோ சினிமா குத்துப் பாடல் ஒலிப்பது ராமின் காதில் கேட்டது.

இப்படி நிலைமையில் இந்த இடத்தில் யார் குத்துப்பாடல் கேட்பது என்று கோபம் கொண்டிருந்தான்.

அப்போது ராம் சாய்ந்திருந்த சுவர்ப் பகுதியின் கீழால் ஏதோ குளிர்க் காற்று வருவதை உணர்ந்து கொண்டான். எப்படி சுவரால் குளிர்காற்று வருகிறது என்று திரும்பிப் பார்த்தபோது,

அங்கே...

யார்?... அது....

**தொடரும்**

## சொல்ல மறந்த கதை-09

### 1825-1898 (தென்னிந்தியாவில்)

சிலோனு சீமயினு
பேரு மட்டும் காதில் வந்து
கேட்கிறது....

மூக்காயி பக்கத்துல
பாப்பாத்தி அமர்ந்துருக்கா...
பெத்த புள்ள ரெண்டயுமே...
கக்கத்துல கட்டிக்கிட்டு...
மூக்காய பாத்து அவ
ஏதேதோ
கேட்டுக்கிறா....

இன்னும் எம்புட்டு
தூரமடி....
கடலோட முடிவு இன்னும்
வர
காணலடி....

முந்தி ஏதும் வந்துட்டமா....

சீமைக்கி போயி நாம
புதுசீல கட்டிக்கனும்..
நல்ல நல்ல துணி வாங்கி...
புள்ளக்கெல்லாம்..
நல்ல சட்ட போட்டிடனும்....

அரிசி கஞ்சி
இருக்குதாண்டி..
அங்க பஞ்சமே
இல்லயாண்டி...
இந்த கடல மட்டும்
கடந்துட்டோம்னா...
கஸ்டங்கள கடந்திடலாம்...

கோப்பி கொட்ட
பொருக்கனுமாம்....
வீடு வாச
கொடுப்பாங்களாம்....

இப்படியே பீத்திக்கிட்டு
பொலம்பி வாறா
பாப்பாத்தி.....

அத்தனைக்கும் ஒரு
பதிலா..
பெறும் மூச்சு ஒன்ன விட்டு..
முற்றுப்புள்ளி வச்சி புட்டா...
மூக்காயி..

பெறும் மூச்ச தவிர இப்ப
அவளுக்கு தெரிஞ்சது
ஒன்னும் இல்ல

என்பதெல்லாம்
வேரகத......

ஒரிரவு முடிஞ்சிருச்சி
வீட்ட விட்டு வரயில..
கட்டி வந்த கட்டுச்சோத்த
ஆளுக்கு ஒரு
உருண்டயின...
எல்லோரும் தின்னுவிட்டு...

அடுத்து நடப்பது
என்னானு ஒன்னுமே
அறியாம..

அக்கர சேறும் அந்த
நேரத்த பார்கிறது..
பஞ்சம் பொழைக்க வந்த
இந்த பரதேசி
கூட்டங்கள்.......

அந்தா தெரியிதப்பா...
அது தானோ கண்டிச்சீம....
தூர தெரிகிறது...
தென்னமர தோப்பு ஒன்னு...

மூக்காயி மட்டும் எழும்பாம
அமர்ந்திருக்க...
வந்த அனைவருமே...
சிலோனு வந்தாச்சினு...
கத்தி சிரிக்கிராங்க...

துன்பமெல்லாம்
தீர்ந்திட்டதா...
உள்ளத்துள ஆனந்தம்...

யாரு கண்டா..
கரைய போயி
தொட்டவுடன்..
அங்க என்ன சேதி
காத்திருக்கோ....

படகு கரைய நோக்கி
பேய போல பொறப்படுது....
சிலோனு சீமையில...
நம்ம மக்கள் காலு...
படுகிறது.....

(சொல்ல மறந்த கதை இன்னும் சொல்லப்படும்)

தொடரும்...

எம்.ராமதாஸ்
இறம்பொடை



தமிழன் சிறுகதை

# கடன்

புத்தளம் ஸாலிஹ் அஸீம்

அவன் மிகவும் நேர்மையானவன். குறைந்த வருமானத்தைப் பெற்றுக் கொள்கின்றவன் என்றாலும் அடுத்தவரின் பணத்திற்கோ, சொத்திற்கோ, உடைமைக்கோ ஆசைப்படாதவன். இதனால் நிறையவே வறுமைக்குள் வாடினாலும் உழைப்பின் மூலம் வருகின்ற சிறிய வருமானத்தை வைத்து அதற்கேற்றால்போலவே வாழ்க்கையை அமைத்துக்கொண்டான்.

அநேகமாக வீண் கடன் வாங்குவதை தவிர்த்தே வந்தான். இதனால் சில வசதிகளை இழந்தாலும் ஓரளவு நிம்மதியாக அவனால் வாழமுடிந்தது. இருந்தாலும் தன்னிடம் உதவியென்று கேட்டு வருபவர்களுக்கு தன்னால் முடிந்தளவு செய்துகொடுத்தான்.

இப்படிதான் ஒருமுறை தன்னுடைய மகளுக்கு திருமணம் செய்யும்போது தேவைப்படுமென்று சிறுகச் சிறுக அறைகுறையாய் சாப்பிட்டு ஒருதொகை பணத்தை சேர்த்து வைத்திருந்தான். அப்போது பக்கத்து வீட்டுக்காரர் ஓடிவந்து,


‘‘தம்பி, மகனுக்கு படிப்புக்கு செலுத்துவதற்காக அவசரமாய் கொஞ்சம் பணம் தேவைப்படுகிறது. தந்து உதவ முடியுமா இன்னும் இரண்டு வாரத்தில் எப்படியும் திருப்பி தந்துவிடுவேன்'' என்று காலை பிடிக்காத குறையாய் கெஞ்சினார்.

அதனைக் கேட்டவன்,

‘‘கோவிச்சிக்காதீங்க அண்ணே, என்கிட்ட அந்தளவு பணமெல்லாம் இல்லேயண்ணே.'' என்றான்.

கொடுக்க முடியவில்லையேயென்ற கவலையோடு சொல்ல, வந்தவர் ஏமாற்றத்தோடு திரும்பிப் போனார். போனவர் முன்வாசலை நெருங்கியபோது ஏதோவொன்று நினைவுக்கு வந்தவனாய்,

‘‘அண்ணே கொஞ்சம் நில்லுங்கண்ணே'' என்றவன் வேகமாய்



உள்ளே சென்றான். தன்னுடைய மகளுக்காக சேர்த்துவைத்திருந்த பணத்தை எடுத்து வந்து அவரிடம் நீட்டினான்.

‘‘இந்தாருங்க அண்ணே. இந்தப்பணம் என்னுடைய மகளுக்காக அவளின் திருமணத்திற்கு சேர்த்துவைத்தது. ரெண்டு வாரத்தில கெடைச்சிடும்தானே பரவாயில்லை. இதை கொண்டுபோங்கள்'' என்று அப்பணத்தைக் கொடுத்தனுப்பினான்.

ஆனாலும் இரண்டு வாரமல்ல, மூன்று ஆண்டுகள் சென்றுவிட்ட பொழுதும் கொடுத்த பணம் திரும்பி கிடைக்கவேயில்லை. சிலமுறை கேட்டும் பார்த்துவிட்டான். ஆனாலும் சாட்டு போக்குகளை சொல்லி சமாளித்து விட்டாரேயொழிய அப்பணத்தை திரும்பக் கொடுக்கவேயில்லை.

அன்று அவன் வேலை முடிந்து களைப்போடு வீட்டுக்கு வந்தான். அங்கு கடன் வாங்கிய பக்கத்து வீட்டுக்காரரும் அவரின் மனைவியும் நின்றுகொண்டிருந்தனர். அவனை கண்டதும்,

‘‘தம்பி.. உங்களைதான் பார்த்துக்கொண்டிருந்தேன்'' என்று அவர் தலையை தொங்கவிட்டப்படி சொன்னார்.

அதனைக் கேட்டவன், ‘‘அப்படியா. என்னண்ணே'' என்று சற்றும் முகத்தில் கோபத்தைக் காட்டிக்கொள்ளாமலேயே கேட்டான்.

‘‘ஒன்னுமில்லை தம்பி. மகளுக்கு கல்யாணம் சரியா வாரமாதிரியிருக்கு. ஆனால், அதற்காக கொஞ்சம் பணம் தேவைப்படுது. நிறைய இடங்களில் கேட்டுப் பார்த்திட்டேன். ஆனால், யாருமே தரமாட்டேங்குறாங்க. இதை விட்டால் இதைவிட நல்ல வரன் கிடைக்காது.

அதுதான் கடைசியிலே உங்ககிட்ட கேட்கலாமுனு நம்பிக்கையோட வந்தோம். ரெண்டு மாசத்துல எப்படியும் திருப்பி தந்திடுவோம். உங்ககிட்டே இல்லேனாலும் பரவாயில்லை. யார்கிட்டையாவது கடனாய் வாங்கியாவது தாருங்கள். உங்களுக்கு கோடி புண்ணியம் கிடைக்கும். எங்களை நம்புங்கள்'' என்று கெஞ்சினார்.

அதனை கேட்டவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. கொஞ்சம் யோசித்தவன்,

‘‘சரி வாங்க என்கூட'' என்று அவரை தனக்கு தெரிந்த ஒருவரிடம் கூட்டிச் சென்று விடயத்தை சொன்னான்.

அதனை கேட்டவர்,

‘‘தம்பி... மூணு மாசத்திலே என்னுடைய மகளுக்கு திருமணமிருக்கு. அதற்கு காணியை விற்று வைச்ச பணம்தான் என்கிட்டேயிருக்கு. இருந்தாலும் இவரை என்னாலே நம்ப முடியாது. ஆனால், உன்மேலே எனக்கு நம்பிக்கையிருக்கு. ஆகவே, நீ அந்த பணத்திற்கு பொறுப்பு இருக்கிறதாயிருந்தால் இப்பவே அந்தப் பணத்தை கொடுக்கிறேன்'' என்றார்.

அதனைக் கேட்டவன் உடனேயே,

‘‘சரிங்கய்யா... நான் அந்தப் பணத்திற்கு பொறுப்பிருக்கிறேன்'' என்று சொல்ல, அவரும் பணத்தைக் கொடுத்துவிட்டார்.

திருமணமும் நல்லபடி நடந்து முடிந்துவிட்டது.

சொன்னபடி இரண்டு மாதங்களும் ஓடி மறைந்துவிட்டன. ஆனால், பணத்தை வாங்கிச் சென்றவர் அதனை கொடுத்தபாடில்லை. அவனை நம்பி பணம் கொடுத்தவர் பணத்தை திருப்பிக் கேட்டு நச்சரிக்கத் தொடங்கினார்.

அவனும் அவரிடம் பணத்தை எவ்வளவு கேட்டும் திருப்பி கொடுக்கவேயில்லை. மணம் கொடுத்தவரின் மகளின் திருமண நாளும் நெருங்கிவிட கட்டாயம் பணம் வேண்டுமென்று ஒரே பிடியாக நின்று விட்டார். இதனால் வேறு வழியின்றி பக்கத்து வீட்டுக்காரரிடம் கட்டாயமாக பணத்தை கேட்க,

‘‘இப்போது என்கிட்டே பணமெல்லாம் இல்லை கிடைக்கும்போது தருகிறோம். உங்கள் அவசரத்திற்கு தரமுடியாது'' என்று சாதாரணமாகவே சொல்லிவிட்டனர். இதனால் என்ன செய்வதென்று தெரியாமல் தவித்த அவன்,

என்னை ஏமாற்றிவிட்டார்கள் என்பதற்காக என்னை நம்பியவரை நான் ஏமாற்றக்கூடாது என்று மனதுக்குள் நினைத்தவன், தன்னுடைய வீட்டின் உறுதிப்பத்திரத்தை பத்திரமாக எடுத்துக்கொண்டு கிளம்பினான். அதனை அடகு வைத்து யாரோ பட்ட கடனை அடைப்பதற்காக....

**முற்றும்**

# குளிர்கால ஒலிம்பிக்கில் வடகொரியாவுக்குத் தடை!

அண்மையில் நிறைவுக்குவந்த டோக்கியோ-2020 ஒலிம்பிக்கில் பங்குபற்றத் தவறியமைக்காக வடகொரியாவுக்கு சர்வதேச ஒலிம்பிக் பேரவையினால் தடை விதிக்கப்பட்டுள்ளது. குறித்த தடை 2022 வரை நீடிப்பதால் அடுத்த ஆண்டு சீனாவின் பீஜிங் நகரில் நடைபெறவுள்ள குளிர்கால ஒலிம்பிக்கில் வடகொரியாவுக்கு பங்குபற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

முழு உலகும் கொரோனா வைரஸின் பிடிக்குள் அகப்பட்டுக்கொண்டுள்ள




நிலையில், கொரோனா வைரஸ் தொற்று நோயிலிருந்து தங்களது வீரர்களைப் பாதுகாக்கவேண்டியுள்ளதெனத் தெரிவித்து டோக்கியோ-2020 ஒலிம்பிக்கில் வடகொரியா பங்குபற்றவில்லை. இந்தத் தடைக்காலத்தின்போது எவ்வித நிதி உதவியும் வடகொரியாவுக்கு கிடைக்காது என சர்வதேச ஒலிம்பிக் பேரவையின் தலைவர் தோமஸ் பெச் தெரிவித்தார்.

பீஜிங்-2022 குளிர்கால ஒலிம்பிக்கில் தனிப்பட்ட வடகொரியர்களின் பங்கேற்பு குறித்தும், வடகொரியாவுக்கு விதிக்கப்பட்ட தடை காலத்தை மறுபரிசீலனை செய்வது குறித்தும் தீர்மானிக்கும் உரிமை சர்வதேச ஒலிம்பிக் பேரவைக்கு இருப்பதாக தோமஸ் பெச் மேலும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# திரைப்படமாகும் கங்குலியின் வரலாறு

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும், இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவருமான சௌரவ் கங்குலியின் வாழ்க்கை வரலாற்றை திரைப்படமாக எடுக்க லவ் பிலிம்ஸ் நிறுவனம் முன்வந்துள்ளது. இந்திய கிரிக்கெட் அணிக்கு 10 ஆண்டுகள் தலைவராக இருந்த கங்குலி, எம்.எஸ்.டோனி உட்பட பல இளம் வீரர்களை அணிக்குள் கொண்டுவந்தவர். ரசிகர்களால் கொல்கத்தாவின் இளவரசர், தாதா என்று அழைக்கப்படும் கங்குலியை, ராகுல் டிராவிட் "கோட் ஓவ் ஓவ் சைட்" என்று அழைப்பார். கங்குலி ஓவ் திசையில் ஷொட்களை அடிக்கும் அழகே தனி அழகு.

களத்தில் இறங்கிவிட்டால் வெற்றிக்காக கடைசிவரை போராடும் இயல்புடைய கங்குலியின் துடுப்பாட்டமும், அணித்தலைமை திறமையும் புகழப்பட வேண்டியவை. எந்த எதிரணியையும் எளிதாக இந்திய அணியை எடுத்துக்கொள்ள முடியாத வகையில் அணித் தலைமையும், துடுப்பாட்டமும் கங்குலியிடம் தனித்தன்மை வாய்ந்தது. கடந்த 1996ஆம் ஆண்டு இங்கிலாந்து டெஸ்ட் தொடரில் அறிமுகமாகி முதல் போட்டியிலேயே சதம் அடித்து அனைவரையும் திரும்பிப் பார்க்கவைத்தவர் கங்குலி. 2ஆவது டெஸ்ட்டிலும் சதம் அடித்து அனைவரையும் கங்குலி வியப்புக் குள்ளாக்கினார். 1997ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிராக தொடர்ந்து 4 முறை ஆட்டநாயகன் விருதை வென்றார்.

2000ஆம் ஆண்டில் இந்திய அணிக்குள் போட்டி சூதாட்ட புகார் எழுந்தவுடன் கங்குலி அணித்தலைமை பொறுப்பேற்றார். மிகவும் நெருக்கடியான நேரத்தில் இந்திய அணிக்குத் தலைமை ஏற்று வழிநடத்தினார். கங்குலி தலைமையில்தான் யுவராஜ் சிங், ஹர்பஜன் சிங், மொஹமட் கைஃப், எம்.எஸ்.டோனி, ஆஷிஸ் நெஹ்ரா, சஹீர் கான் போன்ற ஜாம்பவான்கள் அடையாளம் காணப்பட்டனர்.

113 டெஸ்ட், 311 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ள கங்குலி, ஒட்டுமொத்தமாக 18,575 ஓட்டங்களை குவித்துள்ளார். இந்திய அணிக்கு 195 போட்டிகளுக்கு அணித்தலைவராக செயற்பட்ட கங்குலி அதில் 97 போட்டிகளில் வெற்றியைத் தேடித் தந்துள்ளார். தனது வாழ்க்கை வரலாறு திரைப்படமாகப் போகிறது என்பது குறித்து கங்குலி ட்விட்டரில் பதிவிட்ட கருத்தில், "என்னுடைய வாழ்க்கை, நம்பிக்கை, முன்னோக்கி நகர்வதற்கான தன்னம்பிக்கையை அளித்தது கிரிக்கெட்தான். அந்தப் பயணம் அழகானது. என்னுடைய வாழ்க்கை வரலாற்றை திரைப்படமாக லவ் பிலிம்ஸ் எடுப்பது த்ரில்லானது'' எனத் தெரிவித்துள்ளார்.




# ஆப்கான் மகளிர் கிரிக்கெட்டுக்கு உயிர்கொடுக்கும் ஆஸி. கிரிக்கெட் சபை

தலிபான்கள் ஆப்கானில் மகளிர் கிரிக்கெட்டை ஆதரிக்காவிட்டால், ஆப்கானிஸ்தான் ஆடவர் அணியுடன் நடைபெறவுள்ள டெஸ்ட் தொடரை இரத்துச்செய்வோம் என அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை பகிரங்க அறிவிப்பு விடுத்துள்ளது.

அவுஸ்திரேலியா மற்றும் ஆப்கானிஸ்தான் ஆடவர் அணிகள் மோதும் டெஸ்ட் போட்டி நவம்பர் 27 முதல் அவுஸ்திரேலியாவின் தீவு மாகாணமான டாஸ்மேனியாவின் ஹோபார்ட்டிலுள்ள பெல்லரைவ் ஓவல் மைதானத்தில் நடைபெறவுள்ளது. 2016ஆம் ஆண்டுக்குப் பின்னர் குறித்த மைதானம் முதல் டெஸ்ட் போட்டியை நடத்த தயாராகி வருகிறது.

இந்நிலையில், அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபையானது தலிபான்களின் முடிவு தொடர்பில் அதிருப்தி வெளியிட்டுள்ளது. அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில், உலகளவில் மகளிர் கிரிக்கெட்டின் வளர்ச்சியை ஊக்குவிப்பது அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபைக்கு மிகவும் முக்கியமானது. கிரிக்கெட் குறித்த எங்கள் பார்வை, இது அனைவருக்குமான ஒரு

CRICKET AUSTRALIA

விளையாட்டு. ஒவ்வொரு கட்டத்திலும் மகளிருக்கான விளையாட்டை நாங்கள் சந்தேகத்திற்கு இடமின்றி ஆதரிக்கிறோம்.

ஆப்கானிஸ்தானில் மகளிர் கிரிக்கெட்டை ஆதரிக்க முடியாது என்று அண்மையில் ஊடகங்களில் வெளியான அறிக்கைகள் உத்தியோகபூர்வமாக நிரூபிக்கப்பட்டால், ஆப்கானிஸ்தானுடன் நடைபெறவுள்ள டெஸ்ட் போட்டியை இரத்துச்செய்வது தவிர, வேறு வழியில்லை என அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

முன்னதாக, தலிபான் அரசின் கலாசார ஆணையத்தின் செய்தித் தொடர்பாளர் அஹ்மதுல்லா வாசிக், ஆப்கானிஸ்தானில் மகளிர் கிரிக்கெட் இஸ்லாமிய சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்படாது என்று தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# ஜாம்பவான் பீலேயின் சாதனையை முறியடித்த மெஸ்ஸி



உதைபந்து உலகின் நட்சத்திர வீரராக விளங்கும் ஆர்ஜென்டினாவின் நட்சத்திர வீரர் லியோனல் மெஸ்ஸி, பீபா உலகக்கிண்ண உதைபந்து தொடரின், தென்னமெரிக்க கண்ட தகுதிகாண் சுற்றுப் போட்டியில் ஹெட்ரிக் கோல் அடித்ததன் மூலம் உதைபந்து உலகின் ஜாம்பவான் பீலேயின் சாதனையை முறியடித்தார்.

பொலிவிய அணிக்கு எதிரான போட்டியில் ஆர்ஜென்டினா அணி, 3-0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது. இந்தப் போட்டியில் ஹெட்ரிக் கோல் அடித்த மெஸ்ஸி, சர்வதேச உதைபந்து உலகில் 79 கோல்களை பதிவுசெய்து தென்னமெரிக்க ஆடவர் உதைபந்து வரலாற்றில் அதிக கோல்கள் அடித்த வீரர் என்ற சாதனையை படைத்தார்.

இதற்கு முன்னர் தென்னமெரிக்க உதைபந்து வரலாற்றில் அதிக கோல்கள் அடித்த வீரராக பிரேஸில் ஜாம்பவான் பீலே 77 கோல்களுடன் முதலிடத்தில் காணப்பட்டார். தற்போது அவரின் சாதனையை லியோனல் மெஸ்ஸி முறியடித்துள்ளார்.

**தென்னமெரிக்க வீரர்களில் அதிக சர்வதேச கோல்களை பெற்ற வீரர்கள் பட்டியல்**

1. மெஸ்ஸி – 79 கோல்கள்
2. பீலே – 77 கோல்கள்
3. நெய்மர் - 68 கோல்கள்
4. ரொனால்டோ – 62 கோல்கள்
5. லூயிஸ் சுவாரஸ் - 62 கோல்கள்

# ரஷீட் கானின் திடீர் இராஜினாமாவுக்கு காரணம் என்ன?



ஏழாவது ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரானது எதிர்வரும் ஒக்டோபர் 17ஆம் திகதி ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் ஓமானில் ஆரம்பமாகவுள்ள நிலையில், அனைத்து அணிகளும் தங்களது அணிகளின் குழாமை வெளியிட்டு முடித்துள்ளன. அந்தவகையில் குறித்த இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடருக்கான ஆப்கானிஸ்தான் அணியின் குழாம் கடந்த வியாழக்கிழமை இரவு அந்நாட்டு கிரிக்கெட் சபையினால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

அதன்படி அணியின் தலைவராக இளம் சகலதுறை வீரர் ரஷீட் கான் நியமிக்கப்பட்டார். அவரது தலைமையில் இரண்டு மாற்று வீரர்கள் உட்பட 20 பேர் கொண்ட அணி அறிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், குறித்த தொடருக்கான ஆப்கானிஸ்தான் அணி அறிவிக்கப்பட்ட சில நிமிடங்களிலேயே அந்த அணியின் தலைவராக நியமிக்கப்பட்ட ரஷீட் கான் தனது பதவியை இராஜினாமா செய்தார்.

அவரது இந்த முடிவு கிரிக்கெட் உலகில் பரபரப்பை ஏற்படுத்தியது. ஏனெனில், அண்மையில் ஆப்கானிஸ்தான் இருபதுக்கு 20 அணிக்கு தலைவராக நியமிக்கப்பட்ட ரஷீட் கான், இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடரிலும் அணித்தலைவராக சிறப்பாக செயற்படுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட வேளையில் அவர் திடீரென இராஜினாமா செய்தமை பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்நிலையில், ரஷீட் கான் பதவியிலிருந்து விலக என்ன காரணம் என்ற தகவல் வெளியாகியுள்ளது. அதாவது, உலகக்கிண்ணத் தொடருக்கான அணி அறிவிக்கப்படும் முன் ஒரு அணித்தலைவராக, தெரிவுக்குழுவினர் தன்னிடம் ஆலோசனை நடத்தியிருக்க வேண்டும் என்றும், ஆனால், அப்படி யாரும் தன்னுடன் கலந்தாலோசிக்காமல் அணியை தெரிவுசெய்துள்ளார்கள் என்றும் அவர்களின் இந்த செயலால்தான் இந்த முடிவை எடுத்துள்ளதாகவும் ரஷீட் கான் தெளிவுபடுத்தியுள்ளார்.

ரஷீட் கான் பதவி விலகியதையடுத்து நடைபெறவுள்ள இருபதுக்கு 20 உலகக்கிண்ண அணியின் தலைவராக அனுபவ வீரரான மொஹமட் நபி செயற்படவுள்ளார்.

# டோனியின் நியமனம் தொடர்பில் பி.சி.சி.ஐயிடம் புகார்

## வழிகாட்டியாக செயற்படுவாரா டோனி?




ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடருக்கான இந்திய அணியின் வழிகாட்டியாக நியமிக்கப்பட்டிருக்கும் எம்.எஸ்.டோனி, குறித்த பதவியில் செயற்படுவதில் புதிய சிக்கல் ஏற்பட்டுள்ளது. அதற்குக் காரணமாக சி.எஸ்.கே. அணியின் தலைமை பதவியே அமைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடருக்கான 15 வீரர்கள், 3 மேலதிக வீரர்கள்கொண்ட இந்திய அணியின் குழாம் கடந்த புதன்கிழமை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையினால் அறிவிக்கப்பட்டது. மேலும், குறித்த உலகக்கிண்ணத் தொடரின்போது இந்திய அணியின் வழிகாட்டியாக இந்திய அணியின் முன்னாள் தலைவர் எம்.எஸ். நியமிக்கப்பட்டார். யாரும் எதிர்பாராத நிலையில் இது ரசிகர்களுக்கு விருந்தாக அமைந்தது.

இந்நிலையில், அதற்கெல்லாம் ஆப்பு வைக்கும் வகையில் புதிய தகவல் ஒன்று கிடைத்துள்ளது. மத்திய பிரதேச கிரிக்கெட் சபையின் வாழ்நாள் உறுப்பினரான சஞ்சீவ் குப்தா, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு புகார் கடிதமொன்றை அனுப்பியுள்ளார். அதில் இந்திய அணியின் வழிகாட்டியாக டோனி செயற்படுவதை நிறுத்தவேண்டும். அந்த முடிவை கைவிட வேண்டும். ஏனென்றால், டோனி ஏற்கனவே ஐ.பி.எல். தொடரில் சி.எஸ்.கே. அணியின் தலைவராக செயற்பட்டு வருகிறார். எனவே, உத்தரவை இரத்துச் செய்யுங்கள் எனக் கூறியுள்ளார்.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் விதிமுறைகளில் 38 (4)இன்படி ஒருவர் ஒரேநேரத்தில் இரு பதவிகளை வகிக்கக்கூடாது. டோனி சி.எஸ்.கே. அணியின் தலைவராகவும், இந்திய அணியின் வழிகாட்டியாகவும் செயற்பட முடியாது. எனவே, இதனை விசாரித்து முடிவெடுக்க வேண்டும் என சஞ்சீவ் குப்தா குறிப்பிட்டுள்ளார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7